UNIVERSAL
LIBRARY
OU_208033
UNIVERSAL
LIBRARY

# பாஞ்சாலி சபதம்

சி. சுப்பிரமணிய பாரதி

விற்பனை உரிமை:

பாரதி புத்தக நிலையம்,

மதுரை

பாரதி மலர் 2.
முதற் பதிபபு நவம்பர் 1955

மலிவுப்பதிப்பு விலை ரூ. 1–12–0
பரிசுப்பதிப்பு விலை ரூ. 2–12–0

வெளியீடு:-
கன்னித் தமிழ்ப் பதிப்பகம்,
மதுரை

# உங்களுக்கு ஒரு வார்த்தை.

பாஞ்சாலி சபதத்தின் முதற்பாகம் ஸ்ரீ. பாரதியாரால் 1912-ஆம் வருஷத்தில் வெளியிடப் பெற்றது. அதின் ஸமர்ப்பணமும் முகவுரையும் பொருள் விளக்கமும் குறிப்புகளும் இந்தப் பதிப்பில் அச்சிடப்பட்டுள்ளன. வேறு குறிப்புரையும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

பதிப்பகத்தார்.

# ஸமர்ப்பணம்

தமிழ் மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காரியங்கள் செய்யப்போகிற

## வர கவிகளுக்கும்

அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப்போகிற **பிரபுக்களுக்கும்** இந்நூலைப் பாதகாணிக்கையாகச் செலுத்துகிறேன்.

ஆசிரியன்.

# முகவுரை

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவிய மொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்க முள்ள தமிழ் மக்க ளெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.

காரியம் மிகப் பெரிது, எனது திறமை சிறிது. 'ஆசையால்,' இதனை எழுதி வெளியிடுகின்றேன், பிறருக்கு ஆதாரமாக அன்று, வழிகாட்டியாக.

இந் நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்களுடையவனாகவும், சூதில் விருப்ப மில்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும், காட்டி யிருக்கின்றேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணங்களுடையவன் என்று கருதுவோரு முளர். எனது சித்திரம் வியாச பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக, இந்நூலை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப் பென்றே கருதி விடலாம். அதாவது, 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிக மில்லை, தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி.

தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங் கட்டி நிற்கும் பராசக்தியே எனனை இத் தொழிலிலே தூண்டினா ளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந் தருவதாகும் என்றே நம்புகிறேன்.

ஓம் வந்தே மாதரம்.

**சுப்பிரமணிய பாரதி.**

# வணக்கம்

கன்னித் தமிழ்ப் பதிப்பகத்தின் வெளியீடாக கவிச் சக்ரவர்த்தி பாரதியின் பாஞ்சாலி சபதத்தைப் பெருமையுடன் வெளியிடுகின்றோம். பாரதியின் கவிதையை இன்று தமிழ்நாடு நல்ல முறையில் அறியத்தொடங்கி விட்டது. கவிச்சக்கரவர்த்தியின் கவிதை நயத்தை நாம் கூறுவதைக் காட்டிலும் கவிமணி கூறுவதைப் பாருங்கள்.

**"பாட்டுக்கொருபுலவன் பாரதி, அடா!—அவன்**
**பாட்டைப் பண்ணேடொருவன் பாடினான், அடா!**
**கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே, அடா!—அந்தக்**
**கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!**
**சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமே, அடா!—கவி**
**துள்ளும் மறியைப்போலே துள்ளுமே, அடா!**
**கல்லும் கனிந்துகனி யாகுமே, அடா!—பசுங்**
**கன்றும்பால் உண்டிடாது கேட்குமே, அடா!"**

கவிமணியின் கற்பனையில் பாரதியின் கவிதையின் இனிமையைப் பற்றிக் கூறுகின்றார், இதைக் காட்டிலும் கவிச்சக்ரவர்த்தியின் கவிதைகளுக்கு விமர்சனம் வேறு வேண்டுமா?

இந்தப் பாஞ்சாலி சபதம் அழகிய முறையில் வெளிவர உதவிய திரு. வி. ஜி. ஸ்ரீனிவாசன் B. A., L. T., அவர்களுக்கும், பல வகையில் உதவிய திரு. தேசிகன் அவர்களுக்கும் நன்றி செலுத்துகின்றோம். தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஆதரவு எங்களுக்கு இன்றுபோல் என்றும் இருக்கத் தமிழ்த்தாயை வணங்கி, **பாஞ்சாலி சபதத்தை** உங்களுக்குத் தருகின்றோம்.

மதுரை,
1—11—55.

கன்னித் தமிழ்ப் பதிப்பகத்தார்.

*

# முகவுரை

"கன்னித் தமிழ் பதிப்பகம்" தனது இரண்டாவது பாரதி மலராக "பாஞ்சாலி சபதம்" என்னும் மகா கவி பாரதியாரின் இணையில்லாக் காவியத்தை தமிழ் மக்கள் முன்பு சமர்ப்பிக்கிறது. எங்களது முதல 'பாரதி மலர்' குயிலைத் தமிழ் மக்கள் நன்கு வரவேற்று ஆதரித்தார்கள். அதற்காக முதற்கண் எமது நன்றி. இந்த ஊக்கத்தினாலேயே இந்த 'இரண்டாவது மலர்' விரைவிலேயே வெளிவருகிறது, பிழைகளைத் தவிர்த்து இயன்றவரை கவர்ச்சியுடையதாகப் "பாஞ்சாலி சபதம்" இப்பதிப்பைத் தயாரிக்க முயன்றிருக்கிறோம். இதையும் தமிழ் மக்கள் நன்கு ஆதரிப்பார்கள் என்று முற்றும் நம்புகிறோம்.

பாரதி கவிதைகளுள் நீண்ட காவியம் "பாஞ்சாலி சபதம்" நீளத்தில் மட்டுமல்லாது மற்றெல்லாச் சிறப்புக்களிலும் இது இணையற்ற காவியம்.

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல" என்ற உயர்ந்தலட்சியங்கொண்டு வாழ்ந்த புரட்சிக் கவியரசர் பாரதி ஒரு பழைய புராணககதையைப் பாடுவானேன்? அதிலும் பாஞசாலியை அவமானப்படுத்தும் பகுதியையா பாட வேண்டும்?.

"**குணமென்னும் குன்றேறி நின்ற**" தருமன் வெகுண்டிருந்தால், தெய்வம் முன்னே நின்று எதிர்த்தாலும் சீறியடிக்கும் திறல் வீமன் முனைந்திருந்தால், சிங்க மறவர் தம்முள்ளே வில் தேர்ச்சியிலே நிகரில்லாத பார்த்தன் காண்டீபத்தை வளைத்திருந்தால், பாஞ்சாலியை நீசன் பற்றிபிழுத்துவரல் நிகழ்ந்திருக்குமா? இத்தகைய வீர புருடர்கள் ஐவரைக் கணவர்களாக அடைந்திருந்தும் பாஞ்சாலி அனாதைபோல் சபையில் அழுது கதறினாள்.

ஏன்? இந்தக் கேள்விக்கு விடையே பாரதியாரை இக் கதையைப் பாடும்படி தூண்டியிருக்கலா மல்லவா?

"வீரர் முப்பத்திரெண்டுகோடி விளைவித்த" பாரதத் தாயின் நிலையும் ஏறக்குறைய பாஞ்சாலியின் நிலையையே ஒத்திருந்தது அன்று. செந்தமிழ் நாட்டுப் பொருநர், கொடுந்தீக்கண் மறவர், சிந்தை துணிந்த தெலுங்கர், போரில காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டியர், பாரில் மறைவரு கீர்த்திகொள் ரஜபுத்ரவீரர் எல்லோரும் நெட்டை மரங்களென நின்று புலம்பியதலலால் செய்த தென்ன?

வீரர் பஞ்சவரிந்தும் பயன் படாத நிலையில் பாஞ்சாலியின் மானத்தைக் காத்து வாழவைக்க ஒருவர் இருந்தாரன்றோ? அவ்வண்ணமே பாரததேசந்தன்னை வாழ்விக்கவும் ஒருவன் இருக்கவேண்டுமல்லவா?

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்"
"— இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்."

ஆம்! பாஞ்சாலியின் வாழ்வு போலவே, முடிவில் பாரத நாட்டின் வாழ்விலும் ஒளி உதயமாயிற்று. இந்நாட்டை வாழ்விக்க வந்தார் காந்தி மகாத்மா!

தீர்க்கதரிசியாகிய மகாகவிஞர், நாட்டுமக்களைத் தம் போல் நரர்களென்று கருதாத மன்னர்குல மடமையை இடித்துக்காட்டவும், அரசியற் சதுரங்கத்தில் நாட்டை இழந்த மன்னர்கள் பேதமைக்கு இரங்கற்பாவாகவும், தருமம் இறுதியில வெல்லும் என்னும் இயற்கை மருமத்தை உலகங் கற்கும் கவிதைச் சங்கொலியாகவுமே, பாஞ்சாலி சபதத்தைப் பாடினார். அரசாங்கத்தின் அடக்கு முறையையும் பாரதியாருக்கு இருந்த இதர இடைஞ்சல்களையும் கருத்திருத்தி இக்காவியத்தை நோக்கினால் இதை அவர்பாடியதின் அவசியமும் மேன்மையும் மேலும் விளங்கும். இமைப்பொழுதும் சோராத கவிதைத் தொழிலாளி எங்ஙனம் வாளாவிருக்க முடியும்.

தெளிவுறவே அறிந்து, தெளிவுதர மொழியப்பட்ட காவியம் இது. **சிந்திப் பார்க்கே** களிவளர உள்ளத்தில் ஆனந்தக்கனவு பல காட்டுவது இது கண்ணீர்த் துளிவர உள்ளுருக்கும் காவியம் "**பாஞ்சாலி சபதம்**". மக்கள் விரும்பும் மெட்டுக்களால் ஆனது.

ஹஸ்தினபுரத்து வர்ணனை, துரியோதனனது சபை, அன்னோன் பொறாமைப்படும் வாயிலாக பாண்டவர் இயற்றிய ராஜசூயயாகச் சிறப்பை வர்ணிக்கும் அழகு எல்லாவற்றையும் கண்டு மகிழ்ந்து வருகையிலேயே நாம் ஒன்று நினைக்கிறோம். அதாவது, உண்மையிலேயே துரியோதனனது பொறாமை மட்டும்தானா பின் விளைவுகளுக்கு முக்கிய காரணம்?

**ஏச்சையும் அங்கவர் கொண்ட**
**நகைப்பையும் எண்ணுவாய்;—அந்த**
**ஏந்திழை யாளும் எனைச் சிரித்**
**தாளிதை எண்ணுவாய்;**

மன்னன் துரியோதனன் ராஜசூய யாகத்திற்குச் சென்றிருந்த பொழுது, மர்மமாக அமைத்திருந்த மண்டபம் ஒன்றுள் நுழைந்து, நீர் நிலைகளையும், வாயிற்படிகளையும் கண்டு நடக்காமல தட்டுத்தடுமாறி விழுந்து விழுந்து எழுந்தான். இதைக்கண்ட "**துப்பிதழ் மைத்துனி**" பாஞ்சாலி சிரித்தாள். ஏற்கனவே பொறாமைபால வெம்பியிருந்த துரியோதனனது மனம் ஏந்திழையின் சிரிப்பாலே மேலும் கனன்றது.

சகுனியும் கண்ணிலாத திருதராட்டிரன் முன்பு இந்தச் சிரிப்பையே குறிப்பிடுகிறான்.

**வாள்விழி மாதரும் நம்மையே—கய**
**மக்களென் றெண்ணி நகைத்திட்டார்.**

இக்கருத்தின் மறுஒலியை சூதில் பாஞ்சாலி வசமான பின்னரும் கேட்கிறோம் துரியோதனன் சொல்கிறான்:—

**என் துயர் தீர்த்தா யடா!—உயிர் மாமனே!**
**ஏளனந் தீர்த்து விட்டாய்!**
**அன்று நகைத்தா ளடா!—உயிர் மாமனே!**
**அவளை என் ஆளாக்கி னாய்!**

பாரத மண்ணிலே மன்னர்களிடையே நிகழ்ந்த முதல் பெரும் போருக்கு வித்தான இந்த நிகழ்ச்சியைப் பின்னணியாகக் கொண்ட பகுதியைப் பாரதியார் தமது அமர காவியமாக ஆக்கினார். மூலம் ஆன வியாச பாரதத்தை ஒட்டியே கதை போனாலும் பாத்திரங்களெல்லாம் —திருதராஷ்டிரன் முதல் தேரோட்டிவரை — பாரதி முத்திரை பெற்றே விளங்குகின்றன. காவியத்திற்குத் தலைப்பே இதை மெய்ப்பிக்கும்.

" திரௌபதி மானஸம்ரக்ஷணம் " என்பது தலைப்பல்ல! " பாஞ்சாலி சபதம் " என்பது தலைப்பு!

" தோள் கண்டார் தோளே கண்டார் " என்ற முறையிலே ஒவ்வொரு முக்கிய பாத்திரங்களைக் காணும்போதும் அப்பாத்திரத்தைப் பாரதி சித்தரிக்கும் அழகிலேயே லயித்திருக்கத் தோன்றுகிறது.

"அந்த ஏந்திழையாள் எனைச் சிரித்திட்டாள்" என்கிறான் துரியோதனன். இதையே சகுனியோ " வாள் விழி மாதரும் நம்மை கயமக்களென்று எண்ணி நகைத்திட்டார்" என்று அந்த நகைப்பு திருதராஷ்டிரனையும் பாதிப்பதாக உரைக்கிறான். ஆனால் திருதராஷ்டிரன்

"தவறி விழுபவர் தம்மையே—பெற்ற
தாயுஞ் சிரித்தல் மரபன்றோ ?"

என்று கேட்கிறான்.

"—வெறும்
அவல மொழிகள் அளப்பதேன்?—தொழில்
ஆயிர முண்டவை செய்குவீர்,"

என்றும் மதிப்புரை பாடுகிறான். திருதராட்டிரன்—வெற்றிவேற்கை பரதர் தம் கோமான்—மேன்மை கொண்ட விழி அகத்தே யுள்ளவன்; மற்றோர் விழியாகப் பெற்றி மிக்க விதுரன் அறிவைக் கருதுபவன்; முகத்தே யிரு புண்ணுடையனல்லன்; உண்மையிலேயே கண்ணுடையவன். என்றாலும் தன் மக்களிடம் சால அன்பு கொண்டவன். ஆகவே முற்றும் உணர்ந்தவனாய்.

விதி ! விதி ! விதி ! மகனே! – இனி
வேறெது சொல்லுவன், அட மகனே

என்று சூதுக்கு அனுமதி கொடுக்கிறான்.

சூதுக் களியாட மண்டபம் கட்டினார். அதுவும் நம் கண் முன்பே எழுந்து நிற்கிறது.

**" வல்லவன் ஆக்கிய சித்திரம் போலும்**
**வண்மைக் கவிஞர் கனவினைப் போலும் "**
**" சொல்லை யிசைத்துப் பிறர்செயு மாறே**
**சுந்தர மாமொரு காப்பியஞ் செய்தார்."**

கவியரசர் பாரதியார் மறைந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் அவருக்கு மணி மண்டபம் எழுப்பிய தமிழ் மக்கள் பாரதியார் தம் சுந்தரப்பாவாலே எழுப்பும் இக் களி மண்டபத்தின் அழகையும் கண்டு வியப்பார்களாக!

பாண்டவரை அழைக்க விதுரன் தூது போகிறான். போகும் வழியிலே நாட்டு வளப்பத்தையும் கண்டு மகிழ்கிறான்—வர்ணிக்கிறான். முடிவில ஏங்குகிறான்;

**" தொல்லுலகின் முடிமணிபோல் தோன்றும் நாடு**
**பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்**
**பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே !"**

என்று வெதும்புகிறான். பின்னாலே சூதில் நாட்டைப பணயமாக வைத்தல் குறித்தவுடனே விதுரன் திருதராஷ்டிரனிடம் " ஏ கண்ணில்லாத மன்றா! கேட்குங் காதும் இழந்து விட்டாயோ? தொலைத்துத் தலை முழுகு துரியோதனனை ! "

**" நரியை விற்றுப் புலிகளைக் கொள்வாய்;**
**மோட்டுக் கூகையைக் காக்கையை விற்று**
**மொய்ம்பு சான்ற மயில்களைக் கொள்வாய் !"**

என்கிறான் துணிவாக. துரியோதனனிடம் சொல்லுகிறான் விதுரன்,

**" சென்றாலும் இருந்தாலும் இனிஎன் னேடா ?**
**செய்கை நெறி அறியாத சிறியாய் "**

இத்தகைய துணிவுடனே ஒரு சில உண்மைத் தேச பக்தர்களை யொப்ப சூதையும் பெரும் போரையும் தடுக்க முயன்ற விதுரனைப் " பொல்லாத விதி புறங்கண்டான்."

சூதிலே நாட்டையிழந்த கட்டத்தைப் பாரதியார் தமக்கே உரிய வன்மையுடன் பாடுகிறார். கோவில் குருக்கள் பூஜை செய்யும் சிலையையும், வாயிற் காப்போன் வீட்டையும் சூதாடித் தோற்றால் எப்படியோ அவ் வண்ணமே எவ்வித உரிமையும் இல்லாத தருமன் நாட்டை வைத்திழந்தான்.

நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல்
நரர்க ளென்று கருதார்;
ஆட்டு மந்தை யாமென்—றுலகை
அரச ரெண்ணி விட்டார்."

தருமமே உருவான யுதிஷ்டிரன்

"தேயம் வைத் திழந்தான்;—சீச்சீ!
சிறியர் செய்கை செய்தான்."

தேசபக்திக் கனலை உமிழும் கவிஞன் பாரதி தான் இதைச் சொல்ல இயலும். துரியோதனன் சொல்கிறான் தருமனைப் பற்றி;

"கிழவியர் தபசியர் போல்—பழங்
கிளிக்கதை படிப்பவன், பொறுமையென்றும்
பழவினை முடிவென் றும்—சொல்லிப்
பதுங்கிநிற் போன், மறத்தன்மையி லான்,
வழவழத் தருமனுக்கோ—இந்த
மாநில மன்னவர் தலைமைதந் தார்?"

இதை விடத பிரமாதம் பீமன் பேச்சு!

"தவறு செய்து விட்டாய்;—அண்ணே!
தருமங் கொன்று விட்டாய்."

தரும புத்ரனைப்பற்றித் தம்பி வீமன் தீர்ப்பு! இவை யெல்லாம் பாரதியால் தருமன் எனும் பாத்திரத்தை எவ்வளவு தூரம் ரசித்திருக்கிறார் என்று காட்டுகின்றன!

வீமனைத் தருமன் குறிப்பிடும்போது "எங்கள் ஆட்சிக்கு வேர் போன்றவன்", என்றும்

—"ஒரு
தெய்வம்முன் னேநின் றெதிர்ப்பினும்—நின்று
சீறி அடிக்கும் திறலன்"

என்றும் புகழ்கிறான். தம்பியரைச் சூதில் பணயம் வை என்று சகுனி சொல்லுகிறான்!

" வீமன் மூச்சு விட்டான்—முழையில்
வெய்ய நாகம் போலே "

வீரத்தின் விளை நிலம் போன்ற வீமன் சபதம் செய்யும்பொழுது தன் கண் முன்னலேயே இணையற்ற துணிவுடன் பாஞ்சாலியைப் பற்றியிழுத்த துச்சாதனனை வியக்காமல் இருக்க இயலவில்லை. " தம்பி சூரத் துச்சாதனன் " என்று அடைமொழி கொடுக்கிறுன். ஆனல் துரியோதனனை " நாணமற்ற நாய்மகன் " என்று விளிக்கிறுன். வீமனது சபதத்திற்குப் பாரதி தன் முத்திரையை—பராசக்தி முத்திரையையே—அளிக்கிறுர்.

" தடையற்ற தெய்வத்தின் வார்த்தை,—இது
சாதனை செய்க, பராசக்தி! என்றுன்."

தாமே வீமனுக நின்று சபதம் கூறுவதாய்த் தோன்றவில்லையா?

மிக முக்யமான பாத்திரமே பாஞ்சாலி; பாரதி தன் வன்மை முழுதும் காட்டிச் சித்திரிக்கிறுர். இக் காவியத்தில் முதல முதல் பாஞ்சாலி, தூய தேச பக்தன் விதுரனை வணங்குவதற்காக நம் கண்முன்பு வெள்கி, தலை குனிந்து வந்தெய்துகிறுள்; துருபதன் செல்வப்.

" அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்ததொர் மாமன் அடிக்கண்
வைத்து வணங்கி வனப்புற நின்றுள்."

மறுபடி நாம் பாஞ்சாலியை பார்த்தனுடைய காதலியாக ஒருயிரும் ஈருடலுமாக இணைந்து அந்தி மயங்கும் அழகை வியக்கும் நிலையிலே சந்திக்கிறேம்.

முடிவிலே நாம் பாஞ்சாலியைச் சூதில் அடிமையான பின்னரே பார்க்கிறோம். தேர்ப்பாகன் போய் அழைக்கிறுன் சபைக்கு வருமாறு; பாஞ்சாலி கேட்கிறுள்:

" யார் சொன்ன வாத்தையடா!

சூதர் சபைதனில் தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா "?

தன்னைத் தான் தோற்ற பின்பு என்னை சூதில் பணயம் வைக்க அவருக்கு என்ன உரிமை?

" அவர்

தாயத்திலே விலைப்பட்டவர்;—புவி
தாங்குந் துருபதன் கன்னி நான் ",

இந்த வினாக்களுக்கு விடையிறுக்க இயலாத துரியோதனன், 'சூரத் தம்பி' துச்சாதனனை ஏவுகிறான்.

துச்சாதனனுக்கும் பாஞ்சாலிக்கும் நடக்குஞ் சொற் போர் வியத்தற்குரியது சபையில பாஞ்சாலி முது பெருங் கிழவன் பீஷ்மருக்கு—பிதாமகருக்கு—ஒரு நற் சாட்சிப் பத்திரம் வழங்குகிறாள்.

" பேயரசு செய்தால், பிணந் தின்னும் சாத்திரங்கள் " பாரதி கனவில் கண்ட புதுமைப் பெண்ணே பாஞ்சாலி!

அன்னை பாஞ்சாலி—" நிலத்திரு "—

கேடுற்ற மன்னர் அறங்கெட்ட சபையிலே நின்ற நிலையைப் பாருங்கள்,

" ஆடை குலைவுற்று நிற்கிறாள்;—அவள்
ஆவென் றழுது துடிக்கிறாள்—வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன்—அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கிறான் "

மேலும்

துச்சா தனன் எழுந்தே—அன்னை
துகிலினை மன்றிடை யுரித லுற்றான்

அன்னை! ஆம்! அன்னை!! உட்சோதியிற் கலந்தாள். மனித சக்திகளால் பயனற்றுப்போன நிலையில் கடவுளுடன் ஒருமையுற்றாள். தன்னை நாணழியாது காத்திடுமாறு ஹரியின் பதமலரைச் சரணடைந்தாள்.

புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைகளாய்த் துகிற் கூட்டம் வளர்ந்தன, வளர்ந்தன, தொழும்பத் துச்சா தனன் வீழ மட்டும் வளர்ந்தனவே.

தேவர்கள் பூச்சொரிந் தார்—'ஓம்
ஜெய ஜெய பாரதசக்தி' என்றே

முடிவிலே பாஞ்சாலியின் சபதம்!

இக் காவியத்தின் பாத்திரங்களை ரசிக்கிறோம். மேலும் "மாலை வருணனை," "நாட்டை வைத்தாடுதல்" "துரௌபதியை மன்றுக்கு அழைத்துவரச் சொல்லியது பற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம். இது போன்ற மற்ற கட்டங்களெல்லாம் உயர்ந்த காவிய ரசனைக்குகந்தவை.

இந்தப் பதிப்புரையை இன்று நாம் எழுதுகிறோமென்றால் இதற்கு மூலகாரணம் ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நாம் கேட்ட ஒரு வானொலிச் சொற்பொழிவு! "பாஞ்சாலி சபதத்தை" விசேஷ சிரத்தையுடன் படிக்கும் ஆர்வத்தை ஊட்டி எம்மை உய்வித்த அந்தச் சொற்பொழிவை நிகழ்த்தியவர் திரு. திருலோக-சீதாராம் அவர்கள். எம் நன்றியைச் சொந்த முறையில் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம் கடமை தவறாதிருப்பதற்காக!

புதிதாக பாஞ்சாலி சபதத்தைப் படிப்பவர்களுக்கு இந்தப் பதிப்புரை ஏதேனும் ஒரு வகையில் உதவினால் நாங்கள் பயனடைந்தவர்களாவோம்,

தூ. தேசிகன்.

# பொருளடக்கம்.


பக்கம்.

## முதற் பாகம்

பிரம ஸ்துதி ... 9

ஸரஸ்வதி வணக்கம் ... 10

## முதலாவது: அழைப்புச் சருக்கம்

ஹஸ்தினாபுரம் ... 11

துரியோதனன் ஸபை ... 14

துரியோதனன் பொறாமை ... 15

துரியோதனன் சகுனியிடம் சொல்வது ... 23

சகுனியின் சதி ... 30

சகுனி திரிதராட்டிரனிடம் சொல்லுதல் ... 32

திரிதராட்டிரன் பதிற் கூறுதல் ... 36

துரியோதனன் சினங் கொள்ளுதல் ... 40

துரியோதனன் தீமொழி ... 41

திரிதராட்டிரன் பதில் ... 43

துரியோதனன் பதில் ... 45

திரிதராட்டிரன் ஸம்மதித்தல் ... 48

சபா நிர்மாணம் ... 49

விதுரனைத் தூது விடல் ... 50

விதுரன் தூது செல்லுதல் ... 51

விதுரனை வரவேற்றல் ... 53

பக்கம்.

விதுரன் அழைத்தல் ... 54
தருமபுத்திரன் பதில் ... 55
விதுரன் பதில் ... 56
தருமபுத்திரன் தீர்மானம் ... 57
வீமனுடைய வீரப்பேச்சு ... 58
தருமபுத்திரன் முடிவுரை ... 59
நால்வரும் ஸம்மதித்தல ... 61
பாண்டவர் பயணமாதல ... 62
மாலை வருணனை ... 63

## இரண்டாவது: சூதாட்டச் சருக்கம்

வாணியை வேண்டுதல் ... 67
பாண்டவர் வரவேற்பு ... 67
பாண்டவர் சபைக்கு வருதல் ... 70
சூதுக் கழைத்தல் ... 70
தருமன் மறுத்தல் ... 71
சகுனியின் ஏச்சு ... 72
தருமனின் பதில் ... 73
சகுனி வல்லுக்'கழைத்தல் ... 74
தருமன் இணங்குதல் ... 75
சூதாடல் ... 77
நாட்டை வைத்தாடுதல் ... 82

## இரண்டாம் பாகம்

பராசக்தி வணக்கம் ... 86
ஸரஸ்வதி வணக்கம் ... '86

பக்கம்.

## மூன்றாவது: அடிமைச் சருக்கம்


விதுரன் சொல்லியதற்குத் துரியோதனன் மறுமொழி சொல்லுதல் ... 87
விதுரன் சொல்வது ... 89
சூது மீட்டுந் தொடங்குதல் ... 90
சகுனி சொல்வது ... 92
ஸஹாதேவனைப் பந்தயங் கூறுதல் ... 94
நகுலனை யிழத்தல் ... 94
பார்த்தனை யிழத்தல் ... 95
வீமனை இழத்தல் ... 96
தருமன் தன்னைத்தானே பணயம் வைத்திழத்தல் ... 97
துரியோதனன் சொல்வது ... 98
சகுனி சொல்வது ... 98


## நான்காவது: துகிலுரிதற் சருக்கம்


திரௌபதியை இழத்தல் ... 100
திரௌபதி சூதில் வசமானது பற்றிக் கௌரவர் கொண்ட மகிழ்ச்சி ... 101
துரியோதனன் சொல்வது ... 102
திரௌபதியைத் துரியோதனன் மன்றுக்கு அழைத்து வரச் சொல்லியது பற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம் ... 103
துரியோதனன் விதுரனை நோக்கி யுரைப்பது ... 104
விதுரன் சொல்வது ... 105
துரியோதனன் சொல்வது ... 108
திரௌபதி சொல்லுதல் ... 109
துரியோதனன் சொல்வது ... 111

பக்கம்.

## ஐந்தாவது: சபதச் சருக்கம்

துச்சாதனன் திரௌபதியை ஸபைக்குக் கொணர்தல் ... 113
திரௌபதிக்கும் துச்சாதனனுக்கும் ஸம்வாதம் ... 114
ஸபையில் திரௌபதி நீதி கேட்டழுதல் ... 116
வீட்டுமாசார்யன் சொல்வது ... 117
திரௌபதி சொல்வது ... 118
வீமன் சொல்வது ... 119
அர்ஜுனன் சொல்வது ... 121
விகர்ணன் சொல்வது ... 122
கர்ணன் பதில் ... 123
திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை ... 124
வீமன் செய்த சபதம் ... 128
அர்ஜுனன் சபதம் ... 129
பாஞ்சாலி சபதம் ... 130
பொருள் விளக்கமும் குறிப்புகளும் ... 131
குறிப்புரை ... 147

ஓம் சக்தி.

# பாஞ்சாலி சபதம்

## பிரம ஸ்துதி.

ஓமெனப் பெரியோர்கள்—என்றும்
ஓதுவ தாய், வினை மோதுவ தாய்,
தீமைகள் மாய்ப்பது வாய்,—துயர்
தேய்ப்பது வாய், நலம் வாய்ப்பது வாய்,
நாமமு முருவு மற்றே—மனம்
நா டரிதாய்ப் புந்தி தேடரிதாய்,
ஆமெனும் பொரு ளனைத் தாய்,—வெறும்
அறி வுட னாநந்த வியல் புடைத் தாய் (1)

நின்றிடும் பிரம மென்பார்;—அந்த
நிர்மலப் பொருளினை நினைந்திடுவேன்,
நன்று செய் தவம் யோகம்—சிவ
ஞானமும் பக்தியு நணுகிடவே,
வென்றி கொள் சிவ சக்தி—எனை
மே வுறவே, இருள் சா வுறவே,
இன் றமிழ் நூ லிது தான்—புகழ்
ஏய்ந் தினிதா யென்று மிலகிடவே. (2)

## ஸரஸ்வதி வணக்கம்.

வெள்ளைக் கமலத்திலே—அவள்
வீற்றிருப்பாள், புக ழேற்றிருப்பாள்,
கொள்ளைக் கனி யிசை தான்—நன்கு
கொட்டு நல் யாழினைக் கொண்டிருப்பாள்,
கள்ளைக் கட லமுதை—நிகர்
கண்ட தொர் பூந் தமிழ்க் கவி சொலவே
பிள்ளைப் பருவத்திலே—எனைப்
பேண வந்தா ளருள் பூண வந்தாள். (3)

வேதத் திரு விழியாள்,—அதில்
மிக்க பல் லுரை யெனுங் கருமை யிட்டாள்,
சீதக் கதிர் மதியே—நுதல்
சிந்தனையே குழ லென் றுடையாள்,
வாதத் தருக்க மெனுஞ்—செவி
வாய்ந்த நற் றுணி வெனுந் தோ டணிந்தாள்,
போத மென் னாசி யினாள்,—நலம்
பொங்கு பல் சாத்திர வா யுடையாள், (4)

கற்பனைத் தே னிதழாள்,—சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையினாள்,
சிற்ப முதற் கலைகள்—பல
தே மலர்க் கர மெனத் திகழ்ந்திருப்பாள்,
சொற் படு நய மறிவார்—இசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவை யறிவார்
விற்பனத் தமிழ்ப் புலவோர்—அந்த
மேலவர் நா வெனு மலர்ப் பதத்தாள்: (5)

வாணியைச் சரண் புகுந்தேன்;—அருள்
வாக் களிப்பாளெனத் திட மிகுந்தேன்;
பேணிய பெருந் தவத்தாள்,—நிலம்
பெயரளவும் பெயர் பெய ராதாள்,
பூணியல் மார் பகத்தாள்,—ஐவர்
பூவை, திரௌபதி புகழ்க் கதையை
மாணியல் தமிழ்ப் பாட்டால்—நான்
வகுத் திடக் கலைமகள் வாழ்த்துகவே. (6)

## முதலாவது—அழைப்புச் சருக்கம்.

### ஹஸ்தினாபுரம்.

அத்தின புர முண்டாம்;—இவ்
வவனியிலே யதற் கிணை யிலையாம்;
பத்தியில் வீதிக ளாம்;—வெள்ளைப்
பனி வரை போற் பல மாளிகை யாம்;
முத் தொளிர் மாடங்க ளாம்;—எங்கு
மொய்த் தளி சூழ் மலர்ச் சோலைகளாம்;
நத் தியல் வாவிக ளாம்;—அங்கு
நாடு மி ரதி நிகர் தேவி களாம்; (7)

அந்தணர் வீதிகளாம்;—மறை
யாதிகளாம் கலைச் சோதிகளாம்;
செந் தழல வேள்விக ளாம்;—மிகச்
சீர் பெறுஞ் சாத்திரக் கேள்விக ளாம்;
மந்திர கீதங்க ளாம்;—தர்க்க
வாதங்க ளாம்; தவ நீதங்க ளாம்;

சிந்தையி லற முண்டாம்;—எனிற்
சேர்ந்திடுங் கலிசெயு மறமு முண்டாம். (8)
மெய்த் தவர் பல ருண்டாம்;—வெறும்
வேடங்கள் பூண்டவர் பலரு முண்டாம்;
உய்த் திடு சிவ ஞானங்—கனிந்
தோர்ந் திடு மே லவர் பல ருண் டாம்;
பொய்த்த விந்திர சாலம்—நிகர்
பூசையுங் கிரியையும் புலை நடையும்
கைத் திடு பொய்ம் மொழியும்—கொண்டு
கண் மயக்காற் பிழைப்போர் பல ராம். (9)
மாலைகள் புரண் டசையும்—பெரு
வரை யெனத் திரண்டவன் றோ ளுடையார்,
வேலையும் வாளினையும்—நெடு
வில்லையுந் தண்டையும் விரும்பிடுவார்,
காலை யு மாலையிலும்—பகை
காய்ந்திடு தொழில் பல பழகி வெம் போர்
நூலையுந் தேர்ச்சி கொள்வோர்,—கரி
நூறினைத் தனி நின்று நொறுக்க வல்லார், (10)
ஆரிய வேன் மறவர்,—புவி
யாளுமொர் கடுந் தொழி லினி துணர்ந்தோர்,
சீரியல் மதி முகத்தார்—மணித்
தே னித ழமு தென நுகர்ந்திடுவார்,
வேரி யங் கள் ளருந்தி—எங்கும்
வெம் மத யானைக ளெனத் திரிவார்,
பாரினி லிந்திரர் போல்—வளர்
பார்த்திவர் வீதிகள் பாடுவமே. (11)

நல் லிசை முழக்கங்க ளாம்;--பல
நாட்டிய மாதர் தம் பழக்கங்க ளாம்;
தொல் லிசைக் காவியங்கள்—அருந்
தொழி லுணர் சிற்பர் செ யோவியங்கள்
கொல்லிசை வாரணங்கள்—கடுங்
குதிரைக ளொடு பெருந் தேர்க ளுண் டாம்;
மல் லிசை போர்களுண் டாம்;—திரள்
வாய்ந் திவை பார்த் திடு வோர்க ளுண்டாம். (12)

எண்ணரு கனி வகையும்—இவை
இலகி நல்லொளி தரும் பணி வகையும்,
தண் ணறுஞ் சாந்தங்களும்--மலர்த்
தார்களு மலர் விழிக் காந்தங்களும்
சுண்ணமு நறும் புகையும்—சுரர்
துய்ப்பதற் குரிய பல் பண்டங்களும்
உண்ண நற் கனி வகையும்—களி
யுவகையுங் கேளியு மோங்கினவே. (13)

சிவ னுடை நண்பனென்பார்,—வட
திசைக் கதி பதி யளகேச னென்பார்,
அவ னுடைப் பெருஞ் செல்வம்—இவர்
ஆவ ணந் தொறும் புகுந் திருப்பது வாம்;
தவ னுடை வணிகர்களும்—பல
தர னுடைத் தொழில் செயு மா சனமும்
எவ னுடைப் பயமுமிலா—தினி
திருந் திடுந் தன்மையை தெழி னகரே. (14)

## துரியோதனன் ஸபை.

கன்னங் கரியது வாய்—அகல
காட்சிய தாய் மிகு மாட்சிய தாய்
துன்னற் கினியது வாய்—நல்ல
சுவைதரு நீருடை யமுனையெனும்
வன்னத் திரு நதியின்—பொன்
மருங்கிடைத் திகழ்ந்த வம் மணிநகரில்,
மன்னவர் தங் கோமான்—புகழ்
வாளரவக் கொடி யுயர்த்து நின்றான். (15)

துரியோதனப் பெயரான்,—நெஞ்சத்
துணி வுடையான், முடி பணி வறியான்,
'கரி யோ ராயிரத்தின்—வலி
காட்டிடுவோன்' என்றக் கவிஞர்பிரான்
பெரி யோன் வேத முனி—அன்று
பேசிடும் படி திகழ் தோள் வலி யோன்,
உரியோர் தாமெனினும்—பகைக்
குரியோர் தமக்கு வெந் தீ யனையான், (16)

தந்தை சொல் நெறிப்படியே,—இந்தத்
தடந் தோள் மன்னவ னரசிருந்தான்.
மந்திர முணர் பெரியோர்—பலர்
வாய்ந்திருந்தா ரவன் சபை தனிலே,
அந்த மில் புகழுடையான்,—அந்த
ஆரிய வீட்டுமன், அற மறிந்தோன்,
வந்தனை பெறுங் குரவோர்—பழ
மறைக்குல மறவர்க ளிருவ ரொடே, (17)

மெய்ந் நெறி யுணர் விதுரன்—இனி
வேறு பல் லமைச்சரும் விளங்கி நின்றார்;
பொய்ந் நெறித் தம்பியரும்— அந்தப்
புலை நடைச் சகுனியும் புற மிருந்தார்;
மைந் நெறி வான் கொடை யான்,—உயர்
மானமும் வீர மு மதியு முளோன்,
உய்ந் நெறி யறியா தான்—இறைக்
குயிர் நிகர் கன்னனு முட னிருந்தான். (18)

## துரியோதனன் பொறாமை.

### வேறு.

எண் ணிலாத பொருளின் குவையும்
யாங்கணுஞ் செலுஞ் சக்கர மாண்பும்
பண்ணி லார்க்கும் பெற லரிதா மோர்
வார் கடற் பெருஞ் சேனையு மாங்கே
விண்ணி லிந்திரன் துய்ப்பன போன்று
வேண்டு மின்பமும் பெற்றவ னேனும்
கண் ணிலாத் திரிதாட்டிரன் மைந்தன்
காய்ந்த நெஞ் சுடனெண்ணுவ கேளீர். (19)

### வேறு.

'பாண்டவர் முடி யுயர்த்தே—இந்தப்
பா மிசை யுல விடு நாள் வரை, நான்
ஆண்ட தொ ரர சாமோ?—என
தான்மையும் புகழு மோர் பொரு ளாமோ?

காண் டகு வில் லுடையோன்—அந்தக்
காளை யருச்சுனன் கண்களிலும்
மாண் டகு திறல் வீமன்—தட
மார்பிலு மென திகழ் வரைந் துளதே ! (20)

'பாரத நாட்டி லுள்ள—முடிப்
பார்த்திவர் யார்க்கு மோர் பதி யென்றே
நாரதன் முதன் முனிவோர்—வந்து
நாட் டிடத் தரும னவ் வேள்வி செய்தான்;
சோரனவ் வெது குலத்தான்—சொலுஞ்
சூழ்ச்சியுந் தம்பியர் தோள் வலியும்
வீர மிலாத் தருமன்—தனை
வேந்தர் தம் முத லென விதித்தனவே. (21)

'ஆயிர முடி வேந்தர்—பதி
னாயிர மாயிரங் குறு நிலத்தார்
மா யிருந் திறை கொணர்ந்தே—அங்கு
வைத்த தோர் வரிசையை மறந்திடவோ ?
தூ யிழை யாடைகளும்—மணித்
தொடையலும் பொன்னு மோர் தொகைப் படுமோ?
சே யிழை மடவாரும்—பரித்
தேர்களுங் கொடுத்தவர் சிறு தொகையோ? (22)

'ஆணிப் பொற் கலசங்களும்—ரவி
யன்ன நல் வயிரத்தின் மகுடங்களும்
மாணிக்கக் குவியல்களும்—பச்சை
மரகதத் திரளு நன் முத்துக்களும்

பூ ணிட்ட திரு மணி தாம்—பல
புதுப் புது வகைகளிற் பொலிவனவும்
காணிக்கை யாக் கொணர்ந்தார்;—அந்தக்
காட்சியை மறப்பது மெளி தாமோ? (23)

'நால் வகைப் பசும் பொன்னும்—ஒரு
நா லாயிர வகைப் பணக் குவையும்
வேல் வகை வில் வகையும்—அம்பு
விதங்களுந் தூணியும் வாள் வகையும்
சூல் வகை தடி வகையும்—பல
தொனி செயும் பறைகளுங் கொணர்ந்து வைத்தே,
பால் வளர் மன்னவர் தாம்—அங்கு
பணிந்ததை யென் னுள மறந் திடுமோ? (24)

'கிழவியர் தபசியர் போல்—பழங்
கிளிக் கதை படிப்பவன், பொறுமை யென்றும்
பழ வினை முடிவென்றும்—சொலிப்
பதுங்கி நிற்போன், மறத் தன்மை யிலான்,
வழ வழத் தருமனுக்கோ—இந்த
மா நில மன்னவர் தலைமை தந்தார்?
முழவினைக் கொடி கொண்டான்—புவி
முழுதையுந் தனியே குடிகொண்டான். (25)

'தம்பியர் தோள் வலி யால்—இவன்
சக்கர வர்த்தி யென் றுயர்ந்ததுவும்,
வெம் பிடு மத கரியான்—புகழ்
வேள்வி செய் தந்நிலை முழக்கியதும்,

அம் புவி மன்னரெலாம்—இவன்
ஆணை தஞ் சிரத்தினி லணிந்தவராய்
நம் பரும் பெருஞ் செல்வம்—இவன்
நலங் கிளர் சபையினிற் பொழிந்ததுவும் (26)

'எப்படிப் பொறுத்திடுவேன்?—இவன்
இளமையின் வளமைக ளறிகிலேனோ?
குப்பை கொலோ முத்தும்?—அந்தக்
குரைகட லிலத் தவர் கொணர்ந்து பெய்தார்;
சிப்பியும் பவளங்களும்—ஒளி
திரண்ட வெண் சங்கத்தின் குவியல்களும்
ஒப்பில் வைடூரிய மும்—கொடுத்
தொதுங்கி நின்றா ரிவ னொருவனுக் கே. (27)

'மலை நா டுடைய மன்னர்—பல
மான் கொணர்ந்தார், புதுத் தேன் கொணர்ந்தார்,
கொலை நால்வாய் கொணர்ந்தார்,—மலைக்
குதிரை யும் பன்றியுங் கொணர்ந்து தந்தார்;
கலை மான் கொம்புகளும்—பெருங்
களி றுடைத் தந்தமுங் கவரிகளும்
விலை யார் தோல் வகையும்—கொண்டு
மேலும் பொன் வைத் தங்கு வணங்கி நின்றார். (28)

'செந் நிறத் தோல், கருந் தோல்,—அந்தத்
திரு வளர் கதலியின் தோலுடனே
வெந் நிறப் புலித் தோல்கள்,—பல
வேழங்க ளாடுக ளிவற் றுடைத் தோல்,

பன்னிற மயி ருடைகள்,—விலை
பக ரரும் பறவைகள், விலங் கினங்கள்,
பொன் னிறப் பாஞ்சாலி—மகிழ்
பூத்திடுஞ் சந்தன மகில் வகைகள், (29)

‘ஏலங் கருப்பூரம்—நறும்
இலவங்கம் பாக்கு நற்சாதி வகை,
கோலம் பெறக் கொணர்ந்தே—அவர்
கொட்டி நின்றார், கரங் கட்டிநின்றார்;
மேலுந் தலத்தி லுள—பல
வேந்த ரப் பாண்டவர் விழைந் திடவே
ஓலந் தரக் கொணர்ந்தே—வைத்த
தொவ் வொன்று மென் மனத் துறைந்ததுவே. (30)

‘மாலைகள் பொன் னு முத்தும்—மணி
வகைகளிற் புனைந்தவுங் கொணர்ந்து பெய்தார்;
சேலைகள் நூறு வன்னம்—பல
சித்திரத் தொழில் வகை சேர்ந்தன வாய்
சாலவும் பொன் னிழைத்தே—தெய்வத்
தையலர் விழைவன பலர் கொணர்ந்தார்;
கோல நற் பட்டுக்களின்—வகை
கூறுவதோ? எண்ணி லேறுவதோ? (31)

‘கழல்களுங் கடகங்களும்—மணிக்
கவசமு மகுடமுங் கணக் கில வாம்;
நிழ னிறப் பரி பலவும்—செந்
நிறத்தன பலவும் வெண் ணிறம் பலவும்

தழ னிற மேக நிறம்—விண்ணிற்
சாரு மிந்திர வில்லை நேரு நிறம்
அழகிய கிளி வயிற்றின்—வண்ணம்
ஆர்ந்தன வாய்ப் பணி சேர்ந்தனவாய் (32)

'காற் றெனச் செல்வன வாய்,—இவை
கடிதுகைத் திடுந்திறன் மறவ ரோடே,
போற்றிய கையின ராய்ப்—பல
புரவலர் கொணர்ந் தவன் சபை புகுந்தார்.
சீற்ற வன் போர் யானை—மன்னர்
சேர்த்தவை பல பல மந்தை யுண்டாம்;
ஆற்றன் மிலேச்ச மன்னர்—தொலை
அரபிய ரொட்டைகள் கொணர்ந்து தந்தார். (33)

'தென் றிசைச் சாவக மாம்—பெருந்
தீவு தொட்டே வட திசை யதனில்
நின் றிடும் புகழ்ச் சீனம்—வரை
நேர்ந் திடும் பல பல நாட்டின ரும்,
வென்றி கொள் தருமனுக்கே,—அவன்
வேள்வியிற் பெரும் புகழ் விளையும் வண்ணம்,
நன்று பல் (பொருள்) கொணர்ந்தார்;—புவி
நாயகன் யுதிட்டிர னென வுணர்ந்தார். (34)

'ஆடுகள் சிலர் கொணர்ந்தார்;—பலர்
ஆயிர மாயிரம் பசுக் கொணர்ந்தார்;
மாடுகள் பூட்டின வாய்ப்—பல
வகைப் படு தானியஞ் சுமந்தன வாய்

ஈடுறு வண்டி கொண்டே—பலர்
எய்தினர்; கரும்புகள் பலர் கொணர்ந்தார்;
நாடுறு தயில வகை—நறு
நானத்தின் பொருள் பலர் கொணர்ந்து தந்தார்; (35)

'நெய்க் குடங் கொண்டு வந்தார்,—மறை
நியமங் கொள் பார்ப்பனர் மகத்தினுக்கே;
மொய்க்கு மின் கள் வகைகள்—கொண்டு
மோதினர் ரசின மகிழ் வுறவே;
தைக்கு நற் குப்பாயம்,—செம் பொற்
சால்வைகள், போர்வைகள், கம்பளங்கள்—
கைக்கு மட்டினுந் தாமோ—அவை
காண்பவர் விழிகட்கும் அடங்குப வோ? (36)

'தந்தத்திற் கட்டில்க ளும்,—நல்ல
தந்தத்திற் பல்லக் கும், வாகன மும்,
தந்தத்தின் பிடி வா ளும்,—அந்தத்
தந்தத்திலே சிற்பத் தொழில் வகை யும்,
தந்தத்தி லாதன மும்,—பின்னுந்
தமனிய மணிகளி லிவை யனைத் தும்
தந்தத்தைக் கணக் கிடவோ?—முழுத்
தரணியின் திருவு மித் தருமனுக்கோ?' (37)

வேறு.

என் றிவ் வாறு பல பல வெண்ணி
யேழை யாகி யிரங்குத லுற்றான்,
வன்றிறத் தொரு கல்லெனு நெஞ்சன்,
வானம் வீழினு மஞ்சுத லில்லான்,

குன்ற மொன்று குழைவுற் றிளகிக்
குழம்பு பட்ட ழிவெய் திடும் வண்ணம்
கன்று பூதலத் துள் ளுறை வெம்மை
காய்ந் தெழுந்து வெளிப் படல் போல. (38)

நெஞ்சத் துள்ளோர் பொறாமை யெனுந் தீ
நீள்வதா லுள்ள நெக் குருகிப் போய்,
மஞ்ச னாண்மை மறந் திண்மை மானம்
வன்மை யாவு மறந்தன னாகிப்
பஞ்சையா மொரு பெண் மகள் போலும்
பாலர் போலும் பரிதவிப் பானாய்க்
கொஞ்ச நேரத்திற் பாதகத் தோடு
கூடியே யுற வெய்தி நின்றா னால். (39)

யாது நேரினு மெவ் வகையானும்
யாது போயினும் பாண்டவர் வாழ்வைத்
தீது செய்து மடித்திட வெண்ணிச்
செய்கை யொன் றறியான் திகைப் பெய்திச்
சூதும் பொய்யு முரு வெனக் கொண்ட
துட்ட மாமனைத் தான் சர ணெய்தி,
'ஏது செய்வம்'எனச் சொல்லி நைந்தான்,
எண்ணத் துள்ளன யாவு முரைத்தே. (40)

மன்னர் மன்னன் யுதிட்டிரன் செய்த
மா மகத்தினில் வந்து பொழிந்த
சொன்னம் பூண்மணி முத் திவை கண்டுந்
தோற்றங் கண்டு மதிப்பினைக் கண்டும்

என்ன பட்டது தன் னுள மென்றே
யீன மாம னறிந் திடும் வண்ணம்
முன்னந் தா னெஞ்சிற் கூறிய வெல்லாம்
மூடன் பின்னு மெடுத்து மொழிந்தான். (41)

## துரியோதனன் சகுனியிடம் சொல்வது.

### வேறு.

'உலகு தொடங்கிய நாள்
முத லாக நஞ் சாதியில்—புகழ்
ஓங்கி நின்றுரித் தருமனைப்
போ லெவர்?—மாமனே!
இலகு புகழ் மனு வாதி
முதுவர்க்கும், மாமனே!—பொரு
ளேற்றமு மாட்சியு மிப்
படி யுண்டு கொல்?—மாமனே!
கலைக ளுணர்ந்த நல் வேதியப்
பாவலர் செய்த வாம்—பழங்
கற்பனைக் காவியம்
பற்பல கற்றனை,—மாமனே!
பல கட லுட்டையு மிப் படி
வென்றதை யெங்க ணும்—சொல்லப்
பார்த்த துண்டோ? கதை
கேட்ட துண்டோ? புகல், மாமனே! (42)

'எதனை யுலகில் மறப்பி னும்,
யா னினி, மாமனே!—இவர்
யாகத்தை யென்று மறந் திட
லென்ப தொன் றேது காண்?
விதமுறச் சொன்னபொருட்
குறையும் பெரிதில்லைகாண்;—அந்த
வேள்வியி லென்னை வெதுப்
பின வேறு பல வுண் டே;
இதனை யெலா மவ் விழியற்ற
தந்தையின் பாற்சென்றே—சொல்லி,
இங்கிவர் மீதவ னும் பகை
யெய் திடச்செய் குவாய்.
மித மிகு மன் பவர் மீது
கொண்டா னவன் கேட்கவே,—அந்த
வேள்வி கண் டென் னுயிர்
புண்படுஞ் செய்தி விளம்புவாய். (43)

'கண்ணைப் பறிக்கு மழ
குடையா ரிள மங்கையர்—பல
காமரு பொன் மணிப் பூண்க
ளணிந்தவர் தம்மையே
மண்ணைப் புரக்கும் புரவலர்
தா மந்த வேள்வியில்—கொண்டு
வாழ்த்தி யளித்தனர் பாண்
டவர்க்கே, யெங்கள்—மாமனே!
எண்ணைப் பழிக்குந் தொகை
யுடையா ரிள மஞ்சரைப்—பலர்

அந்தணர் மன்ன ரிவர்
தமக்குத் தொண்ட டியற்றவே;
விண்ணைப் பிளக்குந் தொனி
யுடைச் சங்குக ளூதினார்;—தெய்வ
வேதியர் மந்திரத்தோடு பல்
வாழ்த்துக்க ளோதினார். (44)

'நாரதன் றானு மவ் வேத
வியாசனு மாங்ங னே—பலர்
நா னிங் குரைத்தற் கரிய
பெருமை முனிவ ரும்
மா ரத வீர ரப் பாண்டவர்
வேள்விக்கு வந்த தும்,—வந்து
மா மறை யாசிகள் கூறிப்
பெரும் புகழ் தந்த தும்,
வீரர் தம் போரி னரிய
நற் சாத்திர வாதங்கள்—பல
விப்பிரர் தம் முள் விளைத்
திட வுண்மைகள் வீசவே
சார மறிந்த யுதிட்டிரன்
கேட்டு வியந்ததும்,—நல்ல
தங்க மழை பொழிந் தாங்
கவர்க் கே மகிழ் தந்ததும், (45)

'விப்பிர ராதிய நால்
வருணத் தவர் துய்ப்பவே—நல்
விருந்து செயலி லள வற்ற
பொன் செல விட்ட தும்,

'இப் பிறவிக் குனிவை யொத்த
வேள்வி விருந்துகள்—புவி
யெங்கணு நாங் கண்ட தில்லை'
யெனத் தொனி பட்டதும்,
தப் பின்றி யே நல் விருந்தினர்
யார்க்குந் தகுதிகள்—கண்டு
தக்க சன்மான மளித்து
வரிசைக ளிட்டதும்,
செப்புக நீ யவ் விழி யற்ற
தந்தைக்கு; "நின் மகன்—இந்தச்
செல்வம் பெறு விடிற் செத்
திடுவான்" என் றுஞ்செப்புவாய். (46)

'அண்ணன் மைந்த னவனிக்
குரியவன் யானன்றோ?—அவர்
அடிய வராகி யெமைப்
பற்றி நிற்றல் விதி யன் றோ?
பண்ணும் வேள்வியில் யார்க்கு
முதன்மை யவர் தந்தார்?—அந்தப்
பாண்டவர் நமைப் புல்லென
வெண்ணுதல் பார்த்தை யோ?
கண்ணனுக்கு முத லுப
சாரங்கள் காட்டினர்;—சென்று
கண்ணிலாத தந்தைக் கிச்
செயலின் பொருள் காட்டுவாய்;
மண்ணில் வேந்தருட் கண்ண
னெவ்வாறு முதற்பட்டான்?—என்றன்

மாமனே, யவ னம்மி
ஷுயர்ந்த வகை சொல்வாய். (47)

‘சந்திரன் குலத்தே பிறந்தோர்
தந் தலைவன் யான்—என்று
சகமெலாஞ் சொ லும் வார்த்தை
மெய் யோ வெறுஞ் சாலமோ?
தந்திரத் தொழிலொன் றுண
ருஞ் சிறு வேந்தனே—இவர்
தரணி மன்ன ருள் முற் பட
வைத் திடல் சா லு மோ?
மந்திரத்தி லச் சேதியர்
மன்னனை மாய்த் திட்டார்;—ஐய!
மா மகத்தி லதிதியைக்
கொல்ல மர புண்டோ?
இந்திரத்துவம் பெற் றிவர்
வாழு நெறி நன்றே!—இதை
எண்ணி யெண்ணி யென் னெஞ்சு
கொதிக்குது, மாமனே. (48)

சதி செய்தார்க்குச் சதி செயல்
வேண்டும், என் மாமனே!—இவர்
தா மெ னன்பன் சராசந்
த னுக்குமு னெவ் வகை
விதி செய்தார்? அதை யென்று
மெ னுள்ள மறக்குமோ?—இந்த
மேதினியோர்கள் மறந்து விட்டார்,
இதோர் விந்தையே.

நிதி செய்தாரைப் பணிகுவர்
மானிடர், மாமனே!—எந்
நெறியினுலது செய்யினும்,
நா யென நீள் புவி
துதி செய்தே யடி நக்குதல்
கண்டனே, மாமனே!—வெறுஞ்
சொல்லுக்கே யற நூல்க
ளுரைக்குந் துணி வெலாம். (49)

வேறு.

'பொற் றடந் தேரொன்று வாலிகன்
கொண்டு விடுத்ததும்,—அதிற்
பொற் கொடி சேதியர் கோ
மகன் வந்து தொடுத்ததும்,
உற்ற தோர் தம்பிக்குத் தென்
னவன் மார்பணி தந்ததும்,—ஒளி
யோங்கிய மாலை யம் மாகதன்
றன் கொண்டு வந்ததும்,
பற்றல ரஞ்சும் பெரும் புக
ழேக லவியனே—செம் பொற்
பாதுகை கொண்டு யுதிட்டிரன்
தாளினி லார்த்ததும்,
முற்றிடு மஞ்சனத்திற்குப் பல
பல தீர்த்தங்கள்—மிகு
மொய்ம் புடையா னவ்
வவந்தியர் மன்னவன் சேர்த்ததும், (50)

'மஞ்சன நீர் தவ வேதவியாசன்
பொழிந்ததும்,—பல
வைதிகர் கூடி நன் மந்திர
வாழ்த்து மொழிந்ததும்,
குஞ்சரச் சாத்தகி வெண் குடை
தாங் கிட, வீமனும்—இளங்
கொற்றவனும் பொற்
சிவிறிகள் வீச, இரட்டையர்
அஞ்சுவர் போ லங்கு நின்று
கவரி யிரட்டவே,—கடல்
ஆளு மொருவன் கொடுத்த
தொர் தெய்விகச் சங்கினில்
வஞ்சகன் கண்ணன் புனிதமுறுங்
கங்கை நீர் கொண்டு—திரு
மஞ்சன மாட்டு மப் போதி
லெவரு மகிழ்ந்ததும் (51)

'மூச்சை யடைத்த தடா!
சபை தன்னில் விழுந்து நான்—அங்கு
மூர்ச்சை யடைந்தது
கண்டனையே! என்றன் மாமனே!
ஏச்சையு மங்கவர் கொண்ட
நகைப்பையு மெண்ணுவாய்;—அந்த
ஏந்திழையாளு மெனைச்
சிரித்தா ளிதை யெண்ணுவாய்;
பேச்சை வளர்த்துப் பய னொன்று
மில்லை, என் மாமனே!—அவர்

பேற்றை யழிக்க வுபாயஞ்
சொல்வாய், என் றன் மாமனே !
தீச் செய னற் செயலே தெனினும்
ஒன் று செய்து, நாம்—அவர்
செல்வங் கவர்ந் தவரை
விட வேண்டுந் தெருவிலே.' (52)

## சகுனியின் சதி.

### வேறு.

என் று சுயோதனன் கூறியே—நெஞ்சம்
ஈர்ந் திடக் கண்ட சகுனி தான்—'அட!
இன் று தருகுவன் வெற்றியே;—இதற்
கித் தனை வீண் சொல் வளர்ப்ப தேன் ?—இனி
ஒன் றுரைப் பேனல் லுபாயந் தான்;—அதை
யூன் றிக் கருத் தொடு கேட்பை யால்:—ஒரு
மன் று புனைந் திடச் செய்தி நீ,—தெய்வ
மண்டப மொத்த நலங் கொண்டே; (53)

'மண்டபங் காண வருவி ரென்—றந்த
மன்னவர் தம்மை வர வழைத்—தங்கு
கொண்ட கருத்தை முடிப்ப வே—மெல்லக்
கூட்டி வன் சூது பொரச் செய்வோம்;—அந்த
வண்டரை நாழிகை யொன் றிலே—தங்கள்
வான் பொருள் யாவையுந் தோற் றுனைப்—பணி
தொண்ட ரெனச் செய்திடுவன் யான்,—என் றன்
சூதின் வலிமை யறிவை நீ. (54)

'வெஞ் சமர் செய்திடுவோ மெனில்—அதில்
வெற்றியும் தோல்வியும் யார் கண்டார்?—அந்தப்
பஞ்சவர் வீரம் பெரிது காண்!—ஒரு
பார்த்தன் கை வில்லுக் கெதிருண்டோ?—உன்றன்
நெஞ்சத் திற சூதை யிகழ்ச்சி யாக்—கொள்ள
நீத மில்லை, முன்னைப் பார்த்திவர்—தொகை
கொஞ்ச மிலைப் பெருஞ் சூதினால்—வெற்றி
கொண்டு பகைமை யழித் துளோர். (55)

'நாடுங் குடிகளுஞ் செல்வமும்—எண்ணி,
நானிலத்தோர் கொடும் போர் செய்வார்;—அன்றி
ஓடுங் குருதியைத் தேக்கவோ?—தமர்
ஊன் குவை கண்டு களிக்கவோ?—அந்த
நாடுங் குடிகளுஞ் செல்வமும்—ஒரு
நாழிகைப் போதினிற் சூதினால்—வெல்லக்
கூடு மெனிற் பிறி தெண்ணலேன்?—என்றன்
கொள்கை யிது'வெனக் கூறினான். (56)

இங்கிது கேட்ட சுயோதனன்—'மிக
இங்கிதஞ் சொல்லினை, மாமனே!'—என்று
சங்கிலிப் பொன்னின் மணி யிட்ட—ஒளித்
தாமரை சகுனிக்குச் சூட்டினான்;—பின்னர்,
'எங்கும் புவி மிசை யுன்னைப் போல்—எனக்
கில்லை யினியது சொல்லுவோர்'—என்று
பொங்கு முவகையின் மார் புறக்—கட்டிப்
பூரித்து விம்மித் தழுவினான். (57)

## சகுனி திரிதராட்டிரனிடம் சொல்லுதல்.

மற்றதன் பின்ன ரிருவரும்—அரு
மந்திரக் கேள்வி யுடையவன்—பெருங்
கொற்றவர் கோன் திரி தாட்டிரன்—சபை
கூடி வணங்கி யிருந்தனர்;—அருள்
அற்ற சகுனியுஞ் சொல்லுவான்:—'ஐய,
ஆண்டகை நின் மகன் செய்தி கேள்;—உடல்
வற்றித் துரும்பொத் திருக்கின்றான்;—உயிர்
வாழ்வை முழுதும் வெறுக்கின்றான்; (58)

'உண்ப சுவை யின்றி யுண்கின்றான்;—பின்
உடுப்ப திகழ வுடுக்கின்றான்;—பழ
நண்பர்க ளோடு றவெய்திடான்;—இள
நாரியரைச் சிந்தை செய்திடான்;—பிள்ளை
கண் பசலை கொண்டு போயினான்;—இதன்
காரணம் யாதென்று கேட்பையால்:—உயர்
திண் பருமத் தடந் தோளினாய்!'—என்று
தீய சகுனியுஞ் செப்பினான். (59)

தந்தையு மிவ் வுரை கேட்டதால்—உளஞ்
சாலவுங் குன்றி வருந்தியே,—'என்றன்
மைந்த! நினக்கு வருத்த மேன்?—இவன்
வார்த்தையி லேதும் பொரு ளுண்டோ?—நினக்
கெந்த விதத்துங் குறை யுண்டோ?—நினை
யாரு மெதிர்த்திடு வாருண்டோ?—நின்றன்
சிந்தையி லெண்ணும் பொருளெலாங்—கணந்
தேடிக் கொடுப்பவ ரில்லையோ?

'இன்னமு தொத்த வுணவுகள்,—அந்த
இந்திரன் வெஃகு றுமாடைகள்,—பலர்
சொன்ன பணிசெயு மன்னவர்,—வருந்
துன்பந் தவிர்க்கு மமைச்சர்கள்,—மிக
நன்னலங் கொண்ட குடிபடை,—இந்த
நானில மெங்கும் பெரும் புகழ்—மிஞ்சி
மன்னு மப் பாண்டவச் சோதரர்—இவை
வாய்ந்து முனக்குத் துயருண்டோ?' (61)

தந்தை வசனஞ் செவியுற்றே—கொடி
சர்ப்பத்தைக் கொண்டதொர் கோமகன்
வெந்தழல் போலச் சினங்கொண்டே—தன்னை
மீறிப் பலசொல் விளம்பினான்;—இவன்
மந்த மதிகொண்டு சொல்வதை—அந்த
மாமன் மறித் துரை செய்குவான்:—'ஐய
சிந்தை வெதுப்பத்தினு லிவன்—சொலும்
சீற்ற மொழிகள் பொறுப்பையால். (62)

'தன்னுளத் துள்ள குறையெலாம்—நின்றன்
சந்நிதியிற் சென்று சொல்லிட—முதல்
என்னைப் பணித்தனன்; யானிவன்—றனை
யிங்கு வலியக் கொணர்ந்திட்டேன்;—பிள்ளை
நன்னயமே சிந்தை செய்கின்றான்;—எனில்
நன்கு மொழிவ தறிந்திலன்;—நெஞ்சைத்
தின்னுங் கொடுந் தழல் கொண்டவர்—சொல்லுஞ்
செய்தி தெளிய வுரைப்பரோ? (63)

'நீ பெற்ற புத்திரனே யன்றோ? மன்னர்
நீதி யியலபி லறிகின்றான்;—ஒரு
தீபத்திற் சென்று கொளுத்திய—பந்தந்
தேசு குறைய வெரியுமோ?—செல்வத்
தாபத்தை நெஞ்சில் வளர்த் திடல்—மன்னர்
சாத்திரத்தே முதற் சூத்திரம்;—பின்னும்
ஆபத் தரசர்க்கு வே றுண்டோ—தம்மில்
அன்னியர் செல்வ மிகுதல் போல்? (64)

'வேள்வியி லன் றந்தப் பாண்டவர்—நமை
வேண்டு மட்டுங் குறை செய்தனர்;—ஒரு
கேள்வி யிலா துன் மகன் றனைப்—பலர்
கேலி செய்தே நகைத்தார், கண்டாய்!—புலி
ஆள் வினை முன் னவர்க் கின்றி யே—புகழ்
ஆர்ந் திளை யோ ரது கொள்வதைப்—பற்றி
வாள் விழி மாதரு நம்மையே—கய
மக்க ளென் றெண்ணி நகைத் திட்டார். (65)

'ஆயிரம் யானை வலி கொண்டான்—உன்றன்
ஆண் டகை மைந்தனிவன், கண்டாய்!—இந்த
மா யிரு ஞாலத் துயர்ந்ததா—மதி
வான் குலத் திற்கு முதலவ னும்;—ஒளி
ஞாயிறு நிற்பவு மின்மினி—தன்னை
நாடித் தொழு திடுந் தன்மை போல்,—அவர்
வே யிருந் தூது மொர் கண்ணனை—அந்த
வேள்வியிற் சால உயர்த்தினார். (66)

'ஐய நின் மைந்தனுக் கில்லை காண்—அவர்
அர்க்கிய முற்படத் தந்ததே;—இந்த
வையகத்தார் வியப் பெய்தவே,—புவி
மன்னவர் சேர்ந்த சபை தனில்—மிக
நொய்ய தொர் கண்ணனுக் காற்றினார்;—மன்னர்
நொந்து மனங் குன்றிப் போயினர்;—பணி
செய்யவுங் கேலிகள் கேட்கவும்—உன்றன்
சேயினை வைத்தனர் பாண்டவர். (67)

'பாண்டவர் செல்வம் விழைகின்றான்;—புவிப்
பாரத்தை வேண்டிக் குழைகின்றான்;—மிக
நீண்ட மகிதல முற்றிலும்—உங்கள்
நேமி செலும் புகழ் கேட்கின்றான்;—குலம்
பூண்ட பெருமை கெடாத வா—றெண்ணிப்
பொங்குகின்றா னலம் வேட்கின்றான்;—மைந்தன்
ஆண் டகைக் கிஃது தகுமன்றோ?—இல்லை
யாமெனில் வைய நகு மன்றோ? (68)

'நித்தங் கடலினிற் கொண்டு போய்—நல்ல
நீரை யள வின்றிக் கொட்டுமாம்—உயர்
வித்தகர் போற்றிடுங் கங்கை யா—றது
வீணிற் பொருளை யழிப்பதோ?—ஒரு
சத்த மிலா நடுக் காட்டினில்—புனல
தங்கி நிற்குங் குள மொன் றுண் டாம்;—அது
வைத்த தன் னீரைப் பிறர் கொளா—வகை
வா ரடைப் பாசியில் மூடியே (69)

‘ சூரியன் வெப்பம் படாமலே—மரஞ்
சூழ்ந்த மலை யடிக் கீழ்ப் பட்டே—முடை
நீரினை நித்த லுங் காக்கு மாம்;—இந்த
நீள் சுனை போல்வர் பல ருண் டே ?—எனில்
ஆரியர் செல்வம் வளர்தற் கே—நெறி
ஆயிர நித்தம் புதியன—கண்டு
வாரிப் பழம் பொரு ளெற்றுவார்;—இந்த
வண்மையு நீ யறியாத தோ ? ’ (70)

## திரிதராட்டிரன் பதிற் கூறுதல்.

கள்ளச் சகுனியு மிங்ஙனே—பல
கற்பனை சொல்லித் த னுள்ளத்தின்—பொருள்
கொள்ளப் பகட்டுதல் கேட்டபின்—பெருங்
கோபத் தொ டே திரிதராட்டிரன்,—‘ அட,
பிள்ளையை நாசம் புரியவே—ஒரு
பே யென நீ வந்து தோன்றினாய்;—பெரு
வெள்ளத்தைப் புல் லொன் றெதிர்க்கு மோ?—இள
வேந்தரை நாம் வெல்ல லாகு மோ ? (71)

‘ சோதரர் தம் முட் பகை யுண்டோ?—ஒரு
சுற்றத்திலே பெருஞ் செற்ற மோ ?—நம்மில்
ஆதரங் கொண்டவ ரல்லரோ ?—முன்னர்
ஆயிரஞ் சூழ்ச்சி யிவன்செய் தும்—அந்தச்
சீதரன் றண் ணருளாலு மோர்—பெருஞ்
சீலத்தினாலும் புயவலி—கொண்டும்

யாதொரு தீங்கு மிலாம லே—பிழைத்
தென் னருங் கீர்த்தி பெற்றா ரன் றோ? (72)

‘ பிள்ளைப் பருவந் தொடங்கி யே—இந்தப்
பிச்ச னவர்க்குப் பெரும் பகை—செய்து
கொள்ளப் படாத பெரும் பழி—யன்றிக்
கொண்ட தொர் நன்மை சிறி துண் டோ?—நெஞ்சில்
எள்ளத் தகுந்த பகைமையோ?—அவர்
யார்க்கு மிளைத்த வகையுண்டோ?—வெறும்
நொள்ளைக் கதைகள் கதைக்கிறாய்,—பழ
நூலின் பொருளைச் சிதைக்கிறாய். (73)

‘ மன்னவர் நீதி சொல வந்தாய்;—பகை
மா மலையைச் சிறு மட் குடம்—கொள்ளச்
சொன்ன தொர் நூல் சற்றுக் காட்டுவாய்!—விண்ணிற்
சூரியன் போ னிக ரின்றி யே—புகழ்
துன்னப் புவிச் சக் கராதிபம்—உடற்
சோதரர் தாங் கொண் டிருப்ப வும்,—தந்தை
யென்னக் கருதி யவ ரெனைப்—பணிந்
தென் சொற் கடங்கி நடப்ப வும், (74)

‘ முன்னை யிவன் செய்த தீ தெலா—மவர்
முற்று மறந்தவ ராகி யே,—தன்னைத்
தின்ன வரு மோர் தவளையைக்—கண்டு
சிங்கஞ் சிரித் தருள் செய்தல் போல்—துணை
யென்ன விவனை மதிப்ப வும்—அவ
ரேற்றத்தைக் கண்டு மஞ்சாம லே—(நின்றன்

சின்ன மதியினை யென் சொல்வேன்!)பகை
செய்திட வெண்ணிப் பிதற்றினாய். (75)

'ஒப்பில் வலிமை யுடைய தார்—துணை
யோடு பகைத்த லுறுதியோ?—நம்மைத்
தப் பிழைத்தா ரந்த வேள்வியில்—என்று
சால மெவரிடஞ் செய்கிறாய்?—மயல்
அப்பி விழி தடுமாறி யே—இவன்
அங்கு மிங்கும் விழுந் தாடல கண்—டந்தத்
துப் பிதழ் மைத்துனி தான் சிரித்—திடில்
தோஷமிதில் மிக வந்த தோ? (76)

'தவறி விழுபவர் தம்மை யே—பெற்ற
தாயுஞ் சிரித்தல் மரபன் றோ?—எனில்
இவனைத் துணைவர் சிரித்த தோர்—செயல்
என்னரும் பாதக மாகு மோ?—மனக்
கவலை வளர்த் திடல் வேண்டுவோர்—ஒரு
காரணங் காணுதல் கஷ்டமோ?—வெறும்
அவல மொழிக ளளப்ப தேன்?—தொழி
லாயிர முண் டவை செய்குவீர். (77)

'சின்னஞ் சிறிய வயதி லே—இவன்
தீமை யவர்க்குத் தொடங்கினான்—அவர்
'என்னரும் புத்திர' னென் றெண்ணித்—தங்கள்
யாகத் திவனைத் தலைக் கொண்டு—பசும்
பொன்னை நிறைத்த தோர் பையினை—'மனம்
போலச் செல விடுவா' யென் றே—தந்து

மன்னவர் காண விவனுக் கே—தம்முள்
மாண்பு கொடுத்தன ரல்லரோ? (78)

'கண்ணனுக்கே முத லர்க்கியம்—அவர்
காட்டினர் என்று பழித்தனை!—எனில்
நண்ணும் விருந்தினர்க் கன்றியே—நம்முள்
நா முபசாரங்கள் செய்வ தோ?—உற
வண்ணனுந் தம்பியு மாதலால்—அவ
ரன்னிய மா நமைக் கொண்டிலர்;—முகில்
வண்ண னதிதியர் தம்முளே—முதல்
மாண் புடை யா னெனக் கொண்டனர்; (79)

'கண்ணனுக் கே யது சாலு மென்—றுயர்
கங்கை மகன் சொலச் செய்தனர்;—இதைப்
பண்ணரும் பாவ மென் றெண்ணினால்—அதன்
பார மவர் தமைச் சாருமோ?—பின்னுங்
கண்ணனை யே தெனக்கொண்டனை?—"அவன்
காலிற் சிறு துக ளொப்பவர்—நிலத்
தெண்ணரு மன்னவர் தம் முளே—பிறர்
யாரு மிலை" யெனல் காணுவாய். (80)

'"ஆதிப் பரம் பொருள் நாரணன்,—தெளி
வாகிய பாற் கடல் மீதிலே—நல்ல
சோதிப் பணுமுடி யாயிரம்—கொண்ட
தொல் லறி வென்னு மொர் பாம்பின் மேல்—ஒரு
போதத் துயில் கொளு நாயகன்,—கலை
போந்து புவி மிசைத் தோன்றினன்—இந்தச்

சீதக் குவளை விழியினன்''—என்று
செப்புவ ருண்மை தெளிந்தவர். (81)

'நானெனு மாணவந் தள்ள லும்—இந்த
ஞாலத்தைத் தா னெனக் கொள்ள லும்—பர
மோன நிலையி னடத்த லும்—ஒரு
மூவகைக் காலங் கடத்த லும்—நடு
வான கருமங்கள் செய்த லும்—உயிர்
யாவிற்கு நல்லருள் பெய்த லும்—பிறர்
ஊனைச் சிதைத்திடும் போதி னும்—தன
துள்ள மருளி னெகுத லும், (82)

'ஆயிரங் கால முயற்சியாற்—பெற
லாவ ரிப் பேறுகள் ஞானியர்;—இவை
தாயின் வயிற்றிற் பிறந்தன்றே—தமைச்
சார்ந்து விளங்கப் பெறுவ ரேல்,—இந்த
மா யிரு ஞால மவர் தமைத்—தெய்வ
மாண் புடை யா ரென்று போற்றுங் காண்!—ஒரு
பேயினை வேத முணர்த்தல் போற—கண்ணன்
பெற்றி யுனக் கெவர் பேசுவார்?' (83)

## துரியோதனன் சினங் கொள்ளுதல்.

### வேறு.

வெற்றி வேற் கைப் பரதர் தங் கோமான்,
மேன்மை கொண்ட விழி யகத் துள்ளோன்,
பெற்றி மிக்க விதுர னறிவைப்
பின்னு மற் றொரு கண் ணெனக் கொண்டோன்,

முற்றுணர் திரி தாட்டிர னென்போன்
மூடப் பிள்ளைக்கு மாமன் சொல் வார்த்தை
ஏற்றி நல்ல வழக் குரை செய்தே
என்ற வாறு நயங்கள் புகட்ட, (84)

கொல்லு நோய்க்கு மருந்துசெய் போழ்திற்
கூடும் வெம்மை யதாய்ப் பிணக் குற்றே
தொல்லுணர்வின் மருத்துவன் றன்னைச்
சோர் வுறுத்துதல் போல், ஒரு தந்தை
சொல்லும் வார்த்தையி லே தெருளாதான்,
தோ மிழைப்பதி லோர் மதி யுள்ளான்,
கல்லு மொப் பிடத் தந்தை விளக்குங்
கட்டு ரைக்குக் கடுஞ்சின முற்றான். (85)

## துரியோதனன் தீ மொழி.

### வேறு.

பாம்பைக் கொடியென் றுயர்த்தவன்—அந்தப்
பாம் பெனச் சீறி மொழிகுவான்:—'அட!
தாம் பெற்ற மைந்தர்க்குத் தீது செய்—திடுந்
தந் தையர் பார் மிசை யுண்டு கொல்?—கெட்ட
வேம்பு நிக ரிவனுக்கு நான்—சுவை
மிக்க சருக்கரை பாண்டவர்;—அவர்
தீம்பு செய்தாலும் புகழ்கின்றான்,—திருத்
தேடினு மென்னை யிகழ்கின்றான். (86)

' "மன்னர்க்கு நீதி யொரு வகை—பிற
மாந்தர்க்கு நீதி மற் றோர் வகை"—என்று

சொன்ன வியாழ முனிவனை—இவன்
சுத்த மடையனென் றெண்ணி யே,—மற்றும்
என்னென்னவோ கதை சொல்கிறான்,—உற
வென்று நட்பென்றுங் கதைக்கிறான்,—அவர்
சின்ன முறச் செயவே திறங்—கெட்ட
செத்தை யென் றென்னை நினைக்கிறான்; (87)

'இந்திர போகங்களென்கிறான்,—உண
வின்பமு மாதரி னின்பமும்.—இவன்
மந்திரமும் படை மாட்சி யும்—கொண்டு
வாழ்வதை விட் டிங்கு வீணிலே—பிறர்
செந் திருவைக் கண்டு வெம்பியே—உளந்
தேம்புதல் பேதைமை யென்கிறான்;—மன்னர்
தந்திரந் தேர்ந்தவர் தம்மிலே—எங்கள்
தந்தையை யொப்பவரில்லை, காண்! (88)

'மாதர் தமின்ப மெனக்கென்றான்,—புவி
மண்டலத் தாட்சி யவர்க் கென்றான்;—நல்ல
சாதமு நெய்யு மெனக் கென்றான்,—எங்கும்
சாற் றிடுங் கீர்த்தி யவர்க் கென்றான்;—அட!
ஆதர விங்ஙனம் பிள்ளை மேல்—வைக்கும்
அப்ப னுலகினில் வே றுண்டோ?—உயிர்ச்
சோதரர் பாண்டவர், தந்தை நீ—குறை
சொல்ல வினி யிட மே தையா! (89)

'சொல்லி னயங்களறிந் திலேன்,—உனைச்
சொல்லினில் வெல்ல விரும் பிலேன்;—கருங்

கல் லிடை நா ருரிப் பா ருண்டோ?—நினைக்
கா ரணங் காட்டுத லாகு மோ?—என்னைக்
கொல்லி னும் வே றெது செய்யி னும்,—நெஞ்சிற்
கொண்ட கருத்தை விடு கிலேன்;— அந்தப்
புல்லிய பாண்டவர் மேம்படக்—கண்டு
போற்றி யுயிர் கொண்டு வாழ் கிலேன்; (90)

'வாது நின் னோடு தொடுக் கிலேன்;—ஒரு
வார்த்தை மட் டுஞ் சொலக் கேட்பை யால்:—ஒரு
தீது நமக்கு வராமலே—வெற்றி
சேர்வதற் கோர் வழி யுண்டு, காண்!—களிச்
சூதுக் கவரை யழைத் தெல்லாம்—அதில்
தோற்றிடு மாறு புரியலாம்;—இதற்
கேதுந் தடைகள் சொல்லா மலே—என
தெண்ணத்தை நீ கொளல் வேண்டு மால்.' (91)

## திரிதராட்டிரன் பதில்

### வேறு.

திரிதராட் டிரன் செவியில்—இந்தத்
தீ மொழி புகுதலுந் திகைத்து விட்டான்;
'பெரிதாத் துயர் கொணர்ந்தாய்;—கொடும்
பே யெனப் பிள்ளைகள் பெற்று விட்டேன்;
அரி தாக்குதல் போலே—அமர்
ஆங் கவ ரொடு பொரலவல மென்றேன்;
நரி தாக் குதல் போ லாம்—இந்த
நாண மில் செயலினை நாடுவனோ? (92)

'ஆரியர் செய்வாரோ?— இந்த
ஆண்மை யிலாச் செய லெண்ணுவரோ?
பாரினிற் பிற ருடைமை—வெஃகும்
பதரினைப் போ லொரு பத ருண் டோ?
பே ரியற் செலவங்களும்—இசைப்
பெருமையு மெய்திட விரும்புதி யேல்,
காரிய மிது வா மோ?—என் றன்
கா‌ளை யன்றோ? இது கருத லடா! (93)

'வீர னுக் கேயிசை வார்—திரு
மேதினி யெனு மிரு மனைவியர் தாம்;
ஆ ரமர் தம ரல்லார்—மிசை
யாற்றி நல் வெற்றியி லோங்குதி யேல்,
பாரத நாட்டினிலே—அந்தப்
பாண்டவ ரெனப் புகழ் படைத் திடு வாய்;
சோரர் தம் மக னோ நீ?—உயர்
சோமன்ற னொரு குலத் தோன்ற லன்றோ? (94)

'தம் மொரு கருமத்திலே—நித்தந்
தளர் வறு முயற்சி, மற் றோர் பொருளை
இம்மியுங் கருதாமை,—சார்ந்
திருப்பவர் தமை நன்கு காத்திடுதல்—
இம்மையி லிவற்றினை யே—செலவத்
திலக்கண மென் றனர் மூ தறிஞர்.
அம்ம, இங் கிதனை யெலாம்—நீ
அறிந்திலை யோ? பிழையாற்றல் நன் றோ? (95)

'நின் னுடைத் தோளனையார்—இள
நிருபரைச் சிதைத்திட நினைப்பாயோ?
என் னுடை யுயி ரன்றோ?—எனை
யெண்ணரி யிக் கொள்கையை நீக்குதியால்!
பொன் னுடை மார்பகத்தார்—இளம்
பொற் கொடி மாதரைக் களிப்பதினும்
இன்னும் ப லின்பத்தினும்—உளம்
இசைய விட்டே யிதை மறந்திடடா. (96)

## துரியோதனன் பதில்.

### வேறு.

தந்தை யிஃது மொழிந் திடல் கேட்டே,
தா ரிசைந்த நெடு வரைத் தோளான்:
'எந்தை, நின் னொடு வா திடல் வேண்டேன்
என்று ப ன்முறை கூறி யுங் கேளாய்;
வந்த காரியங் கேட்டி; மற் றுங் குன்
வார்த்தை யின்றி யப் பாண்டவர் வாரார்;
இந்த வார்த்தை யுரைத்து விடா யேல்,
இங்கு நின் மு னென் னுவி யிறுப்பேன். (97)

'மதி தமக்கென் றிலாதவர் கோடி
வண்மைச் சாத்திரக் கேள்விகள் கேட்டும்
பதியுஞ் சாத்திரத் துள் ளுறை காணார்,
பானைத் தேனி லகப்பையைப் போல்வார்;
துதிகள் சொல்லும் விதுரன் மொழியைச்
சுருதி யா மெனக் கொண்டனை நீ தான்;
அதிக மோக மவ னுளங் கொண்டான்
ஐவர் மீதி லிங் கெம்மை வெறுப்பான். (98)

'தலைவ னுங்கு பிறர் கை யிற் பொம்மை;
சார்ந்து நிற்பவர்க்குய்ந் நெறி யுண்டோ?
உலை வலால், திரிதாட் டிர வர்க்கத்
துள்ளவர்க்கு நல மென்ப தில்லை;
நிலை யிலாதன செல்வமு மாண்பும்
நித்தந் தேடி வருந்த லிலாமே
"விலை யிலா நிதி கொண்டனம்" என்றே
மெய் குழைந்து துயில்பவர் மூடர். (99)

'பழைய வா னிதி போது மென் றெண்ணிப்
பாங்கு காத் திடு மன்னவர் வாழ்வை
விழையு மன்னிய ரோர் கணத் துற்றே
வென் றழிக்கும் விதி யறியா யோ?
குழைத லென்பது மன்னவர்க் கில்லை;
கூடக் கூடப் பின் கூட்டுதல் வேண்டும்;
பிழை யொன் றே யரசர்க் குண்டு, கண்டாய்:
பிறரைத் தாழ்த்து வதிற் சலிப் பெய்தல். (100)

### வேறு.

'வெல் வதெங் குலத்தொழிலாம்;—எந்த
விதத்தினி லிசையினுந் தவறிலை காண் !
நல் வழி தீய வழி—என
நாமதிற் சோதனை செயத் தகு மோ?
செல் வழி யாவினு மே—பகை
தீர்த்திடல் சாலு மென்றனர் பெரியோர்;
கொல்வது தான் படை யோ?—பகை
குமைப்பன யாவு நற் படை யலவோ? (101)

## வேறு.

சுற்றத்தா ரிவ ரென்றனை யையா!
'தோற்றத்தா லும் பிறவியினா லும்,
பற்றலா ரென்று நண்பர்க ளென்றும்
பார்ப்ப தில்லை யுலகினில் யாரும்;
மற் றெத்தா லும் பகை யுற வில்லை;
வடிவி னில்லை, யளவினி லில்லை;
உற்ற துன்பத்தினாற் பகை யுண்டாம்,
ஓர் தொழில் பயில் வார் தமக் குள்ளே. (102)

'பூமித் தெய்வம் விழுங் கிடுங் கண்டாய்
புரவலர் பகை காய் கிலர் தம்மை.
நா மிப்பூ தலத் தே குறை வெய்த
நா னும் பாண்டவ ரே று கின்று ரால்.
நேமி மன்னர் பகை சிறி தென் றே
நினை வயர்ந் திருப்பா ரெனில், நோய் போல்,
சாமி, யந்தப் பகை மிக வூற்றே
சடிதி மாய்த்திடு மென்ப துங் காணாய். (103)

'போர்செய் வோமெனில் நீ தடுக் கின்றாய்;
புவியினோ ரும் பழி பல சொல்வார்;
தார் செய் தோ ளிளம் பாண்டவர் தம்மைச்
சமரில் வெல்வது மாங் கெளி தன் றாம்;
யார் செய் புண்ணியத் தோ நமக் குற்றான்
எங்களா ருயிர் போன்ற விம் மாமன்;
நேர் செய் சூதினில் வென் று தருவான்;
நீதித் தர்மனுஞ் சூதி லன் புள்ளோன். (104)

'பகைவர் வாழ்வினி லின் புறு வாயோ?
பாரதர்க்கு முடி மணி யன்றாய்!
புகையு மென்ற னுளத்தினை வீறில்
புன் சொற் கூறி யவித்திட லாமோ?
நகை செய் தார் தமை நாளை நகைப்போம்;
நம ரிப் பாண்டவ ரென்னி லிந்தாலே
மிகை யுறுந் துன்ப மேது? நம் மோடு
வே றுறு தமைச் சார்ந்து நன் குய்வார். (105)

'ஐய, சூதிற் கவரை யழைத்தால்,
ஆடி யுய்குதும்; அஃதியற் றாயேல்,
(பொய் யன் றென் னுரை; என் னியல் போர்வாய்;
பொய்ம்மை வீ றென்றுஞ் சொல்லிய துண்டோ?)
மைய நின் முன ரென் சிரங் கொய் தே
நா னிங் காவி யிறுத் திடு வேனால்;
செய்ய லாவது செய்குதி' யென்றான்;
திரித ராட்டிர னெஞ்ச முடைந்தான். (106)

## திரிதராட்டிரன் ஸம்மதித்தல்.

### வேறு

'விதி செயும் வினை வினுக்கே—இங்கு
வேறு செய்வார் புவிமீ துளரோ?
மதி செறி விதுர னன்றே—இது
வருந் திற னறிந்து முன் னெனக் குரைத்தான்.
"அதிசயக் கொடுங் கோலம்—விளைந்
தரசர் தங் குலத்தினை யழிக்கு" மென்றான்;

சதி செயத் தொடங்கி விட்டாய் ;—"நின்றன்
சதியினிற் றனது விளையு" மென்றான். (107)

'விதி ! விதி ! விதி ! மகனே—இனி
வேறெது சொல்லுவ னடா மகனே !
கதி யுறுங் கால னன்றோ—இந்தக்
கய மகனென நினைச் சார்ந்து விட்டான் ?
கொதி யுறு முளம் வேண்டா ;—நின்றன்
கொள்கையின் படி யவர் தமை யழைப்பேன் ;
வதி யுறு மனை செல்வாய்,'—என்று
வழியுங் கண்ணீரொடு விடை கொடுத்தான். (108)

## சபா நிர்மாணம்.

### வேறு.

மஞ்சனு மாமனும் போயின பின்னர்,
மன்னன் வினைஞர் பலரை யழைத்தே,
'பஞ்சவர் வேள்வியிற் கண்டது போலப்
பாங்கி னுயர்ந்த தொர் மண்டபஞ் செய்வீர் !
மிஞ்சு பொருளதற் காற்றுவன்' என்றான் ;
மிக்க வுவகையொ டாங்கவர் சென்றே
கஞ்ச மலரிற் கடவுள் வியப்பக்
கட்டி நிறுத்தினர் பொற் சபை யொன்றே. (109)

### வேறு.

வல்லவ னாக்கிய சித்திரம் போலும்,
வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்,

நல்ல தொழி லுணர்ந் தார் செய லென்றே
நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லையு மண்ணையும் பொன்னையுங் கொண்டு
காமர் மணிகள் சில சில சேர்த்துச்
சொல்லை யிசைத்துப் பிறர் செயுமாறே
சுந்தர மா மொரு காபபியஞ் செய் தார். (110)

## விதுரனைத் தூதுவிடல்.

தம்பி விதுரனை மன்ன னழைத்தான்;
'தங்க பரிசுகள் கொண்டினி தேகி,
யெம்பியின் மக்க ளிருந் தர சாளும்
இந்திர மா நகர் சார்ந் தவர் தம் பால்,
"கொம்பினை யொத்த மடப் பிடி யோடும்
கூடி யிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி யழைத்தனன், கௌரவர் கோமான்
நல்ல தொர் நுந்தை" யென வுரை செய்வாய். (111)

'நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறும்
நன் மணி மண்டபஞ் செய்ததுஞ் சொல்வாய்;
"நீடு புகழ்ப் பெரு வேள்வியி லந் நாள்
நேய மொ டேகித் திரும்பிய பின்னர்
பீடுறு மக்களை யோர் முறை யிங்கே
பேணி யழைத்து விருந்துக ளாற்றக்
கூடும் வயதிற் கிழவன் விரும்பிக்
கூறின னிஃதெ"னச் சொல்லுவை. கண்டாய் (112)

'பேச்சி னிடையிற் "சகுனி சொற் கேட்டே
பே யெனும் பிள்ளை கருத்தினிற் கொண்ட
தீச் செய லிஃதெ"ன் றதையுங் குறிப்பாற்
செப்பிடுவாய்' என மன்னவன் கூறப்
'போச்சுது! போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!
ஆச்சரி யக் கொடுங் கோலங்கள் காண்போம்;
ஐய, இதனைத் தடுத்த லரிதோ?' (113)

என்று விதுரன் பெருந் துயர் கொண்டே
ஏங்கிப் பலசொ லியம்பிய பின்னர்,
'சென்று வருகுதி, தம்பி, யினிமேல்
சிந்தனை யேது மிதிற் செய மாட்டேன்.
வென்று படுத்தனன் வெவ் விதி யென்னை;
மேலை விளைவுகள் நீ யறி யாயோ?
அன்று விதித்ததை யின்று தடுத்தல்
யார்க்கெளி' தென்றுமெய் சோர்ந்துவிழுந்தான். (114)

## விதுரன் தூது செல்லுதல்.

### வேறு.

அண்ண னிடம் விடை பெற்று விதுரன் சென்றான்;
அடவி மலை யா றெல்லாம் கடந்து போகித்
திண்ண முறு தடந் தோளும் உளமுங் கொண்டு
திரு மலியப் பாண்டவர் தா மரசு செய்யும்
வண்ண முயர் மணி நகரின் மருங்கு செல்வான்
வழி யிடையே நாட்டி னுறு வளங்க ணோக்கி

எண்ணமுற லாகித் தனிதயத் துள்ளே
யின்னய பல மொழி கூறி யிரங்கு வானல். (115)

'நீல முடி தரித்த பல மலை சேர் நாடு,
நீரமுத மெனப் பாய்ந்து நிரப்பு நாடு,
கோல முறு பயன் மரங்கள் செறிந்து வாழுங்
குளிர் காவுஞ் சோலைகளுங் குலவு நாடு,
ஞால மெலாம் பசி யின்றிக் காத்தல் வல்ல
நன் செய்யும் புன் செய்யும் நல மிக் கோங்கப்
பா லடையு நறு நெய்யுந் தேனு முண்டு
பண்ணவர் போல் மக்க ளெலாம் பயிலு நாடு, (116)

'அன்னங்கள் பொற் கமலத் தடத்தி னூர
அளி முரலக் கிளி மழலை யரற்றக் கேட்போர்
கன்னங்க ளமு தூறக் குயில்கள் பாடும்
கா வினத்து நறு மலரின் கமழ் முத் தென்றல்
பொன் னங்க மணி மடவார் மாட மீது
புலவி செயும் போழ்தினிலே போந்து வீச,
வன்னங் கொள் வரைத் தோளார் மகிழ, மாதர்
மையல் விழி தோற்று விக்கும் வண்மை நாடு, (117)

'பே ரறமும் பெருந் தொழிலும் பிறங்கு நாடு,
பெண்க ளெல்லாம் அரம்பையர் போ லொளிரு நாடு,
வீர மொடு மெய்ஞ் ஞானந் தவங்கள் கல்வி
வேள்வி யெனு மிவை யெல்லாம் விளங்கு நாடு,
சோர முதற் புன்மை யெதுந் தோன்று நாடு.
தொல் லுலகின் முடி மணி போல் தோன்று நாடு,

பாரதர் தந் நாட்டிலே நாச மெய்தப்
பாவியேன் துணை புரியும் பான்மை யென்னே!' (118)

## விதுரனை வரவேற்றல்.

### வேறு.

விதுரன் வருஞ் செய்தி தாஞ் செவி யுற்றே,
வீ றுடை யைவ ருள மகிழ்பூத்துச்
சதுரங்க சேனை யுடன் பல பரிசும்
தாளமு மேளமுந் தாங் கொண்டு சென்றே
எதிர் கொண் டழைத்து, மணி முடி தாழ்த்தி,
யேந் தல் விதுரன் பத மலர் போற்றி,
மதுர மொழியிற் குசலங்கள் பேசி,
மன்ன னெடுந் திரு மாளிகை சேர்ந்தார். (119)

குந்தி யெனும் பெயர்த் தெய்வதந் தன்னைக்
கோ மகன் கண்டு வணங்கிய பின்னர்,
வெந் திறல் கொண்ட துருபதன் செல்வம்
வெள்கித் தலை குனிந் தாங்கு வந் தெய்தி,
அந்தி மயங்க விசும் பிடைத் தோன்றும்,
ஆசைக் கதிர் மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்த தொர் மாம னடிக் கண்
வைத்து வணங்கி வனப் புற நின்றாள். (120)

தங்கப் பதுமை யென வந்து நின்ற
தையலுக் கைய னல் லாசிகள் கூறி
அங்கங் குளிர்ந் திட வாழ்த்திய பின்னர்,
ஆங்கு வந் துற்ற வுறவினர் நண்பர்

சிங்க மெனத் திகழ் வீரர் புலவர்
சேவகர் யாரொடுஞ் செய்திகள் பேசிப்
பொங்கு திருவி னகர் வலம் வந்து
போழ்து கழிந் திர வாகிய பின்னர், (121)

## விதுரன் அழைத்தல்

ஐவர் தமையுந் தனிக் கொண்டு போகி,
ஆங் கொரு செம் பொன் னரங்கி லிருந்தே:—
'மை வரைத் தோளன், பெரும் புக ழாளன்,
மா மகள் பூ மகட் கோர் மண வாளன்,
மெய் வரு கேள்வி மிகுந்த புலவன்,
வேந்தர் பிரான், திரி தாட்டிரக் கோமான்
தெய்வ நலங்கள் சிறந் திட உம்மைச்
சீ ரொடு நித்தலும் வாழ் கென வாழ்த்தி, (122)

'உங்களுக் கென் னிடஞ் சொல்லி விடுத்தான்
ஓர் செய்தி; மற் றஃ துரைத் திடக் கேளீர்!
மங்களம் வாய்ந்த ந லத்தி புரத்தே
வையக மீதி லிணை யற்ற தாகத்
தங்கு மெழிற் பெரு மண்டப மொன்று
தம்பியர் சூழ்ந்து சமைத்தனர், கண்டீர்!
அங் கதன் விந்தை யழகினைக் காண
அன் பொடு நும்மை யழைத்தனன் வேந்தன். (123)

'வேள் விக்கு நாங்க ளனைவரும் வந்து
மீண்டு பல தின மாயின வேனும்,

வாள் வைக்கு நல்விழி மங்கை யொடேநீர்
வந் தெங்க ளூரில் மறு விருந் தாட
நாள் வைக்குஞ் சோதிடரா லிது மட்டும்
நாயக னும்மை யழைத் திட வில்லை ;
கேள்விக் கொருமிதிலாதிப னொத்தோன்
கேடற்ற மாத மிது வெனக் கண்டே (124)

‘ வந்து விருந்து களித் திட நும்மை
வாழ்த்தி யழைத்தனன், என் னருமக்காள் !
சந்து கண்டே யச் சகுனி சொற் கேட்டுத்
தம்மை யிழந்த சுயோதன மூடன்
விந்தை பொருந்திய மண்டபத் தும்மை
வெய்ய புன் சூது களித் திடச் செய்யும்
மந்திர மொன்று மனத்திடைக் கொண்டான் ;
வன்ம மிதுவு நுமக் கறி வித்தேன்.’ (125)

## தருமபுத்திரன் பதில்.

என்று விதுர னியம்பத் தருமன்
எண்ணங் கலங்கிச் சில சொ லுரைப்பான் ;
‘ மன்று புனைந்தது கேட்டு மிச் சூதின்
வார்த்தையைக் கேட்டு மிங் கென் றன் மனத்தே
சென்று வருத்தம் உளைகின்ற தையா ;
சிந்தையி லையம் விளைகின்ற தையா ;
நன்று நமக்கு நினைப்பவ னல்லன் ;
நம்ப லரிது சுயோதனன் றன்னை. (126)

"கொல்லக் கருதிச் சுயோதனன் முன்பு
குத்திர மான சதி பல செய்தான்;
சொல்லப் படாத தவறெலமக் கான
துன்ப மனைத்தையு நீ யறியா யோ?
வெல்லக் கடவ ரெவ ரென்ற போதும்
வேந்தர்கள் சூதை விரும்பிட லாமோ?
தொல்லைப் படுமென் மனந் தெளி வெய்தச்
சொல்லுதி நீ யொரு சூழ்ச்சி யிங்' கென்றான். (127)

## விதுரன் பதில்.

### வேறு.

விதுர னுஞ் சொல்லு கிறான்:—'இதை
விட மெனச் சான்றவர் வெருளுவர் காண்;
சது ரெனக் கொள்ளுவ ரோ?—இதன்
தாழ்மை யெலா மவர்க் குரைத்து விட்டேன்;
இது மிகத் தீதென்றே—அண்ணன்
எத்தனை சொல்லியு மிள வரசன்,
மது மிகுத் துண்டவன் போல்,—ஒரு
வார்த்தையை யேபற்றிப் பிதற்றுகிறான். (128)

'கல் லெனி லிணங்கி விடும்,—அண்ணன்
காட்டிய நீதிகள் கணக் கில வாம்;
புல்ல னிங் கவற்றை யெலாம்—உளம்
புகுத வொட்டாது, தன் மடமையினால்
சல்லியச் சூதினிலே—மனந்
தளர் வற நின்றிடுந் தகைமை சொன்னேன்;

சொல்லிய குறிப் பறிந்தே—நலந்
தோன்றிப வழி யினைத் தொடர்க' வென்ருன். (129)

## தருமபுத்திரன் தீர்மானம்.

தருமனு மிவ்வள வில்—உளத்
தளர்ச்சியை நீக்கி யொ ருறுதி கொண்டே
பருமங் கொள் குரலின ஞய்—மொழி
பதைத்திட லின்றி யிங் கிவை யுரைப்பான்:
'மருமங்க ளெவை செயினும்,—மதி
மருண்டவர் விருந் தறஞ் சிதைத் திடினும்,
கருமமொன் றே யுள தாம்—நங்கள்
கடன்; அதை நெறிப் படி புரிந் திடுவோம். (130)

'தந்தை யும் வரப் பணிந்தான்;—சிறு
தந்தை யுந் தூது வந் ததை யுரைத்தான்;
சிந்தை யொன் றினி யில்லை'—எது
சேரினு நல மெனத் தெளிந்து விட்டேன்.
முந்தை யச் சிலை ராமன்—செய்த
முடிவினை நம்மவர் மறப்பதுவோ?
நொந்தது செய மாட்டோம்;—பழ
நூலினுக் கிணங்கிய நெறி செலுவோம். (131)

'ஐம் பெருங் குரவோர் தாம்—தரும்
ஆணையைக் கடப்பது மற நெறியோ?
வெம் பெரு மத யானை—பரி
வியன் றேர் ஆளுட னிரு தினத்தில்

பைம் பொழி லத்தி நகர்—செலும்
பயணத்திற் குரியன புரிந் திடுவாய்,
மொய்ம் புடை விறல் வீமா!"—என
மொழிந்தன னற நெறி முழு துணர்ந்தான். (132)

## வீமனுடைய வீரப்பேச்சு.

வீமனுந் திகைத்து விட்டான்;—இள
விசயனை நோக்கி யிங் கிது சொலுவான்:
'மாமனு மருகனு மா—நமை
யழித்திடக் கருதி யிவ் வழி தொடர்ந்தார்.
தாமதஞ் செய்வோ மோ ?—செலத்
தகுந் தகு' மென விடி யுற நகைத்தான்;
'கோ மக னுரைப் படியே—படை
கொண்டு செல்வோ மொரு தடை யிலை காண்! (133)

'நெடு நாட் பகை கண்டாய்!—இந்த
நினைவினில் யான் கழித்தன பல நாள்;
கெடு நாள் வரு மளவும்—ஒரு
கிருமியை யழிப்பவ ருலகிலுண்டோ ?
படு நாட் குறி யன்றோ—இந்தப்
பாதக நினைப் பவர் நினைத்தது தான் ?
விடு நாண் கோத் திடடா!—தம்பி,
வில்லினுக் கிரை மிக விளையு தடா. (134)

'போரிடச் செல்வ மடா!—மகன்
புலைமையுந் தந்தையின் புலமைகளும்

யாரிட மவிழ்க்கின்றார்?—இதை
எத்தனை நாள் வரை பொறுத் திருப்போம்?
பாரிடத் திவரொடு நாம்—எனப்
பகுதியில் விரண்டிற் கும் கால மொன்றில்
நேரிட வாழ் வுண்டோ?—இரு
நெருப்பினுக் கிடையினி லொரு விறகோ?' (135)

## தருமபுத்திரன் முடிவுரை.

### வேறு.

வீம னுரைத்தது போலவே—உளம்
வெம்பி நெடுவில் விசயனும்—அங்கு
காமனுஞ் சாமனு மொப்பவே—நின்ற
காளை யிளைஞ ரிருவரும்—செய்ய
தாமரைக் கண்ணன் யுதிட்டிரன்—சொல்லைத்
தட்டிப் பணி வொடு பேசினார்;—தவ
நேமந் தவறலு முண்டுகொண்,—நரர்
நெஞ்சங் கொதித்திடு போழ்திலே. (136)

அன்பும் பணிவு முருக்கொண்டோர்—அனு
வாயினுந் தன்சொல் வழாதவர்—அங்கு
வன்பு மொழி சொலக் கேட்டனன்;—அற
மன்னவன் புன்னகை பூத்தனன்:—'அட!
முன்பு சுயோதனன் செய்ததும்—இன்று
மூண் டிருக்குங் கொடுங் கோலமும்—இதன்
பின்பு விளைவதுந் தேர்ந் துளேன்;—என்னைப்
பித்தனென் றெண்ணி யுரைத் திட்டீர்! (137)

'கைப் பிடி கொண்டு சுழற்றுவோன்—றன்
கணக்கிற் சுழன்றிடுஞ் சக்கரம்;—அது
தப்பி மிகையுங் குறையு மாச்—சுற்றும்
தன்மை யதற் குள தாகு மோ?—இதை
ஒப் பிட லாகும் புவியின் மேல்—என்றும்
உள்ள வுயிர்களின் வாழ்விற் கே;—ஒரு
செப்பிடு வித்தையைப் போல வே—புவிச்
செய்திகள் தோன் றிடு மாயினும், (138)

' இங்கிவை யாவுந் தவ றிலா—விதி
யேற்று நடக்குஞ் செயல் களாம்;—முடி
வெங்கணு மின்றி யெவற்றினும்—என்றும்
ஏறி யிடை யின்றிச் செல்வதாம்—ஒரு
சங்கிலி யொக்கும் விதி கண்டீர்!—வெறுஞ்
சாத்திர மன் றிது சத்தியம்;—நின்று
மங்கியோர் நாளி லழிவதா—நங்கள்
வாழ்க்கை யிதனைக் கடந்த தோ? (139)

'தோன்றி யழிவது வாழ்க்கை தான்;—இங்கு
துன்பத் தொ டின்பம் வெறுமையாம்—இவை
மூன்றி லெது வரு மாயினும்,—களி
மூழ்கி நடத்தல் முறை, கண்டீர்!—நெஞ்சில்
ஊன்றிய கொள்கை தழைப்ப ரோ,—துன்பம்
உற் றிடு மென்ப தொ ரச்சத்தால்?—விதி
போன்று நடக்கு முல கென் றே—கடன்
போற்றி யொழுகுவர் சான்றவர். (140)

'சேற்றி லுழலும் புழுவிற்கும்,—புவிச்
செல்வ முடைய வரசர்க்கும்,—பிச்சை
ஏற் றுடல் காத் திடு மேழைக்கும்,—உயிர்
எத்தனை யுண் டவை யாவிற்கும்,—நித்தம்
ஆற்றுதற் குள்ள கடமை தான்—முன் வந்
தவ் வக் கணந் தொறு நிற்கு மால்;—அது
தோற்றும் பொழுதிற் புரிகுவார்—பல
சூழ்ந்து கடமை யழிப்ப ரோ? (141)

'யாவருக் கும் பொது வாயினும்—சிறப்
பென்ப ரரசர் குலத்திற் கே—உயர்
தேவரை யொப்ப முன்னோர் தமைத்—தங்கள்
சிந்தையிற் கொண்டு பணிகுதல்;—தந்தை
ஏவலை மைந்தர் புரிதற் கே—வில்
லிராமன் கதையை யுங் காட்டினேன்;—புவிக்
காவலர் தம்மிற் சிறந்த நீர்—இன்று
கர்மம் பிழைத் திடுவீர் கொலோ?' (142)

## நால்வரும் சம்மதித்தல்.

### வேறு.

என் றினைய நீதி பல தரும ராசன்
எடுத் துரைப்ப, இளைஞர்களுந் தங் கை கூப்பிக்
'குன் றினிலே யேற்றி வைத்த விளக்கைப் போலக்
குவலயத்திற் கறங் காட்டத் தோன் றினை நீ!
வென் றி பெறுந் திரு வடியாய், நினது சொல்லை
மீறி யொரு செய லுண்டோ? ஆண்டா னாணை

யன்றி யறியார் தமக்குக் கடன் வே றுண்டோ?
ஐயனே, பாண்டவர் த மாவி நீ யே ! (143)

'துன்ப முறு மெமக் கென் றே யெண்ணி நின் வாய்ச்
சொல்லை மறுத் துரைத்தோ மோ? நின் பா லுள்ள
அன்பு மிகையா லன்றோ திரு வுளத்தின்
ஆக்கினையை யெதிர்த் துரைத்தோ மறி வில் லாமல்?
மன்பதையி னுளச் செயல்கள் தெளியக்கா ணும்
மன்னவ னே! மற் றிது நீ யறியா தொன் றோ?
வன்பு மொழி பொறுத் தருள்வாய், வாழி! நின் சொல்
வழிச் செல்வோம்,' எனக்கூறி வணங்கிச் சென்றார். (144)

## பாண்டவர் பயணமாதல்.

ஆங்கதன் பின் மூன்றா நா ளிளை ஞ ரோடும்
அணி யிழை யப் பாஞ்சாலர் விளக்கி னோடும்
பாங்கி னுறு பரிசனங்கள் பலவி னோடும்
படையி னொடும் இசையி னொடும் பயண மாகித்
தீங் கதனைக் கருதாத தருமக் கோமான்
திரு நகர விட் டகல்கின்றான் தீயோ ரூர்க்கே!
நீங்கி யகன் றிட லாகுந் தன்மை யுண்டோ,
நெடுங் கரத்து விதி காட்டு நெறியி னின்றே? (145)

நரி வகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவி விழும், சிற் றெறும்பால் யானை சாகும்,
வரி வகுத்த வுடற் புலியைப் புழுவுங் கொல்லும்,
வருங் கால முணர்வோரு மயங்கி நிற்பார்,

கிரி வகுத்த வோடையிலே மிதந்து செல்லும்,
கீழ் மேலா மேல் கீழாங் கிழக்கு மேற் காம்,
புரி வகுத்த முந் நூலார் புலையர் தம்மைப்
போற் றிடுவர், விதி வகுத்த போழ்தி னன்றே. (146)

## மாலை வருணனை.

மாலைப் போ தாதலு மே, மன்னன் சேனை
வழி யிடை யோர் பூம் பொழிலி னமர்ந்த காலை,
சேலைப் போல விழியாளைப் பார்த்தன் கொண்டு
சென் றங் கோர் தனி யிடத்தே பசும் புல் மேட்டில்
மேலைப் போம் பரிதியினைத் தொழுது கண்டான்;
மெல்லி யலு மவன் றொடை மேல் மெல்லச் சாய்ந்து
பாலைப் போல் மொழி பிதற்ற வவளை நோக்கிப்
பார்த்தனு மப் பரிதி யெழில் விளக்குகின்றான். (147)

'பா ரடியோ! வானத்திற் புதுமை யெல்லாம்,
பண்மொழீ! கணந் தோறு மாறி மாறி
ஓ ரடி மற் றோ ரடி யோ டொத்த லின்றி
உவகை யுற நவ நவமாத் தோன்றுங் காட்சி;
யா ரடி யிங் கிவை போலப் புவியின் மீதே
யென்ன ணரிய பொருள் கொடுத்து மியற்ற வல்லார்?
சீ ரடியாற் பழ வேத முனிவர் போற்றுஞ்
செழுஞ் சோதி வனப்பை யெலாஞ் சேரக் காண்பாய். (148)

'கணந் தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந் தோறும் வெவ் வேறு கனவு தோன்றும்;

கணந் தோறு நவ நவமாங் களிப்புத் தோன்றும்;
கருதிடவுஞ் சொல்லிடவு மெளிதோ? ஆங்கே,
கணந் தோறு மொரு புதிய வண்ணங் காட்டிக்
காளிபரா சக்தி யவள் களிக்குங் கோலம்
கணந்தோறு மவள் பிறப்பா ளென்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை யிங்குக் காண்பாய். (149)

'அடி வானத்தே யங்கு பரிதிக் கோளம்
அளப் பரிய விரைவி னொடு சுழலக் காண்பாய்;
இடி வானத் தொளி மின்னல் பத்துக் கோடி
யெடுத்தவற்றை யொன்று பட வுருக்கி வார்த்து,
முடி வான வட்டத்தைக் காளி யாங்கே,
மொய் குழலாய், சுழற்றுவதன் மொய்ம்பு காணாய்!
வடி வான தொன்றகத் தக டிரண்டு
வட்ட முறச் சுழலுவதை வளைந்து காண்பாய். (150)

'அமைதி யொடு பார்த் திடுவாய், மின்னே, பின்னே
அசை வுறு மோர் மின் செய்த வட்டு; முன்னே,
சமையு மொரு பச்சை நிற வட்டங் காண்பாய்;
தரணியி லிங் கிது போலோர் பசுமை யுண்டோ?
இமை குவிய மின் வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே யெழுதல் காண்பாய்;
உமை கவிதை செய்கின்றாள், எழுந்து நின்றே
உரைத் திடுவோம், "பல்லாண்டு வாழ்க" என்றே. (151)

வேறு.

'பார்! சுடர்ப் பரிதியைச் சூழவே படர் முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!

என் னடீ யிந்த வன்னத் தியல்புகள் !
எத்தனை வடிவம் ! எத்தனை கலவை !
தீயின் குழம்புகள் !—செழும் பொன் காய்ச்சி
விட்ட வோடைகள் !—வெம்மை தோன் ருமே
எரிந் திடுந் தங்கத் தீவுகள் !—பாரடீ !
நீலப் பொய்கைகள் !—அடடா, நீல
வன்ன மொன்றி லெத்தனை வகை யடீ !
எத்தனை செம்மை ! பசுமையுங் கருமையும்
எத்தனை !—கரிய பெரும் பெரும் பூதம் !
நீலப் பொய்கையின் மிதந் திடுந் தங்கத்
தோணிகள் சுடரொளிப் பொற் கரை யிட்ட
கருஞ் சிகரங்கள் !—கா ணடி, ஆங்கு
தங்கத் திமிங்கிலம் தாம் பல மிதக்கும்
இருட் கடல்!—ஆஹா ! எங்கு நோக் கிடினும்
ஒளித்திரள் ! ஒளித்திரள் ! வன்னக் களஞ்சியம்!' (152)

வேறு.

'செங்கதிர்த் தேவன் சிறந்த வொளியினைத்
[தேர்கின்ரும்—அவன்
எங்க ளறி வினைத் தூண்டி நடத்துக'
[என்பதோர்—நல்ல
மங்களம் வாய்ந்த சுருதி மொழிகொண்டு
[வாழ்த்தியே—இவர்
தங்க ளினங்க ளிருந்த பொழி லிடைச்
[சார்ந்தனர்;—பின்னர்

அங் கவ் விரவு கழிந்திட, வைகறையாதலும்,—மன்னர்
பொங்கு கட லொத்த சேனைகளோடு புறப்
பட்டே,—வழி
எங்குந் திகழு மியற்கையின் காட்சியி லின்
[புற்றே,—கதிர்
மங்கிடு முன்னொளி மங்கு நகரிடை வந்துற்றார். (153)

துரியோதனன்

**சூழ்ச்சிச் சருக்கம்**

முற்றிற்று.

ஓம்

# இரண்டாவது.

# சூதாட்டச் சருக்கம்.

## வாணியை வேண்டுதல்

தெளிவுற வே யறிந் திடுதல்,
தெளிவு தர மொழிந்திடுதல்; சிந்திப்பார்க்கே
களி வளர வுள்ளத்தி லானந்தக் கனவு பல
காட்டல் கண்ணீர்த்
துளி வர வுள் ளுருக்குதல், இங் கிவை யெல்லா
நீ யருளுந் தொழில்க ளன்றோ ?
ஒளி வளருந் தமிழ் வாணீ, அடியனேற்
கிவை யனைத்து முதவுவாயே. (154)

## பாண்டவர் வரவேற்பு.

அத்தின மா நகரத்தினில் வந்தனர்
ஆரியப் பாண்டவ ரென்றது கேட்டலும்,
தத்தி யெழுந்தன எண்ணருங் கூட்டங்கள்;
சந்திகள், வீதிகள், சாலைகள், சோலைகள்—
எத்திசை நோக்கினு மாந்தர் நிறைந்தனர்;
இத்தனை மக்களு மெங்க ணிருந்தனர்
இத்தின மட்டு மெனவியப் பெய்துற
எள்ளு விழற் கிட மின்றி யிருந்தார். (155)

மந்திர கீத முழக்கினர் பார்ப்பனர் ;
வன் றடந் தோள் கொட்டி யார்த்தனர் மன்னவர் ;
வெந் திறல் யானையுந் தேரும் குதிரையும்
வீதிகள் தோறு மொலி மிகச் செய்தன ;
வந்தியர் பாடினர், வேசைய ராடினர் ;
வாத்தியங் கோடி வகையி னொலித்தன ;
செந் திரு வாழு நகரினி லத் தினஞ்
சேர்ந்த வொலியைச் சிறி தென லாமோ ! (156)

வாலிகன் றந்த தோர் தேர் மிசை யேறி யம்
மன்னன் யுதிட்டிரன் தம்பியர் மாதர்கள்
நா லிய லாம் படை யோடு நக ரிடை
நல்ல பவனி யெழுந்த பொழுதினில்,
சே லியல் கண்ணியர் பொன் விளக் கேந்திடச்
சீரிய பார்ப்பனர் கும்பங்க ளேந்திடக்
கோலிய பூ மழை பெய்திடத் தோரணங்
கொஞ்ச, நக ரெழில் கூடிய தன் றே. (157)

**வேறு.**

மன்னவன் கோயிலி லே—இவர்
வந்து புகுந்தனர் வரிசை யொ டே.
பொன் னரங் கினி லிருந்தான்—கண்ணில்
புலவனைப் போய் நின்று போற்றிய பின்,
அன்னவ னாசி கொண் டே,—உயர்
ஆரிய வீட்டும னடி வணங்கி,
பின் னய முணர் கிருபன்—புகழ்
வீரத் துரோண னங் கவன் புதல்வன் (158)

மற்றுள பெரி யோர்கள்—தமை
வாழ்த்தி யுள்ளன் பொடு வணங்கி நின்றார் ;
கொற்ற மிக் குயர் கன்னன்—பணிக்
கொடியோ னிளையவர் சகுனி யோடும்
பொற் றடந் தோள் சருவப்—பெரும்
புகழினர் தழுவினர், மகிழ்ச்சி கொண்டார் ;
நற் றவக் காந்தாரி—முதல
நாரியர் தமை முறைப் படி தொழுதார். (159)

குந்தியு மிளங் கொடியும்—வந்து
கூடிய மாதர் தம் மொடு குலவி
முந்திய கதைகள் சொல்லி—அன்பு
மூண் டுரை யாடிப் பின் பிரிந்துவிட்டார் ;
அந்தியும் புகுந்தது வால்;—பின்னர்
ஐவரு முடல்வலித் தொழில் முடித்தே
சந்தியுஞ் சபங்களுஞ் செய்—தங்கு
சாரு மின் னுணவமு துண்டதன் பின், (160)

சந்தன மலர் புனைந்தே,—இளந்
தையலர் வீணை கொண் டுயி ருருக்கி
விந்தை கொள் பாட்டிசைப்ப,—அதை
விழை வொடு கேட்டனர் துயில் புரிந்தார் ;
வந்த தொர் துன்பத்தினை—அங்கு
மடித் திட லன்றிப் பின் வருந் துயர்க் கே
சிந்தனை யுழல்வாரோ?—உயர்ச்
சிதை வின்மை யாரியர் சிறப் பன்றோ? (161)

## பாண்டவர் சபைக்கு வருதல்.

பாணர்கள் துதி கூற—இளம்
பகலவ னெழு முணர்த் துயி லெழுந்தார்;
தோணலத் திணை யில்லார்—தெய்வந்
துதித்தனர்; செய்ய பொற் பட் டணிந்து
பூணணிந் தாயுதங்கள்—பல
பூண்டு பொற் சபை யிடைப் போந்தனரால்;
நாணமில் கவுரவருந்—தங்கள்
நாயக னொடு மங்கு வீற் றிருந்தார். (162)

வீட்டுமன் ரு னிருந்தான்;—அற
விதுர னும், பார்ப்பனக் குரவர்களும்,
நாட்டு மந்திரி மாரும்,—பிற
நாட்டினர் பலபல மன்னர்க ளும்,
கேட்டினுக் கிரை யாவான்—மதி
கெடுந் துரி யோதனன் கிளை யின ரும்,
மாட் டுறு நண்பர்க ளும்—அந்த
வான் பெருஞ் சபை யிடை வயங்கினின்றார். (163)

## சூதுக் கழைத்தல்.

புன் றொழிற் கவ றதனில்—இந்தப்
புவி மிசை யிணை யிலை யெனும் புகழான்,
நன் றறியாச் சகுனி,—சபை
நடு வினி லே றெனக் களித் திருந்தான்;
வென்றி கொள் பெருஞ்சூதர்—அந்த
விவிஞ்சதி சித்திர சேன னுடன்

குன்று சத்திய விரதன்—இதழ்
கூர் பருமித்திரன் சய னென்பார் (164)

சாலவு மஞ்சு தரும்—கெட்ட
சதிக் குணத்தார் பல மாயம் வல்லோர்
கோல நற் சபை தனிலே—வந்து
கொக்கரித் தார்ப்பரித் திருந்தனரால்;
மேலவர் தமை வணங்கி—அந்த
வெந்திறற் பாண்டவ ரிளைஞர் தமை
ஆல முற் றிடத் தழுவிச்—செம் பொன்
ஞதனத் தமர்ந்தவப் பொழுதினிலே, (165)

சொல்லுகின் ருன் சகுனி:—'அறத்
தோன்ற லுன் வரவினைக் காத்துளர் காண்
மல் லுறு தடந் தோளார்—இந்த
மன்னவ ரனைவரு நெடும் பொழு தா;
வில் லுறு போர்த் தொழிலாற்—புவி
வென்று தங் குலத்தினை மேம் படுத்தீர்!
வல் லுறு சூ தெனும் போர்—தனில்
வலிமைகள் பார்க்குதும் வருதி,' யென்ருன். (166)

## தருமன் மறுத்தல்.

தருமனங் கிவை சொல்வான்—'ஐய!
சதி யுறு சூதினுக் கெனை யழைத்தாய்;
பெருமை யிங் கிதி லுண்டோ?—அறப்
பெற்றி யுண்டோ? மறப் பீடுள தோ?

வருமம் நின் மனத் துடையாய்!—எங்கள்
வாழ்வினை யுகந் திலை யென லறிவேன்;
இருமையுங் கெடுப் பது வாம்—இந்த
இழி தொழிலா லெமை யழித்த லுற்றாய்.' (167)

## சகுனியின் ஏச்சு.

கல கல வெனச் சிரித்தான்—பழிக்
கவற்றை யொர் சாத்திர மெனப் பயின்றோன்;
'பல பல மொழிகுவ தேன்?—உனைப்
பார்த்திவ னென் றெண்ணி யழைத்து விட்டேன்,
"நில முழு தாட் கொண்டாய்—தனி
நீ" யெனப் பலர் சொலக் கேட்டதனால்;
சில பொருள் விளையாட்டிற்—செலுஞ்
செலவினுக் கழிகிலை யென நினைந்தேன். (168)

'பாரத மண்டலத்தார்—தங்கள்
பதி யொரு பிச்சனென் றறிவேனோ?
சோர மிங் கிதிலுண்டோ?—தொழில்
சூதெனி லாடுந ரரச ரன்றோ?
மாரத வீரர் முன்னே,—நடு
மண்டபத் தே, பட்டப் பகலினி லே,
சூர சிகாமணியே,—நின்றன்
சொத்தினைத் திருடுவ மெனுங் கருத் தோ? (169)

'அச்ச மிங் கிதில் வேண்டா,—விரைந்
தாடுவ செடும் பொழு தாயின தால்;

கச்சை யொர் நாழிகை யா—நல்ல
காயுடன் விரித் திங்கு கிடந் திடல் காண்!
நிச்சய நீ வெல்வாய்;—வெற்றி
நினக் கியல் பாயின தறியா யோ?
நிச்சய நீ வெல்வாய்;—பல
நினைகுவ தேன்? களி தொடங்கு' கென்றான். (170)

## தருமனின் பதில்.

### வேறு.

தோல் விலைக்குப் பசுவினைக் கொல்லும்
துட்ட னிவ் வுரை கூறுதல் கேட் டே,
நூல் விலக்கிய செய்கைக ளஞ்சும்
நோன்பி னோ னுள நொந்திவை கூறும்:
'தேவலப் பெயர் மா முனிவோ னும்
செய்ய கேள்வி யசிதனு முன்னர்
காவலர்க்கு விதித்த தந் நூலிற்
கவறு நஞ் செனக் கூறினர், கண்டாய்! (171)
' "வஞ்சகத்தினில் வெற்றியை வேண்டார்,
மாயச் சூதைப் பழியெனக் கொள்வார்,
அஞ்ச லின்றிச் சமர்க் களத் தேறி
யாக்கும் வெற்றி யதனை மதிப்பார்,
துஞ்ச னேரினுந் தூய சொல் லன்றிச்
சொல் மிலேச்சரைப் போ லென்றுஞ் சொல்வார்,
மிஞ்சு சீர்த்தி கொள் பாரத நாட்டில்
மேவு மாரிய"ரென்றனர் மேலோர். (172)

'ஆதலா லிந்தச் சூதனை வேண்டேன்!
ஐய, செல்வம் பெருமை யிவற்றின்
காத லால ரசாற்றுவ னல்லேன்;
காழ்த்த நல்லற மோங்கவு மாங்கே
ஓத லானு முணர்த்துத லானும்
உண்மை சான்ற கலைத் தொகை யாவும்
சாத லின்றி வளர்ந் திடு மாறும்,
சகுனி, யா னர சாளுதல், கண்டாய்! (173)

'என்னை வஞ்சித் தென் செல்வத்தைக் கொள்வோர்
என் றனக் கிடர் செய்பவ ரல்லர்,
முன்னை நின்ற தொர் நான் மறை கொல்வார்,
மூ துணர்விற் கலைத் தொகை மாய்ப்பார்,
பின்னை யென் னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யுங் கலியை யழைப்பார்;
நின்னை மிக்க பணிவொடு கேட்பேன்:
நெஞ்சிற் கொள்கையை நீக்குதி' யென்றான். (174)

## சகுனி வல்லுக் கழைத்தல்.

### வேறு.

'சாத்திரம் பேசுகின்றாய்'—எனத்
தழல்படு விழியொடு சகுனி சொல்வான்:
'கோத்திரக் குலமன்னர்—பிறர்
குறை படத் தம் புகழ் கூறுவரோ?
நாத்.திறன் மிக வுடையாய்!—எனில்
நம்மவர் காத் திடும் பழ வழக்கை

மாத்திர மறந்து விட்டாய்;—மன்னர்
வல்லினைக் கழைத்திடில் மறுப்ப துண்டோ? (175)

'தேர்ந்தவன் வென் றிடுவான்;—தொழில்
தேர்ச்சி யில்லாதவன் தோற் றிடுவான்;
நேர்ந் திடும் வாட் போரில்—குத்து
நெறி யறிந்தவன் வெலப் பிற னழிவான்;
ஓர்ந் திடு சாத்திரப் போர்—தனில்,
உணர்ந்த வன் வென் றிட, வுணரா தான்
சோர்ந் தழி வெய் திடுவான்;—இவை
சூ தென்றுஞ் சதி யென்றுஞ் சொல்வா ரோ? (176)

'வல்லவன் வென்றிடுவான்;—தொழில்
வன்மை யிலா தவன் தோற் றிடுவான்;
நல்லவ னல்லா தான்—என
நாண மிலார் சொலுங் கதை வேண்டா;
வல லமர் செய்திடவே—இந்த
மன்னர் முன் னே நினை யழைத்து விட்டேன்;
சொல்லுக வருவ துண் டேல்,—மனத்
துணி விலே யே லதுஞ் சொல்லு' கென்றான். (177)

## தருமன் இணங்குதல்.

### வேறு.

வெய்ய தான விதியை நினைந்தான்
விலக் கொணு தற மென்ப துணர்ந்தோன்;
பொய்ய தாகுஞ் சிறு வழக் கொன்றைப்
புல னிலா தவர் தம் முடம் பாட்டை

ஐய னெஞ்சி லற மெனக் கொண்டான்.
ஐயகோ! அந்த நான்முக லாகத்
துய்ய சிந்தைய ரெத்தனை மக்கள்
துன்ப மிவ் வகை யெய்தின ரம்மா! (178)

முன் பிருந்த தொர் காரணத் தாலே,
மூட ரே, பொய்யை மெய் யென லாமோ?
முன் பெனச் சொலுங் கால மதற்கு,
மூட ரே, யொர் வரையறை யுண் டோ?
முன் பெனச் சொலி னேற்று முன் பே யாம்;
மூன்று கோடி வருடமு முன்பே;
முன் பிருந் தெண்ணிலாது புவி மேல்
மொய்த்த மக்க ளெலா முனிவோ ரோ? (179)

நீர் பிறக்கு முன் பார் மிசை மூடர்
நேர்ந்த தில்லை யென நினைந்தீ ரோ?
பார் பிறந்தது தொட் டின்று மட்டும்,
பல பலப் பல பற்பல கோடி
கார் பிறக்கு மழைத் துளி போலே
கண்ட மக்க ளனைவ ருள் ளேயும்,
நீர் பிறப்பதன் முன்பு, மடமை
நீசத் தன்மை யிருந்தன வன் றே? (180)

பொய் யொழுக்கை யற மென்று கொண்டும்,
பொய்யர் கேலியைச் சாத்திர மென்றும்,
ஐயகோ, நங்கள் பாரத நாட்டில்
அறி விலா ரறப் பற்று மிக் குள்ளோர்

நொய்ய ராகி யழிந்தவர் கோடி
நூல் வகை பல தேர்ந்து தெளிந்தோன்,
மெய் யறிந்தவர் தம்மு ளுயர்ந்தோன்—
விதியினாலத் தருமனும் வீழ்ந்தான். (181)

மதியி னும் விதி தான் பெரி தன்றோ?
வையமீ துள வாகு மவற்றுள்
விதியி னும் பெரிதோர் பொரு ளுண் டோ?
மேலை நாஞ் செயுங் கர்ம மல்லா தே,
நதியி லுள்ள சிறு குழி தன்னில்
நான் கு திக்கி லிருந்தும் பன்மாசு
பதியு மாறு, பிறர் செயுங் கர்மப்
பயனு நம்மை யடைவ துண்டன் றோ? (182)

## சூதாடல்.

### வேறு.

மாயச் சூதினுக் கே—ஐயன்
மன மிணங்கி விட்டான்;
தாய முருட்ட லானார்;—அங்கே
சகுனி யார்ப்பரித் தான்;
நேய முற்ற விதுரன்—போலே
நெறி யு ளோர்க ளெல்லாம்
வாயை மூடி விட்டார்;—தங்கள்
மதி மயங்கி விட்டார். (183)

அந்த வேளை யதனில்,—ஐவர்க்
கதிப னிஃ துரைப்பான் :
'பந்தயங்கள் சொல்வாய்;—சகுனி,
பரபரத் திடாதே!
விந்தை யான செல்வம்—கொண்ட
வேந்த ரோடு நீ தான்
வந் தெதிர்த்து விட்டாய்—எதிரே
வைக்க நிதிய முண் டோ?' (184)

தருமன் வார்த்தை கேட்டே—துரியோ
தன னெழுந்து சொல்வான் :
'அருமை யான செல்வம்—என்பால்
அள விலாத துண்டு ;
ஒரு மடங்கு வைத்தால்—எதிரே
ஒன் பதாக வைப்பேன் ;
பெருமை சொல்ல வேண்டா,—ஐயா,
பின் னடக்க' கென்றான். (185)

'ஒருவ னுடைப் பணயம்—வேறே
ஒருவன் வைப்ப துண் டோ ?
தரும மாகு மோடா,—சொல்வாய்,
தம்பி யிந்த வார்த்தை ?'
'வரும மில்லையை யா;—இங்கு
மாம னுடைப் பணயம்
மருகன் வைக் கொணு தோ?—இதிலே
வந்த குற்ற மே தோ?' (186)

'பொழுது போக்குதற் கே—சூதுப்
போர் தொடங்குகின்றோம்;
அழுத லே னிதற்கே?' என்றே
அங்கர் கோ னகைத்தான்.
'பழு திருப்ப தெல்லாம்—இங்கே
பார்த்திவர்க் குரைத்தேன்;
முழுது மிங் கிதற்கே—பின்னர்
முடிவு காண்பிர்' என்றான். (187)

ஒளி சிறந்த மணியின்—மாலை
ஒன்றை யங்கு வைத்தான்;
களி மிகுந்த பகைவன்—எதிரே
கன தனங்கள் சொன்னான்;
விழி யிமைக்கு முன் னே—மாமன்
வென்று தீர்த்து விட்டான்;
பழி யிலாத தருமன்—பின்னும்
பந்தயங்கள் சொல்வான்: (188)

'ஆயிரங் குடம் பொன்—வைத்தே
ஆடுவோ' மிதென்றான்;
மாயம் வல்ல மாமன்—அதனை
வசம தாக்கி விட்டான்.
'பாயுமா வொ ரெட்டில்—செல்லும்
பார மான பொற் றேர்'.
தாய முருட்ட லானார்;—அங்கே
சகுனி வென்று விட்டான். (189)

'இளைய ரான மாதர்,—செம்பொன்
எழி லிணைந்த வடிவம்
வளை யணிந்த தோளும்—மாலை
மணி குலுங்கு மார்பும்
விளையு மின்ப நூல்கள்—தம்மில்
மிக்க தேர்ச்சி யோடு
கலை யிலங்கு முகமும்—சாயற்
கவினு நன்கு கொண்டோர், (190)

ஆயிரக் கணக்கா—ஐவர்க்
கடிமை செய்து வாழ்வோர்'.
தாய முருட்டலானார்;—அந்தச்
சகுனி வென்று விட்டான்.
ஆயிரங்க ளாவார்—செம் பொன்
னணிகள் பூண்டிருப்பார்
தூயி ழைப் பொ னுடை—சுற்றுந்
தொண்டர் தம்மை வைத்தான்; (191)

சோர னங் கவற்றை—வார்த்தை
சொல்லு முன்னர் வென்றான்.
தீர மிக்க தருமன்—உள்ளத்
திட னழிந் திடா தே,
'நீரை யுண்ட மேகம்—போ லே
நிற்கு மாயிரங்கள்
வாரணங்கள் கண்டாய்—போரில்
மறலி யொத்து மோதும்' (192)

என்று வைத்த பணயந்—தன்னை
யிழிஞன் வென்று விட்டான்;
வென்றி மிக்க படைகள்—பின்னர்
வேந்தன் வைத் திழந்தான்;
நன் றிழைத்த தேர்கள்—போரின்
நடை யுணர்ந்த பாகர்
என் றிவற்றை யெல்லாம்—தருமன்
ஈடு வைத் திழந்தான். (193)

எண் ணிலாத, கண்டீர்,—புவியில்
இணை யிலாத வாகும்
வண்ண முள்ள பரிகள்—தம்மை
வைத் திழந்து விட்டான்;
நண்ணு பொற் கடாரந்—தம்மில்
நாலு கோடி வைத்தான்;
கண் ணிழப்பவன் போல்—அவையோர்
கண மிழந்து விட்டான். (194)

மா டிழந்து விட்டான்,—தருமன்
மந்தை மந்தை யாக;
ஆடிழந்து விட்டான்,—தருமன்
ஆளிழந்து விட்டான்;
பீடிழந்த சகுனி—அங்கு
பின்னுஞ் சொல்லு கின்றான்;
'நா டிழக்க வில்லை,—தருமா!
நாட்டை வைத்தி 'டென்றான் (195)

## நாட்டை வைத்தாடுதல்

### வேறு.

'ஐயகோ விதை யா தெனச் சொல்வோம்?
அரச ரானவர் செய்குவ தொன்றோ?
மெய்ய தாக வொர் மண்டலத் தாட்சி
வென்று சூதினி லாளுங் கருத் தோ?
வைய மிஃது பொறுத்திடு மோ, மேல்
வான்பொறுத் திடு மோ? பழி மக்காள்!
தூய்ய சீர்த்தி மதிக்குல மோ நாம்?
தூ!'வென் றெள்ளி விதுர னும் சொல்வான், (196)

'பாண்டவர் பொறை கொள்ளுவ ரேனும்,
பைந் துழாயனும் பாஞ்சாலத் தானும்
மூண்ட வெஞ் சினத் தோடு நஞ் சூழல்
முற்றும் வே ரறச் செய்குவ ரன்றோ?
ஈண் டிருக்குங் குரு குல வேந்தர்
யார்க்கு மிக் துரைப்பேன், குறிக் கொண்மின்:
"மாண்டு போரில் மடிந்து நரகில்
மாழ்கு தற்கு வகை செயல் வேண்டா." (197)

'குல மெலா மழி வெய் திடற் கன் றோ
குத்திரத் துரி யோதனன் றன்னை
நல மிலா விதி நம்மிடை வைத்தான்;
ஞால மீதி லவன் பிறந் தன்றே
அலறி யோர்நரி போற் குரைத் திட்டான்;
அஃ துணர்ந்த நிமித்திகர் "வெய்ய

கலகந் தோன்று மிப் பாலகனாலே
காணுவீ'' ரெனச் சொல் லிடக் கேட்டோம். (198)

'சூதிற் பிள்ளை கெலித்திடல் கொண்டு
சொர்க்க போகம் பெறுபவன் போலப்
பேதை நீயு முக மலர் வெய்திப்
பெட்பு மிக் குற வீற்றிருக்கின்றாய்;
மீது சென்று மலை யிடைத் தேனில்
மிக்க மோகத்தி னாலொரு வேடன்
பாத மாங்கு நழுவிட மாயும்
படு மலைச் சரி வுள்ளது காணாய். (199)

'மற்று நீரு மிச் சூதெனுங் கள்ளால்
மதி மயங்கி வரும் செயல் காணீர்!
முற்றும் சாதி சுயோதன னுமோர்
மூடற் காக முழு கிட லா மோ?
பற்று மிக்க விப் பாண்டவர் தம்மைப்
பாதகத்தி லழித் திடு கின்றாய்;
கற்ற கல்வியுங் கேள் வியு மண்ணே
கடலிற் காயங் கரைத்த தொப் பாமே? (200)

'வீட்டுளே நரியை விடப் பாம்பை
வேண்டிப் பிள்ளை யென வளர்த் திட்டோம்;
நாட்டு ளே புக ழோங் கிடு மா றிந்
நரியை விற்றுப் புலிகளைக் கொள்வாய்.
மோட்டுக் கூகையைக் காக்கையை விற்று
மொய்ம்பு சான்ற மயில்களைக் கொள்வாய்;

கேட்டிலே களி யோடு செல் வாயோ ?
கேட்கும் காது மிழந்து விட்டா யோ ? (201)

' தம்பி மக்கள் பொருள் வெஃகுவா யோ
சாதற் கான வயதினி லண்ணே ?
நம்பி நின்னை யடைந்தவ ரன் றோ ?
நாத னென் றுனைக் கொண்டவ ரன்றோ ?
எம்பிரா னுளங் கொள்ளுதி யாயின்
யாவுந் தான மெனக் கொடுப்பா ரே !
கும்பி மாநர கத்தினி லாழ்த்துங்
கொடிய செய்கை தொடர்வது மென் னே ? (202)

' குரு குலத் தலைவன் சபைக் கண்ணே,
கொற்ற மிக்க துரோணன் கிருபன்
பெருகு சீர்த்தி யக் கங்கையின் மைந்தன்
பேதை நானு மதிப் பிழந் தேகத்
திருகு நெஞ்சச் சகுனி யொருவன்
செப்பு மந்திரஞ் சொல்லுத னன்றே !
அருகு வைக்கத் தகுதியுள் ளாரோ ?
அவனை வெற் பிடைப் போக்குதி யண்ணே ! (203)

'நெறி யிழந்த பின் வாழ்வதி லின்பம்
நேரு மென்று நினைத் திடல் வேண்டா.
பொறி யிழந்த சகுனியின் சூதாற்
புண்ணி யர் தமை மாற்றல ராக்கிச்
சிறியர் பாதக ரென் றுல கெல்லாம்
சீ யென் றேச வுகந் தரசாளும்

வறிய வாழ்வை விரும் பிட லாமோ ?
வாழி, சூதை நிறுத்துதி' யென்றான். (204)

### சூதாட்டச் சருக்கம்
முற்றிற்று.

---

## முதற் பாகம்
முற்றிற்று.

---

ஓம் சக்தி.

# பாஞ்சாலி சபதம்.

## இரண்டாம் பாகம்

ஓம் சக்தி.

### பராசக்தி வணக்கம்.

ஆங்கொரு கல்லை வாயிலிற் படியென்
றமைத்தனன் சிற்பி, மற்றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்தினான். உலகினோர் தாய் நீ;
யாங்கணே, எவரை, எங்ஙனஞ் சமைத்தற்
கெண்ணமோ, அங்ஙனஞ் சமைப்பாய்.
ஈங்குனைச் சரணென் றெய்தினேன்; என்னை
இருங்கலைப் புலவ னாக்குதியே. (1)

### ஸரஸ்வதி வணக்கம்.

இடையின்றி அணுக்களெலாஞ் சுழலுமென இயல்
[நூலார் இசைத்தல் கேட்டோம்;
இடையின்றிக் கதிர்களெலாஞ் சுழலுமென வானூ
[லார் இயம்புகின்றார்.
இடையின்றித் தொழில் புரிதல் உலகினிடைப்
[பொருட்கெல்லாம் இயற்கை யாயின்,
இடையின்றிக் கலைமகளே நினதருளில் எனதுள்ளம்
[இயங்கொணாதோ (2)

## மூன்ருவது: அடிமைச் சருக்கம்

### விதுரன் சொல்லியதற்குத் துரியோதனன் மறுமொழி சொல்லுதல்

அறிவு சான்ற விதுரன் சொற் கேட்டான்
அழலு நெஞ்சி னரவை யுயர்த்தான்.
நெறி யுரைத் திடு மேலவர் வாய்ச் சொல்
நீச ரானவர் கொள்ளுவ துண்டோ ?
பொறி பறக்க விழிக ளிரண்டும்
புருவ மாங்கு துடிக்கச் சினத்தின்
வெறி தலைக்க, மதி மழுங்கிப் போய்
வேந்த னிஃது விளம்புத லுற்ருன்: (3)

### வேறு.

'நன்றி கெட்ட விதுரா, சிறிதும்
நாண மற்ற விதுரா,
தின்ற உப்பினுக் கே நாசந்
தேடுகின்ற விதுரா,
அன்று தொட்டு நீயும் எங்கள்
அழிவு நாடுகின்ருய்;
மன்றி லுன்னை வைத்தான் எந்தை
மதியை யென் னுரைப்பேன் ! (4)

' ஐவருக்கு நெஞ்சும் எங்கள்
அரமனைக்கு வயிறும்,

தெய்வ மன் றுனக்கே, விதுரா,
செய்து விட்டதே யோ?
மெய் வகுப்பவன் போல், பொதுவாம்
விதி யுணர்ந்தவன் போல்,
ஐவர் பக்க நின் றே,—எங்கள்
அழிவு தேடு கின்ருய். (5)
மன்னர் சூழ்ந்த சபையில்—எங்கள்
மாற்றலார்க ளோடு
முன்னர் நாங்கள் பணயம்—வைத்தே
முறையில் வெல்லுகின்ருேம்
என்ன குற்றங் கண்டாய்?—தருமம்
யார்க் குரைக்க வந்தாய்?
கன்னம் வைக்கிருே மோ?—பல்லைக்
காட்டி யேய்க்கி ருே மோ? (6)
பொய் யுரைத்து வாழ்வார்;—இதழிற்
புக ழுரைத்து வாழ்வார்,
வைய மீதி லுள்ளார்;—அவர் தம்
வழியில் வந்த துண் டோ?
செய் யொணுத செய்வார்—தம்மைச்
சீருறுத்த நாடி,
ஐய, நீ யெழுந்தால்—அறிஞர்
அவல மெய்தி டா ரோ? (7)
அன் பிலாத பெண் ணுக்—கிதமே
ஆயிரங்கள் செய்தும்,
முன்பி ணென்ணு வா ளோ?—தருணம்
மூண்ட போது கழிவாள்.

வன்புரைத்தல் வேண்டா,—எங்கள்
வலி பொறுத்தல் வேண்டா,
இன்பமெங்க ளுண்டோ,—அங்கே
ஏகி' டென் றுரைத்தான். (8)

## விதுரன் சொல்வது.

### வேறு.

நன் ருகு நெறியறியா மன்ன னங்கு
நான்கு திசை யரசர் சபை நடுவே, தன்னைக்
கொன்ருலு மொப்பாக வடுச் சொற் கூறிக்
குமைவதனி லனுவளவுங் குழப்ப மெய்தான்;
'சென்ருலு மிருந்தாலு மினி யென்னேடா?
செய்கை நெறியறியாத சிறியாய், நின்னைப்
பொன்ருத வழி செய்ய முயன்று பார்த்தேன்;
பொல்லாத விதி யென்னைப் புறங் கண்டானல்! (9)

'கடுஞ் சொற்கள் பொறுக்காத மென்மைக் காதும்
கருங் கல்லில் விடந் தோய்த்த நெஞ்சுங் கொண்டோர்
படுஞ் செய்தி தோன்றுமுனே படுவர் கண்டாய்.
"பால் போலுந் தேன் போலு மினிய சொல்லோர்
இடும்பைக்கு வழி சொல்வார்; நன்மை காண்பார்
இளகு மொழி கூறு"ரென் நினைத்தே தானும்,—
நெடும் பச்சை மரம் போலே வளர்ந்து விட்டாய்—
நினக் கெவருங் கூறியவ ரில்லை கொல்லோ? (10)

'நலங் கூறி யிடித் துரைப்பார் மொழிகள் கேளா
நரபதி, நின் னவைக் களத்தே யமைச்ச ராக

வலங் கொண்ட மன்னரொடு பார்ப்பார் தம்மை
வைத் திருத்தல் சிறிதேனுந் தகாது கண்டாய்.
சிலங்கைப் பொற் கச் சணிந்த வேசை மாதர்
சிறுமைக்குத் தலை கொடுத்த தொண்டர், மற்றுங்
குலங் கெட்ட புலை நீசர், மூடவர், பித்தர்,
கோ மகனே, நினக் குரிய அமைச்சர் கண்டாய்! (11)

'சென்றதுவு நின்றதுவு மினி யென் னேடா?
செப்புவன நினக் கென நான் செப்பினேனே?
மன் றாத நிறைந் திருக்கு மன்னர், பார்ப்பார்,
மதி யில்லா மூத்தோனு மறியச் சொன்னேன்.
இன் றேடு முடிகுவதோ? வருவ தெல்லாம்
யா னறிவேன், வீட்டுமனு மறிவான், கண்டாய்.
வெனறு ளுள் ளாசை யெலாம் யோகி யாகி
வீட்டுமனு மொன் றுரையா திருக்கின்றனே. (12)

'விதி வழி நன் குணர்ந் திடினும், பேதையேன் யான்
வெள்ளை மன முடைமையினால், மக னே, நின்றன்
சதி வழியைத் தடுத் துரைகள் சொல்லப் போந்தேன்.
சரி, சரி, யிங் கே துரைத்தும் பய னொன் றில்லை.
மதி வழியே செல்லு'கென விதுரன் கூறி
வாய் மூடித் தலை குனிந்தே யிருக்கை கொண்டான்.
பதி வுறுவோம் புவியி லெனக் கலி மகிழ்ந்தான்,
பார தப் போர் வரு மென்று தேவ ரார்த்தார். (13)

## சூது மீட்டுந் தொடங்குதல்.

### வேறு.

கா யுருட்ட லானார்—சூதுக்
களி தொடங்க லானார்.

'மாய முள்ள சகுனி—பின்னும்
வார்த்தை சொல்லுகின்றான்:—
'நீ யழித்த தெல்லாம்—பின்னும்
நின்னிடத்து மீளும்.
ஓய் வடைந் திடாதே,—தருமா!
ஊக்க மெய்து'கொன்றான். (14)

கோயிற் பூசை செய்வோர்—சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன்—வீட்டை
வைத் திழத்தல் போலும்,
ஆயிரங்க ளான—நீதி
யவை யுணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான்;—சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான். (15)

'நாட்டு மாந்த ரெல்லாம்—தம் போல்
நரர்க ளென்று கருதார்;
ஆட்டு மந்தை யா மென்'—றுலகை
அரச ரெண்ணி விட்டார்.
காட்டு முண்மை நூல்கள்—பல தாங்
காட்டினார்க ளேனும்,
நாட்டு ராஜ நீதி—மனிதர்
நன்கு செய்ய வில்லை. (16)

ஓரஞ் செய் திடாமே;—தருமத்
துறுதி கொன் றிடா மே,
சோரஞ் செய் திடாமே,—பிறரைத்
துயரில வீழ்த் திடாமே,

ஊரை யாளு முறைமை—உலகில
ஓர் புறத்து மில்லை.
ஸார மற்ற வார்த்தை!—மேலே
சரிதை சொல்லுகின்றோம். (17)

## சகுனி சொல்வது.

### வேறு.

'செல்வ முற் றிழந்து விட்டாய் ;—தருமா,
தேசமுங் குடிகளுஞ் சேர்த் திழந்தாய்.
பல் வள நிறை புவிக்கே—தருமன்
பார்த்திவ னென்ப தினிப் பழங் கதை காண் !
சொல்வ தோர் பொருள் கேளாய் ;—இன்னுஞ்
சூழ்ந் தொரு பணயம் வைத் தாடுதி யேல்,
வெல்வதற் கிட முண் டாம்;—ஆக கவ்
வெற்றியி லனைத்தையு மீட்டிட லாம். (18)

'எல்லா மிழந்த பின்னர்—நின்றன்
இளைஞரு நீரு மற் றெதிற் பிழைப்பீர் ?
பொல்லா விளையாட்டில்—பிச்சை
புக நினை விடுவதை விரும்புகிலோம்.
வல்லார் நின திளைஞர்—சூதில்
வைத் திடத் தகுந்தவர் பணய மென் றே ;
சொல்லால் உளம் வருந்தேல்;—வைத்துத்
தோற்றதை மீட்'டென்று சகுனி சொன்னான். (19)

### வேறு.

கருணனுஞ் சிரித்தான் ;—சபையோர்
கண்ணி னீருதிர்த்தார்.

இருணிறைந்த நெஞ்சன்,—களவே
பின்பமென்று கொண்டான்,
அரவுயர்த்த வேந்தன்—உவகை
ஆர்ந் தெழுந்து சொல்வான் ;
'பரவு நாட்டை யெல்லாம்—எதிரே
பணைய மாக வைப்போம். (20)

'தம்பிமாரை வைத்தே—ஆடித்
தருமன் வென்று விட்டால்,
முன்பு மாமன் வென்ற—பொருளை
முழுது மீண் டளிப்போம்.
நம்பி வேலை செய்வோம்;—தருமா,
நா டிழந்த பின்னர்,
அம்பி ணைத்த விழியாள்—உங்கள்
ஐவருக்கு முரியாள்— (21)

'அவ ளிகழ்ந்திடா ளோ?—அந்த
ஆயன் பேசுவானோ?
கவலை தீர்த்து வைப்போம்;—மேலே
களி நடக்கு' கென்றான்.
இவள வான பின்னும்—இளைஞர்
ஏதும் வார்த்தை சொல்லார்,
துவளு நெஞ்சினா ராய்—வதனந்
தொங்க வீற் றிருந்தார். (22)

வீமன் மூச்சு விட்டான்—முழையில்
வெய்ய நாகம் போலே;
காம னைத்த பார்த்தன்—வதனக்
களை யிழந்து விட்டான்;

நேம மிக்க நகுலன்,—ஐயோ!
நினை வயர்ந்து விட்டான்;
ஊமை போ லிருந்தான்—பின்னேன்
உண்மை முற் றுணர்ந்தான். (23)

கங்கை மைந்த னங்கே—நெஞ்சம்
கன லுறத் துடித்தான்;
பொங்கு வெஞ் சினத்தால்—அரசர்
புகை யுயிர்த் திருந்தார்;
அங்க நொந்து விட்டான்,—விதுரன்
அவல மெய்தி விட்டான்,
சிங்க மைந்தை நாய்கள்—கொலவுஞ்
செய்தி காண லுற்றே. (24)

## ஸஹாதேவனைப் பந்தயங் கூறுதல்.

### வேறு.

எப் பொழுதும் பிரமத்தி லே—சிந்தை
யேற்றி உலக மொ ராடல் போல்—எண்ணித்
தப் பின்றி யின்பங்கள் துய்த்திடும்—வகை
தா னுணர்ந்தான் ஸஹ தேவனும்—எங்கும்
ஒப்பில் புலவனை யாட்டத்தில்—வைத்தல்
உன்னித் தருமன் பணய மென்—றங்கு
செப்பினன் காயை யுருட்டினர்—அங்கு
தீய சகுனி கெலித்திட்டான். (25)

## நகுலனை யிழத்தல்.

நகுலனை வைத்து மிழந் திட்டான்;—அங்கு
நள் ளிருட் கண் ணொரு சிற் றொளி—வந்து

புகுவது போ லவன் புந்தியில்—'என்ன
புன்மை செய்தோம்?' என எண்ணினான்.—அவ்வெண்ண
மிகுவதன் முன்பு சகுனியும்—'ஐய,
வேறொரு தாயிற பிறந்தவர்—வைக்கத்
தகுவரென் றிந்தச் சிறுவரை—வைத்துத்
தாயத்தி லேயிழந் திட்டனை. (26)

'திண்ணிய வீமனும் பார்த்தனும்—குந்தி
தேவியின் மக்களு னையொத்தே—நின்னிற்
கண்ணிய மிக்கவ ரென்றவர்—தமைக்
காட்டுதற் கஞ்சினை போலும் நீ?'—என்று
புண்ணிய மிக்க தருமனை—அந்தப்
புல்லன் வினவிய போதினில்,—தர்மன்
துண்ணென வெஞ்சின மெய்தியே—'அட,
சூதி லரசிழந் தேகினும், (27)

## பார்த்தனை யிழத்தல்.

### தர்மன் சொல்வது.

'எங்களி லொற்றுமை தீர்ந்தி டோம்;—ஐவர்
எண்ணத்தில், ஆவியி லொன்று காண்.—இவர்
பங்க முற்றே பிரி வெய்துவார்—என்று
பாதகச் சிந்தனை கொள்கிறாய்;—அட,
சிங்க மறவர் தமக்குள்ளே—வில்லுத்
தேர்ச்சியி லேநிக ரற்றவன்,—எண்ணில்
இங்கு புவித் தல மேழையும்—விலை
யிடெனக் கொள்ளத் தகாதவன், (28)

'கண்ணனைக் காருயிர்த் தோழனும்—எங்கள்
கண்ணினுஞ் சால இனியவன்,
வண்ணமுந் திண்மையுஞ் சோதியும்—பெற்று
வானத் தமரரைப் போன்றவன்,—அவன்
எண்ணரு நற் குணஞ் சான்றவன்,—புக
ழேறும் விஜயன் பணயங் காண்!—பொய்யிற்
பண்ணிய காயை யுருட்டுவாய்'—என்று
பார்த்திவன் விம்மி யுரைத் திட்டான். (29)

மாயத்தை யே உருவாக்கிய—அந்த
மாமனு நெஞ்சில் மகிழ் வுற்றே—கெட்ட
தாயத்தைக் கையினிற் பற்றினன்;—பின்பு
சாற்றி விருத்த மங் கொன்றை யே—கையில்
தாய முருட்டி விழுத்தினன்;—அவன்
சாற்றியதே வந்து வீழ்ந்த தால்—வெறும்
ஈயத்தைப் பொன் னென்று காட்டுவார்—மன்னர்
இப் புவி மீ துள ரா மன்றோ? (30)

## வீமனை இழத்தல்.

கொக்கரித் தார்த்து முழங்கி யே—களி
கூடிச் சகுனியுஞ் சொல்லுவான்:—'எட்டுத்
திக் கனைத்தும் வென்ற பார்த்தனை—வென்று
தீர்த்தனம் வீமனைக் கூ'றென்றான்.—தர்மன்
தக்கது செய்தல் மறந்தனன்,—உளஞ்
சார்ந் திடு வெஞ் சின வெள்ளத்தில்—எங்கும்
அக் கரை யிக் கரை காண்கிலன்,—அறத்
தண்ண லிதனை யுரைக்கின்றான்: (31)

‘ஐவர் தமக்கொர் தலைவனை,—எங்கள்
ஆட்சிக்கு வேர் வலி யஃதினை,—ஒரு
தெய்வ முன்னே நின் றெதிர்ப்பினும்—நின்று
சீறி யடிக்குந் திறலனை,—நெடுங்
கை வளர் யானை பலவற்றின்—வலி
காட்டும் பெரும் புகழ் வீமனை,—உங்கள்
பொய் வளர் சூதினில் வைத் திட்டேன்—வென்று
போ!’ என் றுரைத்தனன் பொங்கியே. (32)
போரினில் யானை விழக் கண்ட—பல
பூதங்கள் நாய் நரி காகங்கள்—புலை
ஓரி கழு கென் றிவை யெலாம்—தம
துள்ளங் களி கொண்டு விம்மல்போல்,—மிகச்
சீரிய வீமனைச் சூதினில்—அந்தத்
தீயர் விழுந் திடக் காணலும்—நின்று
மார்பிலுந் தோளிலுங் கொட்டினர்—களி
மண்டிக் குதித் தெழுந் தாடுவார். (33)

## தருமன் தன்னைத்தானே பணயம் வைத்திழத்தல்.

மன்னவர், தம்மை மறந்து போய்,—வெறி
வாய்ந்த திருடரை யொத்தனர்.—அங்கு
சின்னச் சகுனி சிரிப் புடன்—இன்னும்
‘செப்புக பந்தயம் வே’ றென்றான்.—இவன்
தன்னை மறந்தவ னாதலால்—தன்னைத்
தான் பணய மென வைத்தனன்.—பின்பு
முன்னைக் கதை யன்றி வே றுண்டோ?—அந்த
மோசச் சகுனி கெலித்தனன். (34)

## துரியோதனன் சொல்வது.

பொங்கி யெழுந்து சுயோதனன்—அங்கு
பூதல மன்னர்க்குச் சொல்லுவான்:—'ஒளி
மங்கி யழிந்தனர் பாண்டவர்;—புவி
மண்டல நம்ம தினிக் கண்டீர்.—இவர்
சங்கை யிலாத நிதி யெல்லாம்—நம்மைச்
சார்ந்தது; வாழ்த்துதிர் மன்னர்காள்!—இதை
எங்கும் பறை யறைவா யடா—தம்பி!'
என்றது கேட்டுச் சகுனி தான், (35)

## சகுனி சொல்வது.


'புண்ணிடைக் கோல் கொண்டு குத்துதல்—நின்னைப்
போன்றவர் செய்யத் தகுவதோ?—இரு
கண்ணி லினியவ ரா மென்றே—இந்தக்
காளையர் தம்மை யிகழ்ந்தை தான்—நெஞ்சி
லெண்ணி யிருப்ப தறிகுவாய்;—இவர்
யார்? நின்றன் சோதர ரல்ல ரோ?—களி
நண்ணித் தொடங்கிய சூதன் றோ?—இவர்
நா ணுறச் செய்வது நேர்மை யோ? (36)

'இன்னும் பணயம் வைத் தாடுவோம்;—வெற்றி
இன்னு மிவர் பெற லாகுங் காண்.
பொன்னுங் குடிகளுந் தேசமும்—பெற்றுப்
பொற் பொடு போதற் கிடமுண் டாம்;—ஒளி
மின்னு மமுத மும் போன்றவள்—இவர்
மே விடு தேவியை வைத்திட்டால், அவள்
துன்னு மதிட்ட முடையவள்—இவர்
தோற்ற தனைத்தையு மீட்ட லாம்.' (37)

என் றந்த மாம னுரைப்பவே—வளர்
இன்ப மனத்தி னுடைய னாய் —'மிக
நன்று நன்' றென்று சுயோதனன்—சிறு
நா யொன்று தேன் கலசத்தினை—எண்ணித்
தின்று முவகையில் வெற்று நா—வினைத்
தோய்த்துச் சுவைத்து மகிழ்தல் போல்—அவன்
ஒன் றுரை யாம விருந் திட்டான்—அழி
வுற்ற துலகத் தறமெலாம். (38)

அடிமைச் சருக்கம்

முற்றிற்று.



ஓம் சக்தி.

## நான்காவது

# துகிலுரிதற் சருக்கம்.

## திரௌபதியை இழத்தல்.

---

பாவியர் சபை தனி லே,—புகழ்ப்
பாஞ்சால நாட்டினர் தவப் பயனை,
ஆவியி லினியவளை,—உயிர்த்
தணி சுமந் துல விடு செய் யமுதை,
ஓவிய நிகர்த்தவளை,—அரு
ளொளி யினைக் கற்பனைக் குயி ரதனைத்
தேவியை, நிலத் திருவை,—எங்குந்
தேடினுங் கிடைப் பருந் திர வியத்தை, (39)

படி மிசை யிசை யுற வே—நடை
பயின் றிடுந் தெய்விக மலர்க் கொடியைக்
கடி கமழ் மின் னுருவை,—ஒரு
கமனியக் கன வினைக் காதலினை,
வடி வுறு பே ரழகை,—இன்ப
வளத்தினைச் சூதினிற் பணய மென் றே
கொடியவ ரவைக் களத்தில்—அறக்
கோமகன் வைத் திடல் குறித்து விட்டான். (40)

### வேறு.

வேள்விப் பொருளினையே—புலை நாயின் முன்
மென் றிட வைப்பவர் போல்,

நீள் விட்டப் பொன் மாளிகை—கட்டிப் பேயினை
நேர்ந்து குடி யேற்றல் போல்,
ஆள் விற்றுப் பொன் வாங்கியே—செய்த பூணை யோர்
ஆந்தைக்குப் பூட்டுதல் போல்,—
கேள்விக் கொருவ ரில்லை—உயிர்த் தேவியைக்
கீழ் மக்கட் கா ளாக்கினான். (41)

செருப்புக்குத் தோல வேண்டியே,—இங்கு கொல்வரோ
செலவக் குழந்தை யினை?
விருப் புற்ற சூதினுக் கே—ஒத்த பந்தயம்
மெய்த் தவப் பாஞ்சாலி யோ?
ஒருப் பட்டுப் போன வுடன்,—கெட்ட மாமனும்
உன்னி யத் தாயங் கொண்டே
இருப் பகடை போடென்றான்,—பொய்மைக் காய்களும்
இருப் பகடை போட்டவே. (42)

### திரௌபதி சூதில் வச மானதுபற்றிக் கௌரவர் கொண்ட மகிழ்ச்சி.

திக்குக் குலுங் கிட வே—எழுந் தாடு மாம்
தீயவர் கூட்ட மெல்லாம்.
தக்குத் தக் கென்றே யவர்—குதித் தாடுவார்
தம் மிரு தோள் கொட்டுவார்.
ஒக்குந் தரும னுக்கே—இஃதென்ப 'ரோ!
ஓ!' வென் றிரைந் திடுவார்;
கக் கக் கென்றே நகைப்பார்—'துரியோதனா,
கட்டிக் கொ ளெம்மை' யென்பார். (43)

மாமனைத் 'தூக்கா' யென்பார்;—அந்த மாமன் மேல்
மாலை பல வீசுவார்.

'சேமத் திரவியங்கள்—பல நாடுகள்
சேர்ந்ததி லொன்று மில்லை;
காமத் திரவிய மாம்—இந்தப் பெண்ணையுங்
கைவச மாகச் செய்தான்;
மாம ஞெர் தெய்வ' மென்பார்; 'துரியோதனன்
வாழ்க' வென் றூர்த் திடுவார். (44)

## துரியோதனன் சொல்வது

நின்று துரியோ தனன்—அந்த மாமனை
நெஞ்சொடு சேரக் கட்டி,
'என் துயர் தீர்த்தா யடா,—உயிர் மாமனே,
ஏளனந் தீர்த்து விட்டாய்.
அன்று நகைத்தா ளடா;—உயிர் மாமனே,
அவளை யென் ஆளாக்கினாய்.
என்று மறவே னடா,—உயிர் மாமனே,
என்ன கைம்மாறு செய்வேன்! (45)

'ஆசை தணித்தா யடா,—உயிர் மாமனே,
ஆவியைக் காத்தா யடா.
பூசை புரிவோ மடா,—உயிர் மாமனே,
பொங்க லுனக் கிடு வோம்.
நாச மடைந்த தடா—நெடு நாட் பகை,
நா மினி வாழ்ந்தோ மடா!
பேசவுந் தோன்று தில்லை;—உயிர் மாமனே,
பேரின்பங் கட்டிவிட்டாய்.' (46)

என்று பல சொல்லுவான்,—துரியோதனன்
எண்ணி யெண்ணிக் குதிப்பான்;

குன்று குதிப்பது போல்—துரியோதனன்
கொட்டிக் குதித் தாடுவான்.
மன்று குழப்ப முற்றே,—அவர் யாவரும்
வகை தொகை யொன்று மின்றி
அன்று புரிந்த தெல்லாம்—என்றன் பாட்டிலே
ஆக்க லெளி தாகு மோ? (47)

## திரௌபதியைத் துரியோதனன் மன்றுக்கு அழைத்து வரச் சொல்லியது பற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம்

### வேறு.

தருமம் அழி வெய்தச் சாத்திய மும் பொய் யாக,
பெருமைத் தவங்கள் பெயர் கெட்டு மண்ணாக,
வானத்துத் தேவர் வயிற்றிலே தீப் பாய,
மோன முனிவர் முறை கெட்டுத் தா மயங்க,
வேதம் பொரு ளின்றி வெற் றுரையே யாகி விட,
நாதங் குலைந்து நடுமை யின்றிப் பாழாக,
கந்தருவ ரெல்லாங் களை யிழக்கச் சித்தர் முதல்
அந்தரத்து வாழ்வோ ரனைவோரும் பித் துறவே,
நான் முகனார் நா வடைக்க, நா மகட்குப் புத்தி கெட,
வான் முகிலைப் போன்ற தொரு வண்ணத் திருமாலும்
அறி துயில் போய் மற் றங்கே யாழ்ந்த துயி லெய்திவிட,
செறி தரு நற் சீர ழந் செல்வ மெலாந் தானகுஞ்
சீதேவி தன் வதனஞ் செம்மை போய்க் காரடைய,
மாதேவன் யோகம் மதி மயக்க மாகி விட,—
வாலை, உமா தேவி, மாகாளி, வீறுடையாள்,

மூலமா சக்தி, யொரு மூவிலை வேல் கை யேற்றாள்,
மாயை தொலைக்கு மஹா மாயை தானவாள்,
பேயைக் கொலையைப் பிணக் குவையைக் கண்டுவப்பாள்,
சிங்கத்தி லேறிச் சிரிப்பா லுல கழிப்பாள்,
சிங்கத்தி லேறிச் சிரித் தெவையுங் காத்திடுவாள்,
நோவுங் கொலையு நுவ லொணாப் பீடைகளும்
சாவுஞ் சலிப்பு மெனத் தான் பல் கண முடையாள்,
கடா வெருமை யேறுங் கரு நிறத்துக் காலனார்
இடாது பணி செய்ய இலங்கு மஹா ராணி,
மங்களஞ் செல்வம் வளர் வாழ்நாள் நற் கீர்த்தி
துங்க முறு கல்வி யெனச் சூழும் பல கணத்தாள்,
ஆக்கந் தா னவாள், அழிவு நிலை யாவாள்,.
போக்கு வர வெய்தும் புதுமை யெலாந் தா னவாள்,
மாறி மாறிப் பின்னு மாறி மாறிப் பின்னும்
மாறி மாறிப் போம் வழக்கவே தா னவாள்,
ஆதி பரா சக்தி—அவணெஞ்சம் வன்மை யுற'
சோதிக் கதிர் விடுக்கும் சூரியனாந் தெய்வத்தின்
முகத்தே யிருள் படர,

**துரியோதனன் விதுரனை நோக்கி யுரைப்பது.**

மூடப் புலைமையினேன்,
அகத்தே யிரு ளுடையான், ஆரியரின் வேறானேன்,
துரியோ தன னுஞ் சுழுக் கெனவே தான் திரும்பி
அரியோன் விதுர னவனுக் குரை செய்வான்:
'செல்வாய், விதுரா, நீ சிந்தித் திருப்ப தேன்?
வில்வா ணுதலினாள், மிக்க எழி லுடையாள்,
முன்னே பாஞ்சாலர் முடிவேந்தன் ஆவி மகள்,

இன்னே நாம் சூதில் எடுத்த விலை மகள் பால்
சென்று விளை வெல்லாஞ் செவ்வனே தா னுணர்த்தி,
"மன்றி னிடை யுள்ளானின் மைத்துனனின் றோர் தலைவன்
நின்னை யழைக்கின்றான் நீள் மனையி லேவ லுக்கே"
என்ன வுரைத் தவளை யிங்கு கொணர்வாய்' என்றான்.

## விதுரன் சொல்வது.

துரியோதன னிச் சுடு சொற்கள் கூறிடவும்,
பெரி யோன் விதுரன் பெரி துஞ் சினங் கொண்டு,
'மூட மகனே, மொழி யொணு வார்த்தையினைக்
கேடு வர லறியாய், கீழ்மையினாற் சொல்லி விட்டாய்
புள்ளிச் சிறு மான் புலியைப் போய்ப் பாய்வது போல்,
பிள்ளைத் தவளை பெரும் பாம்பை மோதுதல் போல்,
ஐவர் சினத்தின் அழலை வளர்க்கின்றாய்.
தெய்வத் தவத்தியைச் சீர் குலையப் பேசுகிறாய்;
நின்னுடைய நன்மைக்கிந் நீதி யெலாஞ் சொல்லுகிறேன்.
என்னுடைய சொல் வே றெவர்பொருட்டு மில்லையடா!
பாண்டவர் தாம் நாளை பழி யிதனைத் தீர்த் திடுவார்,
மாண்டு தரை மேல், மகனே, கிடப்பாய் நீ.
தன் னழிவு நாடுந் தறுகண்மை யென்னேடா?
முன்ன மொரு வேனன் முடிந்த கதை கேட்டிலை யோ?
நல்லோர் தம துள்ளம் நையச் செயல் செய்தான்
பொல்லாத வேனன், புழுவைப் போல் மாய்ந் திட்டான்.
நெஞ்சஞ் சுட வுரைத்தல் நேர்மை யெனக் கொண்டாயோ?
மஞ்சனே, யச்சொல் மருமத்தே பாய்வதன்றோ?
கெட்டார்தம் வாயி லெள்ளி தே கிளைத்து விடும்;

பட்டார் தம் நெஞ்சிற் பலநா ளகலாது,
வெந் நரகு சேர்த்து விடும், வித்தை தடுத்து விடும்,
மன்னவனே, நொந்தார் மனஞ் சுடவே சொல்லுஞ்
சொல்.

சொல்லி விட்டேன்; பின்னொரு கால் சொல்லேன்,
கவுரவர்காள்!

புல்லியர்கட் கின்பம் புவித் தலத்தில் வாராது.
பேராசை கொண்டு பிழைச் செயல்கள் செய்கின்றீர்!
வாராத வன் கொடுமை மா விபத்து வந்து விடும்.
பாண்டவர் தம் பாதம் பணிந் தவர் பாற் கொண்ட
தெலாம்

மீண் டவர்க்கே ஈந்து விட்டு, விநயமுடன்,
"ஆண்டவரே, யாங்கள் அறியாமையாற் செய்த
நீண்ட பழி யிதனை நீர் பொறுப்பீர்" என்றுரைத்து,
மற் றவரைத் தங்கள் வள நகர்க்கே செல்ல விடீர்.
குற்றந் தவிர்க்கு நெறி யிதனைக் கொள்ளீரேல்,
மா பாரதப் போர் வரும்; நீ ரழிந் திடுவீர்,
பூபாலரே,' என் றப் புண்ணியனுங் கூறினான்.
சொல் லிதனைக் கேட்டுத் துரியோதன மூடன்,
வல் லிடிபோல், 'சீச்சி! மடையா, கெடுக நீ
எப்போது மெய்ச் சபித்த லியல் புனக்கே.
இப்போ துன் சொல்லை யெவருஞ் செவிக் கொளார்.
யாரடா, தேர்ப் பாகன்! நீ போய்க் கண மிரண்டில்
"பாரதர்க்கு வேந்தன் பணித்தா" னெனக் கூறிப்
பாண்டவர் தந் தேவிதனைப் பார் வேந்தர்மன் றினிலே
ஏண் டழைத்துவா' என் றியம்பினான். ஆங்கே தேர்ப்
பாகன் விரைந்து போய்ப் பாஞ்சாலி வாழ் மனையில்

சோகந் ததும்பித் துடித்த குரலுடனே,
“அம்மனே போற்றி! அறங் காப்பாய், தாள் போற்றி!
வெம்மை யுடைய விதியால் யுதிட்டிரனூர்
மாமன் சகுனி யொடு மாயச் சூதாடியதில்,
பூமி யிழந்து பொரு ளிழந்து தம்பியரைத்
தோற்றுத் தமது சுதந்திரமும் வைத் திழந்தார்.
சாற்றிப் பணைய மெனத் தாயே உனை வைத்தார்.
சொல்லவுமே நாவு துணிய வில்லை; தோற் றிட்டார்.
எல்லாருங் கூடி யிருக்கும் ஸபை தனிலே,
நின்னை யழைத்து வர நேமித்தான் எம்மரசன்,’
என்ன வுரைத்திடலும், ‘யார் சொன்ன வார்த்தையடா!
சூதர் ஸபை தனிலே தொல் சீர் மறக் குலத்து
மாதர் வருதல் மரபோடா? யார் பணி யால்
என்னை யழைக்கின்றாய்?’ என்றாள். அதற் கவனும்
‘மன்னன் சுயோதனன் றன் வார்த்தையினால்’ என்
றிட்டான்,
‘நல்லது; நீ சென்று நடந்த கதை கேட்டு வா.
வல்ல சகுனிக்கு மானழிந்த நாயகர் தாம்
என்னை முன்னே கூறி யிழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித் தென்னைத் தோற்றாரா?
சென்று ஸபையில இச் செய்தி தெரிந்து வா
என் றவனுங் கூறி, யிவன் போகிய பின்னர்,
தன்னந் தனியே தவிக்கு மனத்தா ளாய்,
வன்னங் குலைந்து மலர் விழிகள் நீர் சொரிய,
உள்ளத்தை அச்சம் உலை வுறுத்தப் பேய் கண்ட
பிள்ளையென வீற்றிருந்தாள். பின்னந்தத் தேர்ப்பாகன்

மன்னன் ஸபை சென்று. 'வாள்வேந்தே! ஆங்கந்தப்
பொன் னரசி தாள் பணிந்து "போதருவீர்" என் றிட்
டேன்.
"என்னை முதல் வைத் திழந்த பின்பு தன்னை யென்
மன்ன ரிழந்தாரா? மாறித் தமைத் தோற்ற
பின்னரென்னைத் தோற்றாரா?" என்றே நும் பேரவையை
மின்னற் கொடியார் வினவி வரத் தாம் பணித்தார்.
வந்து விட்டேன்' என் றுரைத்தான். மாண் புயர்ந்த
பாண்டவர் தாம்
நொந்து போ யொன்றும் நுவலா திருந்து விட்டார்.
மற்றும் சபை தனிலே வந்திருந்த மன்ன ரெலாம்
முற்று முறை யிழந்து மூங்கையர் போல் வீற்றிருந்தார். (48)

## துரியோதனன் சொல்வது.

### வேறு.

உள்ளந் துடித்துச் சுயோதனன்—சினம்
ஓங்கி வெறி கொண்டு சொல்லுவான்:—'அட,
பிள்ளைக் கதைகள் விரிக்கிறாய்.—என்றன்
பெற்றி யறிந்திலை போலும், நீ!—அந்தக்
கள்ளக் கரிய விழியினாள்—அவள்
கல்விகள் கொண் டிங்கு வந்தனை!—அவள்
இள்ளை மொழியி னலத்தையே—இங்கு
கேட்க விரும்பு மென் னுள்ளமே. (49)

'வேண்டிய கேள்விகள் கேட்க லாம்,—சொல்ல
வேண்டிய வார்த்தைகள் சொல்லலாம்,—மன்னர்
நீண்ட பெருஞ் சபை தன்னிலே—அவள்
நேரிடவே வந்த பின்பு தான்,—சிறு

கூண்டிற் பறவையு மல்லளே?—ஐவர்
கூட்டு மனைவிக்கு நாண மேன்?—சின
மூண்டு கடுஞ் செயல் செய்யு முன்,—அந்த
மொய் குழலாளை யிங்கிட்டு வா. (50)

'மன்னன் அழைத்தனன் என்று நீ—சொல்ல
மாறியவ ளொன்று சொல்வ தோ?—உன்னைச்
சின்ன முறச் செய்குவே னடா!—கணஞ்
சென் றவளைக் கொணர் வாய்' என்றான்.—அவன்
சொன்ன மொழியினைப் பாகன் போய்—அந்தத்
தோகை முன் கூறி வணங்கினான்.—அவள்
இன்னல் விளைந் திவை கூறுவாள்—'தம்பி,
என்றனை வீணி லழைப்ப தேன்? (51)

## திரௌபதி சொல்லுதல்.

'நாயகர் தாந் தம்மைத் தோற்ற பின்—என்னை
நல்கு முரிமை அவர்க் கில்லை.—புலைத்
தாயத்திலே விலைப் பட்டபின்,—என்ன
சாத்திரத்தா லெனைத் தோற் றிட்டார்? அவர்
தாயத்திலே விலைப் பட்டவர்;—புவி
தாங்குந் துருபதன் கன்னி நான்.—நிலை
சாயப் புலைத் தொண்டு சார்ந் திட்டால்,—பின்பு
தார முடைமை யவர்க் குண்டோ! (52)

'கௌரவ வேந்தர் ஸபை தன்னில்—அறங்
கண்டவர் யாவரு மில்லை யோ?—மன்னர்
சௌரியம் வீழ்ந்திடு முன்ன ரே—அங்கு
சாத்திரஞ் செத்துக் கிடக்கு மோ?—புகழ்

ஓவ் வுற வாய்ந்த குருக்க ளும்—கல்வி
ஓங்கிய மன்னருஞ் சூதிலே—செல்வம்
வவ் வுறத் தாங் கண் டிருந்தனர்;
மான மழிவதுங் காண்ப ரோ? (53)
'இன்ப முந் துன்ப மும் பூமியின்—மிசை
யார்க்கும் வருவது கண்டனம்;—எனில்
மன் பதை காக்கு மரசர் தாம்—அற
மாட்சியைக் கொன்று களிப்பரோ?—அதை
அன்புந் தவ முஞ் சிறந் துளார்—தலை
யந்தணர் கண்டு களிப்பரோ?—அவர்
முன்பென் வினவினை மீட்டும் போய்ச்—சொல்லி
முற் றுந் தெளி வுறக் கேட்டு வா' (54)
என் றந்தப் பாண்டவர் தேவியும்—சொல்ல,
என் செய்வன் ஏழையப் பாகனே?—'என்னைக்
கொன் று விட்டா லும் பெரி தில்லை.—இவள்
கூறும் வினவிற் கவர் விடை—தரி
னன் றி யிவளை மறு முறை—வந்
தழைத் திட நா னங் கிசைந் திடேன்'—(என)
நன் று மனத் திடைக் கொண் டவன்—சபை
நண்ணி நிகழ்ந்தது கூறினான். (55)
'மாத விடாயி லிருக்கிறாள்—அந்த
மா தர்' சென்ப துங் கூறினான்.—கெட்ட
பாதக னெஞ்ச மிள கிடான்—நின்ற
பாண்டவர் தம் முக நோக்கினான்;—அவர்
பே துற்று நிற்பது கண்டனன்.—மற்றும்
பே ரவை தன் னி லொருவரும்—இவன்

தீது ற்ற சிந்தை தடுக்கவே—உள்ளத்
திண்மை யிலா தங் கிருந்தனர். (56)

பாகனை மீட்டுஞ் சினத் துடன்—அவன்
பார்த் திடி போ லுரை செய்கின்றான்:—பின்னும்
ஏகி நம துளங் கூறடா!—அவள்
ஏழு கணத்தில் வரச் செய்வாய்!—உன்னைச்
சாக மிதித் திடுவே னடா!'—என்று
தார் மன்ன ன்சொல விடப் பாகனும்—மன்னன்
வேகந் தனைப் பொருள் செய் திடான்—அங்கு
வீற் றிருந்தோர் தமை நோக்கியே, (57)

'சீறும் அரசனுக் கேழையேன்—பிழை
செய்த துண் டோ? அங்கு தேவியார்—தமை
நூறு தரஞ் சென் றழைப்பினும்,—அவர்
நுங்களைக் கேட்கத் திருப்புவார்;—அவர்
ஆறுதல் கொள்ள ஒரு மொழி—சொலவில்,
அக்கண மே சென் றழைக்கின்றேன்;—மன்னன்
கூறும் பணி செய வல்லன் யான்;—அந்தக்
கோதை வரா விடி லென் செய்வேன்?' (58)

## துரியோதனன் சொல்வது.

பாக னுரைத்தது கேட்டனன்—பெரும்
பாம்புக் கொடி யவன் சொல்கின்றான்:—'அவள்
பாக னழைக்க வருகிலள்;—இந்தப்
பையலும் வீமனை யஞ்சியே—பல

வாகத் திகைப் புற்று நின்றனன்;—இவன்
அச்சத்தைப் பின்பு குறைக்கிறேன்.—'தம்பீ!
போகக் கடவை யிப் போ தங்கே;—இங் கப்
பொற்றொடி யோடும் வருக நீ!' (59)

## துகிலுரிதல் சருக்கம்.

### முற்றிற்று.



## ஐந்தாவது

# சபதச் சருக்கம்

## துச்சாதனன் திரௌபதியை ஸபைக்குக் கொணர்தல்.

இவ் வுரை கேட்ட துச்சாதனன்—அண்ண
னிச்சையை மெச்சி யெழுந்தனன்.—இவன்
செவ்வி சிறிது புகலுவோம், இவன்
தீமையி லண்ணனை வென்றவன்;—கல்வி
எவ் வள வேனு மிலாதவன்;—கள்ளும்
ஈரக் கறியும் விரும்பு வோன்;—பிற
தெய்வ ரிவன் றனை யஞ்சுவார்;—தன்னைச்
சேர்ந்தவர் பே யென் றொதுங்குவார்; (60)

புத்தி விவேக மில்லாதவன்;—புலி
போல வுடல் வலி கொண்டவன்; கரை
தத்தி வழியுஞ் செருக்கினால்—கள்ளின்
சார் பின்றி யே வெறி சான்றவன்;—அவ
சக்தி வழி பற்றி நின்றவன்;—சிவ
சக்தி நெறி யுணராதவன்;—இன்பம்
நத்தி மறங்க ளிழைப்பவன்;—என்றும்
நல்லவர் கேண்மை விலக்கினோன்; (61)

அண்ண னொருவனை யன்றியே—புவி
யத்தனைக்குந் தலையாயினோம்—என்னும்

எண்ணந் தன திடைக் கொண்டவன் ;—அண்ணன்
ஏது சொன்னலு மறுத் திடான் ;—அருட்
கண் ணழி வெய்திய பாதகன்.—'அந்தக்
காரிகை தன்னை யழைத்து வா'—என் றவ்
வண்ண னுரைத் திடல் கேட்டனன் ;—நல்ல
தா மென் றுறுமி யெழுந்தனன். (62)

பாண்டவர் தேவி யிருந்த தோர்—மணிப்
பைங் கதிர் மாளிகை சார்ந்தனன் ;—அங்கு
நீண்ட துயரிற் குலைந்து போய்—நின்ற
நேரிழை மாதினைக் கண்டனன் ;—அவள்
தீண்டலை யெண்ணி யொதுங்கினள் ;—அடி,
செல்வ தெங்கே' யென் றிரைந் திட்டான்.—'இவன்
ஆண் டகை யற்ற புலைய'னென்—றவள்
அச்ச மிலா தெதிர் நோக்கியே, (63)

## திரௌபதிக்கும் துச்சாதனனுக்கும் ஸம்வாதம்.

'தேவர் புவி மிசைப் பாண்டவர் ;—அவர்
தேவி, துருபதன் கன்னி நான் ;—இதை
யாவரு மிற்றை வரையி னும், — தம்பி,
என் முன் மறந்தவ ரில்லை காண்.—தம்பி,
காவ லிழந்த மதி கொண்டாய் ;—இங்கு
கட்டுத் தவறி மொழிகிறாய்.—தம்பி,
நீ வந்த செய்தி விரைவிலே—சொல்லி
நீங்குக,' என்றனள் பெண் கொடி. (64)

'பாண்டவர் தேவியு மல்லை நீ;—புகழ்ப்
பாஞ்சாலத்தான் மக ளல்லை நீ;—புவி
யாண் டருள் வேந்தர் தலைவனும்—எங்கள்
அண்ணனுக்கே யடிமைச்சி நீ.—மன்னர்
நீண்ட ஸபை தனிற் சூதிலே—எங்கள்
நேரச் சகுனியே டாடியப்—புன்னைத்
தூண்டிம் பணய மென வைத்தான்—இன்று
தோற்று விட்டான் தருமேந்திரன். (65)

'ஆடி விலைப் பட்ட தாதி நீ;—உன்னை
ஆள்பவ னண்ணன் சுயோதனன்.—"மன்னர்
கூடி யிருக்குநே சபையிலே—உன்னைக்
கூட்டிவருநே" கென்று மன்னவன்—சொல்ல
ஓடி வந்தே னிது செய்தி காண்.—இனி
ஒன்றுஞ் சொலா தென்னொ டேகுவாய்.—அந்தப்
பேடி மக னொரு பாகன்பாற்—சொன்ன
பேச்சுக்கள் வேண்டிலன் கேட்கவே.' (66)

வேறு.

துச்சாதன னிதனைச் சொல்லினன். பாஞ்சாலி:—
'அச்சா, கேள். மாத விலக் காதலா லோ ராடை
தன்னி லிருக்கின்றேன். தார் வேந்தர் பொற்சபை முன்
என்னை யழைத்த லியல் பில்லை. அன்றியுமே,
சோதரர் தந் தேவி தனைச் சூதில் வசமாக்கி,
ஆதரவு நீக்கி, யருமை குலைத் திடுதல்,
மன்னர் குலத்து மரபோ காண்? அண்ணன் பால்
என் னிலைமை கூறிடுவாய், ஏகுக நீ' என்றிட்டாள்.
கக் கக் கவென்று கனைத்தே பெரு மூடன்
பக்கத்தில் வந்தே யப் பாஞ்சாலி கூந்தலினைக்

கையினாற் பற்றிக் கர கரெனத் தா னிழுத்தான்.
'ஐயகோ' வென்றே யலறி யுணர் வற்றுப்
பாண்டவர் தந் தேவி யவள் பாதி யுயிர் கொண்டு வர,
நீண்ட கருங் குழலை நீசன் கரம் பற்றி
முன் னிழுத்துச் சென்றான், வழி நெடுக, மொய்த்தவராய்,
'என்ன கொடுமை யிது' வென்று பார்த்திருந்தார்.
ஊரவர் தங் கீழ்மை யுரைக்குந் தர மாமோ?
வீரமிலா நாய்கள். விலங்கா மிள வரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னை யவ ளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்,
நெட்டை மரங்க ளென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணை யாமோ?
பேரழகு கொண்ட பெருந் தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்து போய்க்
கேடுற்ற மன்னரறங் கெட்ட சபை தனிலே
கூடுதலு மங்கே போய்க் 'கோ'வென் றலறினாள்.

## ஸபையில் திரௌபதி நீதி கேட்டழுதல்.

விம்மி யழுதாள்:—'விதியோ கணவரே,
அம்மி மிதித்தே யருந்ததியைக் காட்டி யென்னை
வேதச் சுடர்த்தீ முன் வேண்டி மணஞ் செய்து,
பாதகர் மு னின் நாட் பரி சழிதல் காண்பீரோ?'
என்றாள். விஜயனுட னேறு திறல் வீமனுமே
குன்று மணித் தோள் குறிப் புடனே நோக்கினார்.
தருமனு மற்றாங்கே தலை குனிந்து நின் றிட்டான்.
பொருமி யவள் பின்னும் புலம்புவாள்:—'வான் சபையில்

கேள்வி பல வுடையோர், கேடிலா நல் லிசையோர்,
வேள்வி தவங்கள் மிகப் புரிந்த வேதியர்கள்,
மேலோரிருக்கின்றார். வெஞ்சினமேன் கொள்கிலரோ?
வேலோ ரெனையுடைய வேந்தர் பிணிப் புண்டார்.
இங்கிவர் மேற் குற்ற மியம்ப வழி யில்லை.
மங்கிய தோர் புன் மதியாய்! மன்னர் சபை தனிலே
என்னைப் பிடித் திழுத்தே யேச்சுக்கள் சொல்லுகிறாய்.
நின்னை யெவரும் 'நிறுத் தடா' என்ப திலர்.
என் செய்கேன்?' என்றே யிரைந் தழுதாள். பாண்டவரை
மின் செய் கதிர் விழியால் வெந் நோக்கு நோக்கினாள்.
மற்றவர் தா முன்போல் வாயிழந்து சீர் குன்றி
பற்றைகள் போல் நிற்பதனைப்பார்த்து, வெறிகொண்டு,
'தாதி யடி தாதி!' யெனத் துச்சாதன னவளைத்
தீதுரைகள் கூறினான். கர்ணன் சிரித் திட்டான்.
சகுனி புகழ்ந்தான். சபையினோர்? வீற்றிருந்தார்!
தகுதி யுயர் வீட்டுமனுஞ் சொல்லுகிறான்: 'தையலே,

## வீட்டுமாசார்யான் சொல்வது.

சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்று விட்டான்.
வாதாடி நீ யவன் றன் செய்கை மறுக்கின்றாய்.
சூதிலே வல்லான் சகுனி. தொழில வலியால்,
மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான்.
மற்றிதனி லுன்னை யொரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய். கோமகளே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படி, நீ சொல்வது
நீதமெனக் கூடும்; நெடுங் காலச் செய்தி யது!
ஆணொடு பெண் முற்று நிகரெனவே யந்நாளில்

பேணி வந்தார். பின்னாளி லிந்து பெயர்ந்து போய்,
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங் கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர். ஒருவன் தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்.
முற்றும் விலங்கு முறைமை யன்றிவே றில்லை.
தன்னை யடிமை யென விற்ற பின்னுந் தருமன்
நின்னை யடிமை யெனக் கொள்வதற்கு நீதி யுண்டு.
செல்லு நெறியறியார் செய்கை யிங்கு பார்த் திடிலோ,
கல்லு நடுங்கும், விலங்குகளும் கண் புதைக்கும்.
செய்கை யநீதி யென்று தேர்ந்தாலும், சாத்திரந் தான்
வைகு நெறியும் வழக்கமு நீ கேட்பதனால்,
ஆங்கவையு நின் சார்பி லாகா வகை யுரைத்தேன்.
தீங்கு தடுக்குந் திறமிலேன்,' என்றந்த
மேலோன் தலை கவிழ்ந்தான் மெல்லியளுஞ்
சொல்லுகிறாள்:—

## திரௌபதி சொல்வது.

சால நன்கு கூறினீ ரையா, தரும நெறி
பண்டோ ரிராவணனும் ஸீதை தன்னை பாதகத்தாற்
கொண்டோர் வனத் திடையே வைத்துப் பின், கூட்டமுற
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே,
செந்திருவைப் பற்றி வந்த செய்தி யுரைத் திடுங்கால்,
"தக்கது நீர் செய்தீர்; தருமத்துக் கிச் செய்கை
ஒக்கும்" என்று யுகந்தனராம் சாத்திரிமார்!
பேயரசு செய்தால், பிணந் தின்னும் சாத்திரங்கள்.
மாய முணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மையோ?

முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கை யன்றோ?
மண்டப நீர் கட்டியது மா நிலத்தைக் கொள்ளவன்றோ?
பெண்டிர் தமை யுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்!
'பெண்பாவ மன்றோ? பெரிய வசை கொள்வீரோ?
கண்பார்க்க வேண்டும்!' என்று கை யெடுத்துக்
கும்பிட்டாள்.
அம்பு பட்ட மான் போலழுது துடி துடித்தாள்.
வம்பு மலர்க் கூந்தல் மண்மேற் புரண்டுவிழத்
தேவி கரைந் திடுதல் கண்டே, சிலமொழிகள்
பாவி துச்சாதனனும் பாங்கிழந்து கூறினன். (67)

**வேறு.**

ஆடை குலை வுற்று நிற்கிறாள்;—அவள்
ஆவென் றழுது துடிக்கிறாள்.—வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன்—அவள்
மைக் குழல் பற்றி யிழுக்கிறான்.—இந்தப்
பீடையை நோக்கினன் வீமனும்,—கரை
மீறி யெழுந்தது வெஞ் சினம்;—துயர்
கூடித் தருமனை நோக்கியே,—அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டிரோ? (68)

## வீமன் சொல்வது.

**வேறு.**

'சூதர் மனைகளி லே—அண்ணே!
தொண்டு மகளி ருண்டு.
சூதிற் பணய மென் றே—அங்கோர்
தொண்டச்சி போவ தில்லை. (69)

ஏது கருதி வைத்தாய்?—அண்ணே,
யாரைப் பணயம் வைத்தாய்?
மாதர் குல விளக்கை—அன்பே
வாய்ந்த வடி வழகை. (70)

'பூமி யரச ரெல்லாங்—கண்டே
போற்ற விளங்குகிருன்,
சாமி, புகழினுக் கே—வெம் போர்ச்
சண்ட னப் பாஞ்சாலன். (71)

'அவன் சுடர் மகளை,—அண்ணே,
ஆடி யிழந்து விட்டாய்.
தவறு செய்து விட்டாய்;—அண்ணே,
தருமங் கொன்று விட்டாய். (72)

'சோரத்திற் கொண்ட தில்லை;—அண்ணே,
சூதிற் படைத்த தில்லை.
வீரத்தினுற் படைத்தோம்;—வெம் போர்
வெற்றி யினுற் படைத்தோம்; (73)

'சக்கரவர்த்தி யென்றே—மேலாந்
தன்மை படைத் திருந்தோம்;
பொக் கென ஓர் கணத் தே—எல்லாம்
போகத் தொலைத்து விட்டாய். (74)

'நாட்டை யெல்லாந் தொலைத்தாய்;—அண்ணே,
நாங்கள் பொறுத் திருந்தோம்.
மீட்டு மெமை யடிமை—செய்தாய்,
மேலும் பொறுத் திருந்தோம். (75)

துருபதன் மகளைத்—திட்டத்
துய்ம னுடற் பிறப்பை,—
இரு பகடை யென்றாய்,—ஐயோ!
இவர்க் கடிமை யென்றாய்! (76)

இது பொறுப்ப தில்லை,—தம்பி!
எரி தழல் கொண்டு வா.
கதிரை வைத் திழந்தான்—அண்ணன்
கையை எரித் திடுவோம்.' (77)

அர்ஜுனன் சொல்வது.

எனவீமன் ஸஹதேவ னிடத்தே சொன்னான்.
இதைக் கேட்டு வில் விஜயன் எதிர்த்துச் சொல்வான்:
மன மாரச் சொன்னாயோ? வீமா! என்ன
வார்த்தை சொன்னாய்? எங்கு சொன்னாய்? யாவர் முன்னே?

கன மாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே யிழந் திடுதல் குற்ற மென்றாய்;
சின மான தீ யறிவைப் புகைத்த லாலே,
திரி லோக நாயகனைச் சினந்து சொன்னாய். (78)

"தருமத்தின் வாழ் வதனைச் சூது கவ்வும்;
தரும மறுபடி வெல்லும்" எனு மியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழி தேடி விதி யிந்தச் செய்கைசெய்தான்
கருமத்தை மேன் மேலுங் காண்போம். இன்று
கட்டுண்டோம், பொறுத் திருப்போம்; கால மாறும்.
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்.
தனு வுண்டு காண்டீவ மதன் பேர்,' என்றான். (79)

## விகர்ணன் சொல்வது.

அண்ணனுக்குத் திறல் வீமன் வணங்கி நின்றான்.
அப்போது விகர்ணனெழுந் தவை முன் சொல்வான்:
'பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான் கொள்ளேன். பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவ ரெண்ணி
ஏதெனினுஞ் செய்திடலா மென்றான் பாட்டன்.
வண்ணமுயர் வேத நெறி மாறிப் பின்னாள்
வழங்குவதிந் நெறி யென்றான்; வழுவே சொன்
னான். (80)

'எந்தையர் தம் மனைவியரை விற்ற துண்டோ?
இதுகாறு மரசியரைச் சூதிற் றோற்ற
விந்தையை நீர் கேட்ட துண்டோ? விலை மாதர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக்காரர்
சொந்த மெனச் சாத்திரத்தில் புகுத்து விட்டார்!
சொல்லளவே தானாலும், வழக்கந் தன்னில்
இந்த விதஞ் செய்வதில்லை; சூதர் வீட்டில்
ஏவற்பெண் பணயமில்லை யென்றுங் கேட்டோம். (81)

"தன்னை யிவ னிழந் தடிமை யான பின்னர்த்
தாரமெது? வீடேது? தாதனான
பின்னையுமோ ருடைமை யுண்டோ?" என்று நம்மைப்
பெண்ணரசு கேட்கின்றாள் பெண்மை வாயால்.
மன்னர்களே, களிப்பது தான் சூதென்றாலும்
மனுநீதி துறந் திங்கே வலிய பாவந்
தன்னை யிரு விழி பார்க்க வாய் பேசீரோ?
தாத்தனே, நீதி யிது தகுமோ?' என்றான். (82)

இவ்வாறு விகர்ண னுமுரைத்தல் கேட்டார்;
எழுந்திட்டார் சில வேந்தர்; இரைச்ச லிட்டார்;
'ஒவ்வாது சகுனி செயுங் கொடுமை' யென்பார்;
'ஒருநாளு முலகிதனை மறக்கா' தென்பார்;
'எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்;
ஏந்திழையை அவைக் களத்தே இகழ்தல் வேண்டா.
செவ்வான் மம் படர்ந்தாற்போ லிரத்தம் பாயச்
செருக் களத்தே தீரு மடா பழி யிஃ' தென்பார். (83)

## கர்ணன் பதில்.

விகருணன் சொல்லைக் கேட்டு வில்லிசைக் கர்ணன் சொல்வான்:—
'தகுமடா, சிறியாய், நின் சொல். தாரணி வேந்தர் யாரும்
புகுவது நன்றென் றெண்ணி வாய் புதைத் திருந்தார், நீ தான்
மிகு முறை சொல்லி விட்டாய். விரகிலாய்! புலனு மில்லாய்! (84)

பெண்ணிவள் தூண்ட லெண்ணிப் பசுமையால் பிதற்றுகின்றாய்;
எண்ணிலா துரைக்க லுற்றாய்; இவனை நாம் வென்ற தாலே
நண்ணிடும் பாவ மென்றாய். நாணிலாய்! பொறையு மில்லாய்!
கண்ணிய நிலைமை யோராய்; நீதி நீ காண்ப துண்டோ?

மார்பிலே துணியைத் தாங்கும் வழக்கங் கீழடியார்க்
சீரிய மகளு மல்லள் ; ஐவரைக் கலந்த தேவி. [கில்லை.
யாரடா, பணியாள்! வாராய்; பாண்டவர் மார்பிலேந்தும்
சீரையுங் களைவாய்; தையல் சேலையுங் களைவாய்'
என்றான். (86)

இவ்வுரை கேட்டா ரைவர். பணி மக்க ளேவா முன்னந்
தெவ்வர் கண்டஞ்சு மார்பைத் திறந்தனர், துணியைப்
[போட்டார்.
நவ்வியைப் போன்ற கண்ணாள், ஞானசுந்தரி, பாஞ்சாலி
"எவ்வழி யுய்வோ' மென்றே தியங்கினாள், இணைக்கை
கோத்தாள். (87)

## வேறு.

### திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் பிரார்த்தனை.

துச்சாதனன் எழுந்தே—அன்னை
துகிலினை மன்றிடை யுரிதலுற்றான்.
'அச்சோ தேவர்களே!'—என்
றலறி யவ் விதுரனுந் தரை சாய்ந்தான்.
பிச் சேறியவனைப் போல்—அந்தப்
பேயனுந் துகிலினை யுரிகையிலே,
உட் சோதியிற் கலந்தாள்;—அன்னை
உலகத்தை மறந்தாள், ஒருமை யுற்றாள். (88)

'ஹரி, ஹரி, ஹரி என்றாள்;—கண்ணா!
அபய மபய முனக் கபய மென்றாள்.
கரியினுக் கருள் புரிந்தே—அன்று
கயத் திடை முதலையி னுயிர் மடித்தாய்,
கரிய நன்னிற முடையாய்,—அன்று
காளிங்கன் தலைமிசை நடம் புரிந்தாய்!
பெரிய தொர் பொரு ளாவாய்,—கண்ணா!
பேசரும் பழ மறைப் பொருளாவாய்! (89)

'சக்கர மேந்தி நின்றாய்,—கண்ணா!
சார்ங்க மென்றொரு வில்லைக் கரத் துடையாய்!
அக்ஷரப் பொருளாவாய்,—கண்ணா!
அக்கார அமு துண்ணும் பசுங் குழந்தாய்!
துக்கங்க ளழித் திடுவாய்,—கண்ணா!
தொண்டர் கண்ணீர்களைத் துடைத் திடுவாய்!
தக்கவர் தமைக் காப்பாய்,—அந்தச்
சதுர்முக வேதனைப் படைத்து விட்டாய். (90)

'வானத் துள் வானவாய்;—தீ
மண் நீர் காற்றினில் அவை யாவாய்;
மோனத் துள் வீழ்ந்திருப்பார்—தவ
முனிவர் தம் அகத்தினி லொளிர் தருவாய்!
கானத்துப் பொய்கையிலே—தனிக்
கமல மென் பூமிசை வீற்றிருப்பாள்,
தானத்து ஸ்ரீ தேவி,—அவள்
தாளிணை கைக்கொண்டு மகிழ்ந் திருப்பாய்! (91)

'ஆதியி லாதி யப்பா,—கண்ணா!
அறிவினைக் கடந்த விண்ணகப் பொருளே,
சோதிக்குச் சோதி யப்பா,—என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்!
மா திக்கு வெளியினிலே—நடு
வானத்திற் பறந்திடுங் கருடன் மிசை
சோதிக்குள் ஊர்ந் திடுவாய்,—கண்ணா!
சுடர்ப் பொருளே, பேரடற் பொருளே! (92)

"கம்பத்தி லுள்ளானோ?—அடா!
காட்டுன் றன் கடவுளைத் தூணிடத்தே!
வம்புரை செயுமூடா,"—என்று
மகன் மிசை யுறுமி யத் தூணுதைத்தான்,
செம்பவிர் குழ லுடையான்,—அந்தத்
தீய வல்லிரணிய னுடல் பிளந்தாய்!
நம்பி நின் னடி தொழுதேன்;—என்னை
நா ணழியா திங்கு காத் தருள்வாய். (93)

'வாக்கினுக் கீசனையும்—நின்றன்
வாக்கினி லசைத் திடும் வலிமையினாய்,
ஆக்கினை கரத்துடையாய்,—என்றன்
அன்புடை யெந்தை, என் னருட் கடலே,
நோக்கினிற் கதிருடையாய்,—இங்கு
நூற்றுவர் கொடுமையைத் தவிர்த் தருள்வாய்;
தேக்கு நல் வானமுதே!—இங்கு
சிற்றிடை யாய்ச்சி யில் வெண்ணெ யுண்டாய்! (94)

'வையகங் காத் திடுவாய்!—கண்ணா!
மணி வண்ணா, என்றன் மனச் சுடரே!
ஐய, நின் பத மலரே—சரண்.
ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி!' என்றாள்.
பொய்யர் தந் துயரினைப் போல்,—நல்ல
புண்ணிய வாளர் தம் புகழினைப்போல்,
தையலர் கருணையைப் போல்,—கடல்
சல சலத் தெறிந் திடும் அலைகளைப்போல், (95)

பெண்ணொளி வாழ்த் திடுவார்—அந்தப்
பெரு மக்கள் செல்வத்தின் பெருகுதல் போல்,
கண்ண பிரா னருளால்,—தம்பி
கழற் றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப் பொற் சேலைக ளாம்—அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தன வே!
எண்ணத்தி லடங்கா வே;—அவை
எத்தனை யெத்தனை நிறத்தன வோ! (96)

பொன் னிழை பட் டிழையும்—பல
புதுப் புதுப் புதுப் புதுப் புதுமைக ளாய்,
சென்னியிற் கை குவித்தாள்—அவள்
செவ்விய மேனியைச் சார்ந்து நின்றே,
முன்னிய ஹரி நாமம்—தன்னில்
மூழ்ந பய னுல கறிந் திடவே,
துன்னிய துகிற் கூட்டங்—கண்டு
தொழும்பத் துச்சாதனன் வீழ்ந்துவிட்டான். (97)

தேவர்கள் பூச் சொரிந்தார்,—'ஓம்
ஜெய ஜெய பாரத சக்தி!' யென்றே.
ஆவலொ டெழுந்து நின்று—முன்னை
ஆரிய வீட்டுமன் கை தொழுதான்.
சாவடி மறவ ரெல்லாம் 'ஓம்
சக்தி சக்தி சக்தி' யென்று கரங் குவித்தார்.
காவலி னெறி பிழைத்தாள,—கொடி
கடி யர வுடையவன் தலைகவிழ்ந்தான். (98)

வேறு.

## வீமன் செய்த சபதம்.

வீம னெழுந் துரை செய்வான்:—'இங்கு
விண்ணவ ராணை, பரா சக்தி யாணை;
தாமரைப் பூவினில் வந்தன்—மறை
சாற்றிய தேவன் திருக் கழ லாணை;
மா மகளைக் கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன் பதத் தாணை;
காமனைக் கண் ணழலாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன் னடி மீதில் (99)

'ஆணை யிட் டிஃ துரைசெய் வேன்:—இந்த
ஆண்மை யிலாத் துரியோதனன் றன்னை,
பேணும் பெருங் கன லொத்தாள்—எங்கள்
பெண்டு திரௌபதியைத் தொடை மீதில்

நா ணின்றி "வந் திரு" வென்றான்—இந்த
நாய் மக னாந் துரியோதனன் றன்னை,
மாணற்ற மன்னர் கண் முன்னே,—என்றன்
வன்மை யினால் யுத்த ரங்கத்தின் கண்ணே, (100)

'தொடையைப் பிளந் துயிர் மாய்ப்பேன்—தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையு மாங்கே
கடை பட்ட தோள்களைப் பிய்ப்பேன்;—அங்கு
கள் ளொழு மிரத்தங் குடிப்பேன்.
நடை பெறுங் காண்பி ருலகீர்!—இது
நான் சொல்லும் வார்த்தை யென் றெண்ணிடல்
[வேண்டா!
தடை யற்ற தெய்வத்தின் வார்த்தை,—இது
சாதனை செய்க, பராசக்தி!' என்றான். (101)

## அர்ஜுனன் சபதம்.

பார்த்த னெழுந் துரை செய்வான்:—'இந்தப்
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்.
தீர்த்தன் பெரும் புகழ் விஷ்ணு—எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழ லாணை;
கார்த் தடங் கண்ணி யெந் தேவி—அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினு மாணை,
போர்த் தொழில் விந்தைகள் காண்பாய்,—ஹே!
பூதலமே! அந்தப் போதினில்,' என்றான். (102)

## பாஞ்சாலி சபதம்.

தேவி திரௌபதி சொல்வாள்—'ஓம்,
தேவி பரா சக்தி யாணை யுரைத்தேன்:
பாவி துச்சானன் செந் நீர்,—அந்தப்
பாழ்த் துரியோதனன் ஆக்கை யிரத்தம்,
மேவி யிரண் டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறு நெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான் ;—இது
செய்யு முன்னே முடியே' யேனென் றுரைத்தாள். (103)

ஓ மென் றுரைத்தனர் தேவர் ;—ஓம்
ஓ மென்று சொல்லி யுறு மிற்று வானம்.
பூமி யதிர்ச்சி யுண்டாச்சு.—விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ் சுழல் காற்று.
சாமி தருமன் புவிக்கே—என்று
ஸாக்ஷி யுரைத்தன பூதங்க ளைந்தும்.
நா முங் கதையை முடித்தோம்.—இந்த
நா னில முற்று நல் லின்பத்தில் வாழ்க. (104)

பாஞ்சாலி சபதம் முற்றிற்று.

# பொருள் விளக்கமும் குறிப்புகளும்.

## [ஸ்ரீ. பாரதியார் முதற்பதிப்பில் எழுதியன]

### முதற் பாகம்.

*முதற் பாட்டிலிருந்து 18-ஆம் பாட்டு வரையில் நொண்டிச் சிந்து.*

*லாலல லாலல லா—லல*

*லாலல லாலல லால லலா*

*என்ற மெட்டில் நடப்பது.*

### பாட்டு 1; வரி 7.

*ஆமெனும் பொருளனைத்தாய்—'உள்ள வஸ்துக்கள் யாவு மாகி' என்பது பொருள். 'ஆம்' எனுஞ் சொல் சம்மதியைக் குறிப்பது மட்டுமேயன்றி உண்மையையும் குறிக்கும். வடமொழியில் 'ஓம்' எனுஞ் சொல்லுக்கு 'ஆம்' என்றே பொருள். எவ்விடத்தும் 'இல்லை' யாதலின்றி 'ஆம்' என இருத்தல் பற்றியே, வேதத்தில் பிரம்மத்துக்கு 'ஓம்' எனும் பெயர் கொடுக்கப்பட்டிருப்ப தறிக.*

### பாட்டு 4; வரி 2.

*மிக்கபல் லுரையெனுங் கருமையிட்டாள்—வேதமாகிய கண்ணில் (ஞான நூல்களாகிய கண்ணில்) பலவித 'வியாக்கியானங்கள்' பாஷ்யங்கள்' எனும் கரிய மையைப் பூசியவள். மை கண்ணுக்கு நல்லது, அழகுங்கூட ஆனால், அளவுக்கு மிஞ்சிப் பூசினால் விகாரமாகத் தோன்றுவதுடன் கண்ணே போனாலும் போய்விடும். நமது தேசத்தில் ஒரு வேளை இப்படி நடந்திருக்குமோ? ஸரஸ்வதி அறிவுத் தெய்வமாதலால், அவளுக்கு ஆத்ம ஞானமே (வேதமே) விழி யெனப்பட்டது.*

## பாட்டு 4; வரி 3, 4.

சீதக் கதிர்மதியா (ம்) நுதல் - குளிர்ந்த ஒளியுடைய மதியே ஸரஸ்வதி தேவிக்கு நெற்றியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. 'ஊகம்' 1 என்பது அவளுடைய கூந்தல்.

## பாட்டு 8; வரி 7, 8.

சிந்தையி லறமு முண்டாம்—எனிற்
சேர்ந்திடுங் கலிசெயு மறமு முண்டாம்.

ஒரு சங்கத்தின்—ஒரு ஜாதியின், ஒரு தேசத்தின்—அறிவு மழுங்கா திருக்கும் வரை அதற்கு நாச மேற் படாது. பாரத தேசத்தில் முற் காலத்திலே பாரத ஜாதி முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தி யிருப்பார்களானால், மற்றக் குலத்தவரும் நெறி தவறி யிருக்கமாட்டார்கள்; மஹா பாரதப் போர் நடந்திராது; பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்க மாட்டா. ஒரு தேசத்திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத் தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகளென மேலே குறித்திருப்பதை விளக்கும் பொருட்டு மஹா பாரதப்போர் நடக்கு முன்பாகவே முதற் படப் பாவம் பிராமணருக்குள் புகுந்த தென்பதை நூல் தெரிவிக்கின்றது.

## பாட்டு 11; வரி 1.

ஆரிய வேன்மறவர்—'மறம்' என்பது வீரம்; மறவர், க்ஷத்திரியர்.

பொதுப் படையாக இக் குலத்தாரைக் குறிப்பிடுவதற்குத் தமிழில் அரசர், மன்னர் என்னும் சொற்களை வழங்குவது முண்டு.

1 முதற் பதிப்பிலுள்ள பாடம்: குறிப்புரையைப் பார்க்க.

தாவது, க்ஷத்திரியர்களுடைய தலைவ னொருவனுக்கு மாத்திர
ரதி, அக் குல முழுமைக்குமே தமிழில் மன்னர் முதலிய பெயர்
நண்டு. நமது நாட்டில் இப்போது 'மறவர்' என வழங்கும்
ட்டத்தார் க்ஷத்திரிய வமிசத்தவ ராதல் உணர்க.

பாட்டு 13; வரி 4.

மலர் விழிக் காந்தங்கள்—காந்தத்திற் குரிய கவர்ச்சித்தொழில்
ய்து கொண்டிருக்கும் (மாதர்) விழிகள்.

பாட்டு 14; வரி 5, 6.

பல தானுடைத் தொழில் செயு மாசனமும்—மாசனம், மஹா
னங்கள்; பொதுப்படையான குடிகள். இவர்களே தேசத்திற்கு
ிராவர், இவர்களைச் 'சூத்திரர்' என்பது தற்கால வழக்கு.
த்திரர் என்னும் பெயரை சில மூடர் இழிவான பொருள்பட
ங்குவது பற்றி, நூலில் அப் பெயர் தரவில்லை.

பாட்டு16; வரி 7.

உரியோர்—பந்துக்கள்.

பாட்டு 17; வரி 8.

மறைக்குல மறவர்க ளிருவர்—வேத மோதும் குலத்திலே
றந்தவராயினும் மறவர் தொழிலைக் கைக்கொண்ட துரோணன்
நபன் என்னும் மஹான்கள்.

பாட்டு 19:

இஃது எண் சீர்; ஈற்றது மா.

பாட்டு 20 முதல் பாட்டு 37 முடிய.

நபடியும் நொண்டிச்சிந்து.

பாட்டு 24; வரி 7.

பால் வளர் மன்னவர்—பால் என்பது பகுதி. பல பகுதிகளாக
தக்கப்பட்ட அரசர் (க்ஷத்திரியர்) கூட்டங்கள்.

### பாட்டு 25; வரி 5.

வழவழத் தருமன்—இது உலகவழக்கு; உக்கிரத் தன்மை முதலிய மறவர்குணங்கள் இல்லாத தருமன்.

### பாட்டு 27; வரி 2.

வளமைகள்—இது உலகவழக்கு; பெருமைகளென்பது பொருள்

### பாட்டு 29; வரி 2.

கதலியின் தோல்—கதலியென்பது ஒரு வகை மான்.

### பாட்டு 33; வரி 8.

அரபிய ரொட்டைகள்—வியாசமுனிவர் அரபி தேசமென்று பெயர் குறிப்பிடாவிடினும், அவரது வர்ணனைகளைப் பார்க்குமிடத்துத் தருமபுத்திரன் யாகத்துக்குக் காணிக்கையாக வந்த ஒட்டைகள் அரபி தேசத்தனவென்று தெளிவாகத் தோன்றுகிறது. இன்றும் அரபி தேசத்திலே தான் ஒட்டைகள் அதிகமாக வழங்குதலறிக.

### பாட்டு 34; வரி 3.

நின்றிடும் புகழ்ச் சீனம்—மிகப் புராதனமான காலந்தொட்டுக் கீர்த்தி யழியாது நிற்குஞ் சீன தேசம். இஃது சீன தேசத்திற்கு அடியரசு நாட்டிப் புகழ் மிகுதியடையு முன்னதாகவே எழுதப்பட்டது. சில தேசங்களின் பெருமைகாலத்திலே மாறியும் சிதைந்தும் அழிந்தும் போகிறது. காலச் செய்கையை எதிர்த்துச் சில தேசங்கள் எப்போதும் அழிவற்ற பெருமையுடன் விளங்குகின்றன. அந்தியவற்றுள் சீன தேச மொன்று.

### பாட்டு 38 முதல் 41 முடிய.

எண்சீர்ப் பாட்டு.

## பாட்டு 42 முதல் 48 முடிய.

லாலல லாலல லாலல லாலல
லாலலா லல
லாலல லாலல லாலல லாலல
லாலலா லல

என்று படிக்கவும்.

## பாட்டு 45; வரி 5, 6.

வீரர்தம் போரினரிய நற்சாத்திர வாதங்கள்—ஆயுதங்களுடன் செய்யப்படும் உடற்போரைக் காட்டிலும் பண்டிதர் செய்யும் சாத்திர வாதங்கள் அருமையுடையன என்பது கருத்து; அதாவது, உண்மையுடன் இவ் வாதங்கள் நடைபெறுமிடத்து என்க. உண்மை யறியாதார், உண்மை வேண்டாதார் செய்யும் வாதங்கள் சந்தையில் மீன் விற்கும் ஸ்திரீகளின் போராட்டத்திற்கு நேராகும்.

## பாட்டு 53 முதல் 83 முடிய

நாலடி, எண்சீர்ச் சிந்து.

லாலல லாலல லாலலா—லல
லாலல லாலல லாலலா

என்ற மெட்டு.

சம்பாஷணைகள் முதலியவற்றைத் திறனுடனும் உண்மையுடனும் காட்டுவதற்கு இப்பாட்டின் நடை மிகவும் ஸௌகர்யமாதலைப் பாடிப் பார்த்து உணர்ந்து கொள்க.

## பாட்டு 69, 70

இப்பாட்டுக்களின் கருத்து:—

சகுனி சொல்லுகிறான்: 'நமக்கு ஏற்கெனவே அளவிறந்த செல்வ மிருக்கும்போது, இன்னும் அதிக செல்வத்தை என்

விரும்பவேண்டும்? இருப்பதை வைத்துப் பாதுகாத்தால் போதாதா?" என்று ஒரு வேளை நீ நினைக்கின்றாய் போலும். ஆனால், இவ்வித நினைப்பு நின்போன்ற ஆரிய மன்னர்களுக்குத் தகாது. ஏனென்றால், நித்தம் ஏராளமான செல்வத்தைத் தான முதலிய வற்றால் ஒரு பக்கத்திலே செலவிட்டு, மற்றொரு பக்கத்திலே போர் முதலியவற்றால் மிக்க பொருள் சேகரித்துக்கொண்டிருப்பதாகிய இரட்டைத் தொழில் ஆரிய மன்னர்களால் அனுசரிக்கப்படுவது. இருப்பதை மூடிவைக்க விரும்புவோன் அரசனல்லன், கிழச் செட்டி. எது போலெனில், கங்கை நதி நாள்தோறும் அளவில்லாத ஜலத்தைக் கடலிலே கொண்டு கொட்டுகிறது. என்ன வீண் செலவு' இந்த 'வீண்செலவு' செய்யாவிட்டால் ஜீவனின்றி அழுகிப் போய் விடும். மலை மீதிருந்து அதற்கு ஓயாத ஊற்று வரவு இருக்கின்றது. அதனை உலகிற்கெல்லாம் வழங்குவதுமன்றிக் கடலிலும் கொண்டு பொழிகிறது. ஆம். 'மேலே' செல்வரிடமுள்ள பொருளைக் கவர்ந்து 'கீழே' ஸாமான்ய ஜனங்களுக்குப் பல வகைகளிலே பயன் படுத்தவேண்டும், அப்போதுதான் ராஜா, கங்கை நதியைப் போல், 'ஜீவநதி'யாக இருக்கலாம். கங்கை நதியைப் போல், ஆரியர்களும்,

செல்வம் வளர்தற்கே—தொழில்
ஆயிர நித்தம் புதியன கண்டு
வாரிப் பழம்பொருளெற்றுவர்.

இங்ஙனமில்லாது, சத்தமற்ற நெடுங்காட்டில், மலையடிக் கீழ்ப்பட்ட இருட் குகையில் நீரைவைத்துப் பாசியால் மூடிக்காக்கும் சுனைகளைப்போன்ற ஒழுக்கம் ஆரியர்களால் வெறுத்தற் குறியது.'

## பாட்டு 81, 82, 83.

ஒருவனைப் பரமாத்மாவின் அவதாரம் என்று கூறுவதன் பொருள் இம் மூன்று பாட்டுக்களிலும் விளக்கப்பட்டிருக்கிறது.

### பாட்டு 104; வரி 8.

நீதித் தர்மனுஞ் சூதி லன்புள்ளோன்—தர்மன் சூதாட்டத் தலே பிரியமுடையவ னென்றும், அழைத்தால் எளிதில் இணங்கி விடுவா னென்றும் சகுனி கருதுவதாக முதனூலிலேயே காணப் படுகிறது.

### பாட்டு 109 முதல் 114 வரை.

லாலல லாலல லாலல லாலா
லாலல லாலல லாலல லாலா

என்று பாடுக.

### பாட்டு 124; வரி 7.

கேள்விக்கொரு மிதிலாதிப னொத்தோன்—கேள்வியில் மிதிலே யாசனுகிய ஜனகனுக்கு நிகரானவன்.

இப் பாட்டின் மொத்தக் கருத்து: 'நாங்கள் உமது யாகத் திறகு வந்து திரும்பிச் சென்ற பிறகு, உங்களைப் பாஞ்சாலி ஸஹித மாக அழைத்து அஸ்தினபுரத்தில் மறுவிருந்து கொண்டாட வேண்டியது மரபு. ஆனல், இதுவரை சோதிடர்கள் நல்ல நாளில்லே யென்று சொன்னர்கள். இந்த மாதந் தான் அவர்கள் நல்ல மாத மென்றனர்' என்பது.

### பாட்டு 138; வரி 7, 8.

செப்பிடு வித்தையைப் போலவே—புவிச்
செய்திகள் தோன்றிடு மாயினும்

இவ்வுலகத்துச் செய்திகள்; மேலளவாகப் பார்க்கும்போது, முன்பின் தொடர்பு இல்லாதனவாகித் திடும் திடுமென்று புறப்படு வன போலத் தோன்றுகின்றன ஆனல், ஆழ்ந்து நோக்குமிடத்து, இவை, 'காரண காரியத் தொடர்' என்பதோர் தவிர்க்க முடியாத விதியால் கட்டுண்டிருக்கின்றன.

## பாட்டு 148; வரி 7, 8.

*சீரடியாற் பழவேத முனிவர் போற்றுஞ் செழுஞ் சோதி—* சீர்களும் அடிகளும் இயைந்த மந்திரங்களால் முன்னைய வேத ரிஷிகள் போற்றிய ஞாயிறு.

இங்கு சூரியாஸ்தமன வர்ணனை கூறப்படுகின்றது. இப் பாடல்களின் கருத்து நன்கு விளங்கும் பொருட்டு, நமது "கர்ம யோகிப்" பத்திரிகையிலே இவ் விஷயத்தைப் பற்றி எழுதியுள்ள வியாஸமொன்றை இங்கு தருகின்றோம்.

### ஸூர்யாஸ்தமனம்.

உலகத்தில் எங்கு பார்த்தாலும் நிறைந்து கிடக்கும் லாவண்யங்களைத் தமிழர்கள் கவனிப்பது கிடையாது. சனிக்கிழமை சாயங்காலந் தோறும் குளக்கரைகளிற் போய்க் கருடன் பார்ப்பதற் கென்றால் நம்மவர்கள் கூட்டங் கூட்டமாக ஓடுகிறார்கள். சூரியாஸ்தமன காலத்தில் வானத்திலே தோன்றும் அதிசயங்களைப் பார்க்க ஒருவன் கூடப் போகிறதில்லை. அப்போது வானத்திலே இந்திர ஜால மஹேந்திர ஜாலங்களெல்லாம் நடக்கின்றன. இந்த க்ஷணமிருந்த தோற்றம் அடுத்த க்ஷண மிருப்பதில்லை. உலகத்திலுள்ள திரவிய முழுவதையும் செலவிட்டு வர்ணக் காட்சிகள் ஏற்படுத்திப் பார்ப்போமானாலும், அது ஸூர்யாஸ்தமன காலத்தில் வானத்திலே நாம் பொருட் செலவில்லாமல் பார்க்கக் கூடிய காட்சிகளிலே கோடியிலொரு பங்குகூடக்காணாது. வாண வேடிக்கைகள் பார்க்க ஒரு செல்வன் பதினாயிரக்கணக்கான திரவியம் செலவிடுகிறான், அவனது செல்வத்தினாலன்றோ இந்தக் காட்சி சுலபமாகிறதென்று அதைப் பார்த்து ஆயிரம் ஏழைகள் பெருமூச்செறிகிறார்கள். ஸஹோதரா, ஸூர்யாஸ்தமனத்தின் விநோதங்களைச் சென்று பார். ஸூர்யனை பார்த்தால் கண்ணுக்குக் கெடுதி யென்று குருடர் நம்பிக்கையைப் பொருட்டாக்காதே. ஸூர்யனைப் பார்ப்பது பாவமென்று சொல்லும் மூடர் சாஸ்திரத்தைக் கண்கொண்டு பார்க்காதே.

நமது நாட்டில் வேதகாலத்து ரிஷிகள் பிரகிருதியின் சௌந்தர்யங்களைக் கண்டு மோஹித்துப் பரமானந்த மெய்தியவர்களாய்ப் பல அதிசயமான பாடல்கள் பாடியிருக்கிறார்கள். பிரகிருதியின் அழகைக்கண்டு பரவசமெய்திக் காளிதாசன் முதலிய பெருங்கவிகள் அற்புதக் கவிதைகள் செய்திருக்கின்றனர். இக் காலத்திலே தான் இந்த துரதிர்ஷ்ட நிலைகொண்ட நாட்டில் வானம் பார்த் தறியாத குருடர்களெல்லாரும் கவிகளென்று சொல்லி வெளிவருகிறார்கள்.

ஸூர்யாஸ்தமனத்தின் அற்புத ஸௌந்தர்யங்களை எழுதிப் பிறர் மனதில் படும்படி செய்வது சாத்தியமில்லை. நேரிலே கொண்டு காட்டினாலும் பலருக்கு ஆரம்பத்திலே கண் கூசுவது தான் அர்த்தமாகுமேயல்லாமல், விஷயம் தெரியாது. ஸஹோதரா, நீயாகவே போய்ப் பல தினம் அடுத்துப் பார்க்கவேண்டும். பிறகு தான் உனக்கு அந்த தெய்வக்காட்சி சிறிது சிறிதாக விளங்கும். ஸூர்யோதயத்திலேயும் ஸூர்யாஸ்தமனத்திலும் வானத்தில் நடக்கும் இந்திரஜாலக் காட்சியில் க்ஷணந்தோறும் புதிய புதிய விநோதங்கள் மாத்திரமேயன்றி இன்னொரு விசேஷமுண்டு. நேற்றிருந்தது போல இன்றைக்கிராது. இன்றிருப்பது போல நாளையிராது. தினந்தோறும் வெவ்வேறு வியப்புக்கள், வெவ்வேறு உலகங்கள், வெவ்வேறு மஹிமைகள் வெவ்வேறு கனவுகள், வெவ்வேறு ஆனந்தங்கள், வெவ்வேறு ஆசீர்வசனீயங்கள்.

சில தினங்களின் முன்பு ஓர் மாலைப்பொழுதில் நான் கண்ட அதிசயங்களை ஒருவாறு இங்கு குறிப்பிடுகிறேன். அடிவானத்தில் ஸூர்ய கோளம் தகதகவென்று சுழன்று கொண்டிருந்தது. இருபது கோடி மின்னல்களை எடுத்து ஒரு சக்கரமாக வார்த்துச் சுழற்றுவது போலிருந்தது. ஆரம்பத்திலே தான் கண் கூசும்.

சிறிது நேரம் உற்று நோக்கிக்கொண்டிருந்தால், பிறகு கண்கூச்சம் தீர்ந்துபோய்விடும். இரண்டு வட்டத் தகடுகள் ஒன்றின் மேலொன்று சுழலும். கீழேயிருப்பது சுத்தமான மின் வட்டம். மேலே மரகதவட்டம். பச்சை வர்ணம்! அற்புதமான பசுமை!

பச்சைத்தகடு பின்புறத்திலிருக்கும் மின் தகட்டை முழுதும் மறைத்துக்கொண்டிருக்கும். ஆயினும் இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக்கிரணங்கள் கண்மீது பாயும்.

பார்! ஸூர்யனைச்சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத் தோன்றுகிறது! ஆஹா! என்ன வர்ணங்கள்! எத்தனை வித வடிவங்கள்! எத்தனை யாயிரவிதமான கலப்புகள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சிவிட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத்தீவுகள்!

நீல ஏரிகள்! கரும்பூதங்கள்! எத்தனை வகை நீலம்! எத்தனை விதச் செம்மை! எத்தனை வகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின் மீது மிதக்கும் தங்கத் தோணிகள்! எரிகின்ற தங்க ஜரிகைக் கரை போட்ட கரிய சிகரங்கள்! தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித்திரள். வர்ணக் களஞ்சியம். போ, போ; என்றால் அதை வர்ணிக்கமுடியாது.

## பாட்டு 153; வரி 1, 2.

செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்
அவன் எங்களறிவினைத் தூண்டி நடத்துக.

இது "தத் ஸவிதுர்வரேண்யம்" என்று தொடங்கும் காயத்ரி மந்திரத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு.

## பாட்டு 155; வரி 6, 7,

இத்தனை மக்களு மெங்க ணிருந்தனர் இத் தின மட்டுமென வியப்புற—'இந்நாள் வரை இத்தனை ஜனங்களும் எங்கே யிருந்தனர்' என்று (காண்போர்) வியப்பெய்தும் வண்ணமாக.

பாட்டு 157; வரி 7, 8.

*தோரணங் கொஞ்ச*—தோரணங்கள் அழகுடன் குழைந் திருப்ப.

பாட்டு 158; வரி 3, 4.

*பொன்னரங்கினி லிருந்தான்*—கண்ணில் புலவனை — ராஜ மண்டபத்திலே ... ியிருந்தவன் ஆகிய திருதராஷ்டிரனை.

பாட்டு 158; வரி 7.

*வின்னயம்*—வில்வித்தை, யுத்த சாஸ்திரம்.

பாட்டு 159; வரி 3, 4.

*பணிக் கொடியோன்*—பாம்பைக் கொடிச் சின்னமாகவுடைய துரியோதனன்,

பாட்டு 160; வரி 1.

*இளங்கொடி*—பாஞ்சாலி.

பாட்டு 160; வரி 6.

*உடல் வலித்தொழில்*—கஸ்ரத், சரீர பலத்துக்காகச் செய்யப்படும் அப்பியாசங்கள். இதனை வடமொழியில் 'வ்யாயாமம்' என்பார்.

பாட்டு 161; வரி 5—8.

*வந்ததொர் துன்பத்தினை...*—

துன்பம் நேரிடுங்கால், அதனை அவ்விடத்தே அப்பொழுதே மாய்த்துவிட வழிசெய்வார்கள். அவ்வாறன்றிப் பின் வரப்போகும் துன்பங்களை நினைத்து நெஞ்ச முடைந்து போய் யாதொரு செய்கையும் ஓடாமல் சலிப்படைந் திருத்தல் ஆரியர்களுடைய மரபன்று.

பாட்டு 162; வரி 3.

*தோணலம்*—தோள்வலி, வலிமை.

பாட்டு 164; வரி 5

வென்றிகோள் பெருஞ் சூதர்—துரியோதனன் சபையில் வந்திருந்த சூதர்களின் பெயர், விவிம்சதி, சித்ரஸேனன் புருமித்ரன், ஜயன்; சகுனி இருக்கவே செய்கிறான்.

பாட்டு 155; வரி 7.

ஆலமுற்றிடத் தழுவி—(ஆலம்—மார்பு); மார்புறத்தழுவி.

பாட்டு 166; வரி 1.

அறத்தோன்றல்—'தரும புத்திரனே' என்னும் விளி.

பாட்டு 168; வரி 1, 2.

பழுக கவற்றை யொர் சாத்திரமெனப் பயின்றோன்—பிறர் ஸங்கீதம், கணிதம், வியாகரணம், யுத்த தந்திரம் முதலிய சாஸ்திரங்கள் படிப்பதுபோலச் சூதாட்டத்தை ஒரு சாஸ்திரமாகப் பயிற்சி செய்து எதிர்க்க முடியாத நிபுணத் தன்மை வாய்ந்திருந்த சகுனி.

பாட்டு 168; வரி 7, 8.

செலுஞ் செலவினுக் கழிகலை—செலவுக்கு நெஞ்சழிய மாட்டாய். (விளையாட்டில் கொஞ்சம் திரவியம்) செலவிடுவதற்கு அஞ்ச மாட்டாய்.

பாட்டு 169; வரி 2.

பிசுனன்—உலோபி.

பாட்டு 171; வரி 1.

தோல் விலைக்குப் பசுவினைக் கொல்லும்—தோல்விலையாகக் கிடைக்கும் பொருளை விரும்பிப் பசுவைக் கொல்லுதல் போலப் பொருளாசையால் யுதிஷ்டிரனைக் கெடுத்துத் தரும நாசஞ் செய்யத் துணிந்தவனாகிய (சகுனி).

### பாட்டு 171; வரி 3.

*நூல்விலக்கிய செய்கைக ளஞ்சும் கோனபின்னனை—தருமராஜன்; அறநூல் விதிகளைத் தவறாதவன்.*

### பாட்டு 171; வரி 8.

*கவறை நஞ்செனக் கூறினர்—சூதாட்டத்தை விஷமாகக் கருத வேண்டுமென்றார்கள். 'கவற்றை' என்றிருத்தல் நேர்.*

### பாட்டு 175; வரி 6, 7.

*நம்மவர் காத்திடும் பழவழக்கை மாத்திர மறந்து விட்டாய்—க்ஷத்திரியர்களுக்குள்ளே யிருக்கும் புராதன சம்பிரதாயமொன்றை மாத்திரம் மறந்துவிட்டா யென்று சகுனி சொல்லுகிறான், வழக்கு—வழக்கம், பூர்வாசாரம் 'மாமூல்'. அந்தப் பூர்வாசாரம், இன்னதென்பது பின்னே எட்டாம் வரியிற் கூறப்படுகிறது. 'மன்னர் வல்லினுக் கழைத்திடில் மறுப்பதுண்டோ?' என, ஒரு அரசனை மற்றொருவன் 'என்னுடன் சூதாட வா' என வலிந் தழைக்கும் போது மாட்டேனென்று சொல்ல லாகாதென்பது கருத்து. க்ஷத்திரியன் நஷ்டங்களுக்குத் துணிந்திருக்க வேண்டுமென்ற நல்ல கொள்கையால் விளைந்த கெட்ட வழக்கங்களில் இதுவொன்று. அறிவுடையவர்கள் கூடப் 'பூர்வாசார' மென்ற காரணத்தால் தீய வழக்கங்களை அனுசரித்தல் பாரத தேசத்திற் கேற்பட்ட சாபம் இப்போது தான் நீங்கி வருகிறது.*

### பாட்டு 175; வரி 8.

*வல்—சூது.*

### பாட்டு 177; வரி 5.

*வல்லமர்—சூதுப்போர்.*

### பாட்டு 178, 179, 180, 181.

இப் பாட்டுக்களிலே இப் 'பூர்வாசாரங்களில்' ஆராய்ச்சியில்லாது பக்தி செலுத்துவோரின் மடமை காட்டப்படுகின்றது. பழமையிலே பெரும் பகுதி உயர்வு சான்றது தான். அதிலும், பாரத தேசத்தினராகிய நம்மவரின் நடைகள் அறிவும் அறனும் பொதிந்தனவாகும். ஆயினும் இழிந்த அமானுஷீக நடைகள் சில இவற்றோடு கலந்துள்ளன.

'எனது தந்தை க்ஷயரோகத்தால் இறந்து போனான். எனக்கும் க்ஷயரோகம் வந்திருக்கிறது. எங்கள் பாட்டனுக்கும் இந்த ரோகமுண்டு. ஆதலால் இந்த ரோகம் தீர்ப்பதற்கு நான் மருந்து தின்னமாட்டேன்.' என்று ஒரு மனிதன் சொல்லுவானானால் அவன் எவ்வளவு பெரிய மூடன்? லோக க்ஷேமத்துக்கும் லோகாபிவிருத்திக்கும் இந்த 'மாமூல்' பக்தி எத்தனை பெரிய இடையூறு என்பதை நம்மவர் இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை.

## பாட்டு 182; வரி 4—8.

மேலை நாஞ்செயுங் கர்ம மல்லதே...—

நமது செய்கையில் விளைவுகளுக்கு மாத்திரமேயன்றி நம்மைச் சேர்ந்தவர்களின் கர்மப் பயன்களுக்கும் நாம் ஆளாகிறோமென்பதை இச் செய்யுள் விளக்குகின்றது

## பாட்டு 183 முதல் 195 முடிய

லால லாலலா லா லாலா
லால லாலலா லா

என்ற மெட்டுள்ள சிந்துகள். தெருவில் ஊசிகளும் பாசிமணிகளும் விற்பதோடு பிச்சை யெடுக்கவும் செய்கிற பெண்கள் 'மாயக்காரனம்மா—கிருஷ்ணன்—மகுடிக்காரனம்மா' என்று பாடும் நடை. சூதாட்ட வருணனைக்கும் அதிலேற்படும் பாபார்த்த வார்த்தைகளையும் செய்கைகளையும் விளக்குதற்கும் இந் நடை மிகவும பொருத்திய தென்பது எளிதிலே காணப்படும்.

பாட்டு 185, வரி 8.

*பின் னடக்குக—மேலே விளையாட்டு நடக்குக.*

பாட்டு 186; வரி 1—4.

*ஒருவ னுடைப் பணயம்...—தருமன் சொல்வது.*

பாட்டு 186; வரி 5—8.

*வருமமில்லையையா......—துரியோதனன் சொல்வது.*

பாட்டு 187; வரி 1—3.

*பொழுது போக்குதற்கே...—இஃது கர்ணன் வசனம்.*

*அங்கர்கோன்—கர்ணன்.*

பாட்டு 187; வரி 5—8.

*பழுதிருப்ப தெல்லாம்—தருமன் வசனம்.*

பாட்டு 189; வரி 6.

*பாரமான பொற்றேர்—இங்கு, தேர் பணயமாக வைக்கப் பட்டது என்பது கொள்ளக் கிடக்கின்றது.*

பாட்டு 191; வரி 2.

*அடிமை செய்து வாழ்வோர்—மாதர்கள் பணயமாக வைக்கப் பட்டன வென்பது தொக்கு நிற்கின்றது.*

பாட்டு 196; வரி 6.

*பழி மக்காள்—பழிப் பிள்ளைகளே, பழிக் கிடமாகிய பிள்ளைகளே.*

பாட்டு 199, வரி 1.

*கெலித்திடல்—வெல்தலுல். இது திசைச்சொல், கிராமியம்.*

### பாட்டு 201; வரி 8.

*கேட்கும் காது மிழந்து விட்டாயோ?—கோப மிகுதியால் தன்னை மறந்த அரசனுக்குக் கண் ணில்லாமையைக் குறிக்க நேரிட்டது.*

### பாட்டு 203; வரி 6.

*மந்திரம்—சூழ்ச்சி.*

### பாட்டு 203; வரி 8.

*வெற்பிடைப் போக்குதி—காந்தாரத்து மலைநாட்டிலிருந்து வந்தவனுதலால், சகுனியை மீட்டும் அவனது மலை நாட்டுக்கு அனுப்பி விடுக என்று சொல்லியது.*



# குறிப்புரை

பாஞ்சாலி சபதம் முதற்பாகம் 1912–ஆம் வருஷத்தில் புதுச்சேரி வித்யாவர்த்தினி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது. அதிலுள்ள பாடபேதங்கள் மு என்று குறிக்கப்பட்டுள்ளன.

தே: என்பது ஸ்ரீ. தேசிக விநாயகம் பிள்ளையவர்களின் குறிப்பு.

## முதற் பாகம்.

பாட்டு 1, வரி 3. மு: மாய்ப்பதுவாய்ப்—பவர்.

பாட்டு. 4. தே: 'வேதத் திருவிழியாள்' என்று தொடங்கும் இப் பாடல் கையெழுத்துப் பிரதியில் அடிக்கப்பட்டுள்ளது வரி 3. மு: 'சீதக் கதிர் மதியா—நுதல்'. வரி 4: மு: சேர்ந்த தோருகவண் குழலுடையாள்.

பாட்டு 6, வரி 2. மு: வாக்குத வுவளைத் திட மிருந்தேன்.

பாட்டு 8, வரி 7: மு: 'சிந்தையிலறமு முண்டாம்'

பாட்டு 10, வரி 8. மு: நொறுக்க வல்லோர்.

பாட்டு 11, வரி 6. மு: யானைகளைத் திரிவோர்.

பாட்டு 20, வரி 5. மு: வில்லுடையோன்—ஒருக்.

பாட்டு 21, வரி 8. மு: முதலென மிலைத்தனவே.

பாட்டு 26, வரி 4. மு: செய் தப்பத முழக்கியதும்.

பாட்டு 30, வரி 5. மு: தலத்திலுளார்.

பாட்டு 34, வரி 7. 'பொருள்' என்ற சொல் ஊகித்துக்கொண்டது.

பாட்டு 43, வரி 12. மு: வெய்திடச் செய்தியால்.

பாட்டு 61, வரி 5. மு: கொண்ட குடிவகை.

பாட்டு 64, வரி 1. மு: புத்திரனல்லவோ ?

பாட்டு 72, வரி 3. மு: கொண்டவரல்லவோ ?

பாட்டு 78, வரி 8. மு: கொடுத்தனரல்லவோ ?

பாட்டு 122, வரி 7. மு: சிறந்திட நம்மைச்,

பாட்டு 133, வரி 4. மு: மழித்திட.

பாட்டு 153, வரி 2. மு: எங்களறிவு விளக்க முறச் செய்திடவே—என.

பாட்டு 163, வரி 3. மு: மந்திரி வகையும்.

பாட்டு 164, வரி 8. 'பருமித்திரன்' என்பது 'புருமித்திரன்' என்று இருத்தல் வேண்டுமென்று ஸ்ரீ பாரதியார் குறிப்பினின்றும் தெரியவருகிறது.

பாட்டு 169, வரி 1. மு: மண்டிலத்தார்.

பாட்டு 171, வரி 8. மு: கவறை நஞ்செனை.

பாட்டு 172, வரி 6. தே: போலொன்றுஞ் சொல்வார்.

பாட்டு 196, வரி 8. மு: தூவென்றெள்ளி. வரி 6. ஸ்ரீ. பாரதியார் குறிப்பினின்றும 'வான் பொறுத்திடுமோ ? பழி மக்காள்!' என்பது சரியான பாடம் என்றும் அச்சிட்டிருப்பது பிழை என்றும் தெளிவாகிறது.

## இரண்டாம் பாகம்.

பாட்டு 53, வரி 7. தே: 'என்றன்' என்று ஒரு தனிச்சொல் ஊகித்துக்கொள்ளலாம்.

பாட்டு 55, வரி 6. தே: 'என்' என்பது முதற்பதிப்பிலில்லை; ஊகித்துக்கொண்ட பாடம்.

பாட்டு 60, வரி 6. தே: ஈரற்கறியும்.

பாட்டு 97, வரி 6. தே: மூளு நற்.

தமிழ்நாடு பிரஸ், 4, கீழபட்டமார் தெரு, மதுரை.